# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 24 சனிக்கிழமை (06.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 072


# நல்லிணக்கத் தீர்வுக்கான வாய்ப்பை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளுங்கள்!

## ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் அமெ. அதிபர் ஒபாமா வற்புறுத்து



கொழும்பு, பெப்ரவரி 06

**தேசிய நல்லிணக்கம் நிலவும் நாடொன்றில் வாழ்வது குறித்து இலங்கை மக்கள் கொண்டுள்ள அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தலைமைத்துவத்தைப் பயன்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.**



பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து இலங்கை விடுபட்டுள்ளதால் இதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை மஹிந்த ராஜபக்ஷ இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 62ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எமது இரு நாட்டு மக்களிடையேயான உறவுகள் 1789ஆம் ஆண்டில் ஆரம்பமாகின.

நியூ இங்கிலாந்து பகுதியிலிருந்து வர்த்

(24ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, பெப். 06

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 87 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை நேற்றுக் காலை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா முன்மொழிந்து உரையாற்றினார். நீண்ட விவாதத்துக்குப் பின்னர் மாலை அதன் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஆதரவாக 102 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்துள்ள கட்சிகள் ஆதரவாக வாக்களித்த அதேவேளை, தமிழ்த்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாடுகளின் எந்தவித விசாரணைக்கும் நான் ஒருபோதும் அனுமதி அளிக்கமாட்டேன்

### அவை அவசியமில்லை என்கிறார் கோத்தபாய



கொழும்பு, பெப். 06

சர்வதேசம் இங்கு எந்த விசாரணையை நடத்தக் கேட்டாலும் நான் ஒரு போதும் அதற்கு அனுமதிக்கப் போவதில்லை. நான் அதனை முற்றாக எதிர்க்கிறேன். ஏனெனில் அவ்வாறான விசாரணைக்கு இங்கு எந்த அவசியமும் இல்லை.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸி. தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

நேர்காணலின் போது அவர் கூறியவை வருமாறு -

நாங்கள் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. சமாதானத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது. செய்ய வேண்டியவை இவைதான். இதைவிடுத்து பல்வேறு உள்நோக்கங்களுடன் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்காவோ அல்லது வேறு எந்தவொரு நாடோ கேட்டாலும் அதற்கு நான் ஒரு போதும் (24ஆம் பக்கம் பார்க்க)

மகாத்மா காந்தி, ரவீந்திரநாத்தாகூர், சுவாமி விவேகானந்தர் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் உரையாற்றிய சிறப்புப் பெற்ற யாழ்.இந்துக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபம் இடித்து வீழ்த்தப்படுமா?

**விரிவான விசேட கட்டுரை நாளை ஞாயிறு உதயனில்....**

### பொதுத் தேர்தல் தொடர்பாக முடிவெடுப்பதற்காக

## இன்று கூடும் பிள்ளையானின் கட்சி புதனன்று ஜனாதிபதியுடன் பேசும்

கொழும்பு, பெப். 06

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையானின்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உயர்மட்டக் குழு இன்று கூடி முக்கிய முடிவுகளை எடுக்கவிருக்கின்றது. அதன் பின்னர் அக்கட்சி எதிர்வரும் பத்தாம் திகதி (எதிர்வரும் புதன்கிழமை) ஜனாதிபதியோடு முக்கிய சந்திப்பு ஒன்றில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி கைக்கொள்ள வேண்டிய உக்தி தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் இலக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகக் கட்சியின் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அரசு தனது தோழமைக் கட்சிகளுடன் பேச்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா ரஷ்யப் பாணியில் இங்கு சதிப் புரட்சி செய்வதற்குத் திட்டமிட்டார்

### அரச தரப்பினரின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, பெப். 06

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ரஷ்ய பாணியிலான சதிப் புரட்சியொன்றுக்குத் திட்டமிட்டார் என அரசுத் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி

(24ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி அகற்றும் தாமதத்தாலேயே வன்னியில் மீள்குடியேற்றம் பிந்துகிறது

### ஜனவரி 31 காலக்கெடு தாண்டியமைக்குப் பிரதமர் விளக்கம்

கொழும்பு,பெப்.06

இந்த வருடம் ஜன வரி 31 ஆம் திகதிக்குள் வன்னி அகதிகளை முற்றாக மீளக் குடியமர்த்துவதற்கு அரசு திட்டமிட்டிருந்தபோதிலும், கண்ணி வெடி அகற்றலில் ஏற்பட்ட தாமதத்தால் அத்திட்டத்தை முற்றாக நிறைவேற்றி முடிக்க முடியவில்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இருப்பினும், அத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றி முடிக்க அரசு தீவிரம் காட்டி வருகிறது என்றும் பிரதமர் சொன்னார்.



அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் இந்த நாட்டின், சமூகத்தின் அனைத்துப் பக்கங்களையும் தாக்கியது. அப்படிப்பட்ட பயங்கரவாதத்தை இன்று எம்மால் முற்றாக ஒழித்துக்கட்ட முடிந்துள்ளது.

இந்தப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதால் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்கள் சுதந்திரமாக

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-காங்கேசன் வீதி விஸ்தரிப்பால் 27 இந்து ஆலயங்கள் அழிக்கப்படும் நிலை

### மாற்று நடவடிக்கை எடுக்குமாறு இந்து மாமன்றம் வலியுறுத்து

கொழும்பு, பெப்.06

யாழ்.காங்கேசன்துறை வீதியை விஸ்தரிக்கும் போது 27இந்து ஆலயங்களும், பழம்பெரும் கலாசாரச் சின்னங்களும் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் யாழ்.இந்து மக்களும் இந்து நிறுவனங்களைச் சேர்ந்தோரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள நிபுணர்களுடன் ஆராய்ந்து மாற்று ஏற்பாடு செய்யவேண்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டமட்ட வீட்டுத் தோட்டப் போட்டி; வெற்றி பெற்றோருக்கு செயலகத்தில் பரிசளிப்பு

## செவ்வாயன்று அரச அதிபர் தலைமையில் நடைபெறும்

யாழ்ப்பாணம்.பெப்.06

''பயிர்செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'' என்ற தொனிப்பொருளிலான மாவட்டமட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் வெற்றி பெற்றோரின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம், கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சும் இணைந்து இந்தப் போட்டியை நடத்தின.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு செயலக கூட்ட மண்டபத்தில் மாவட்ட விவசாயக் குழு முன்னிலையில் யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வெற்றி பெற்றோர் விவரம் பிரதேச செயலக பிரிவு ரீதியாக வருமாறு:

**தனியார் வீட்டுத் தோட்டப் போட்டி**

தெல்லிப்பழை-வத்சலா துரைசிங்கம்-தோரை அம்மன் கோவிலடி, நல்லூர்-எஸ்.விக்கினேஸ்வரி-46,அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, காரைநகர்- சு.சண்முகராசா-தங்கோடை, கரைநகர்.

**பாடசாலை வீட்டுத் தோட்டப் போட்டி**

யாழ்ப்பாணம்-சென்.ஜோன்ஸ் கல்லூரி, கரவெட்டி-விக்கினேஸ்வராக் கல்லூரி, நல்லூர்-கோண்டாவில் இராம கிருஷ்ணா மகாவித்தியாலயம்.

**பாடசாலை மாணவர் வீட்டுத் தோட்டப் போட்டி**

கரவெட்டி-பா.வசீகரன்- கரணவாய் கிழக்கு, கரவெட்டி, தெல்லிப்பழை-இ.திலக்சன்-அளவெட்டி மேற்கு, அளவெட்டி, வேலணை- ம.சுஜிதன்-8ஆம் வட்டாரம், நயினாதீவு.

**அலுவலக வீட்டுத் தோட்டப் போட்டி**

கோப்பாய்-விதாத வளநிலையம்-மானிப்பாய்- கைதடி வீதி, கோப்பாய், சங்கானை-கிராம அலுவலர் அலுவலகம்-வட்டுக்கோட்டை கிழக்கு, தெல்லிப்பழை-பிரதேச செயலகம்- தெல்லிப்பழை.

**அலுவலரின் உத்தியோக/ பிரத்தியேக வதிவிட வீட்டுத் தோட்டப் போட்டி**

தெல்லிப்பழை-கு.சிவலிங்கம்-மாரீசன் கூடல், இளவாலை, வேலணை- ஜெ.சுபாஜினி- 6ஆம் வட்டாரம், நயினாதீவு, சாவகச்சேரி- ச.கிரிதரன்-சந்திரபுரம், மட்டுவில். (ஒ-1)

### கிளிநொச்சி, துணுக்காயில் வரவைப் பதிவு செய்த

# இணைப்பு ஆசிரியர்களுக்கு சம்பளம்; இன்று யாழ்ப்பாணம், வவுனியாவில்

அச்சுவேலி, பெப்.06

கிளிநொச்சி-துணுக்காய் கல்வி வலயங்களில் இந்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் தமது வருகையைப் பதிவு செய்த ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் வைத்து ஜனவரி மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இணைப்பில் உள்ள ஆசிரியர்கள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையிலும், வவுனியா மாவட்டத்தில் இணைப்பில் உள்ள ஆசிரியர்கள் வவுனியா மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனையிலும் தமது சம்பளக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு அறிவித்துள்ளார் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா.

வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் கடமைபுரிந்து தமது சொந்தக் கடமை நிலையங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களை தமது நிரந்தர கல்வி வலயங்களில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி அறிவித்தலுக்கு அமைய இந்த மாதம் முதலாம், 2ஆம் திகதிகளில் தமது வருகையை துணுக்காய் மற்றும் கிளிநொச்சி வலயங்களில் பதிவு செய்தவர்களுக்கே வவுனியா மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனையிலும் யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையிலும் வைத்து இன்று சம்பளம் வழங்கப்படவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் வரவைப் பதிவு செய்த 88ஆசிரியர்களுக்கும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் வரவைப் பதிவு செய்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 166ஆசிரியர்களுக்கும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 137ஆசிரியர்களுக்கும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் வைத்துச் சம்பளம் வழங்கப்படவுள்ளது. என்று மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-11)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிய ஆசிரிய மாணவருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்.பெப்.06

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் 2010ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய மாணவ ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். புதிய மாணவர்களுக்கான அருளுரையினை யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலயப் பிரமதகுரு சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள், யாழ்.ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம், ஒஸ்மானியக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ. முபாரக் ஆகியோர் வழங்குவர். வாழ்த்துரையினை வைத்தியகலாநிதி லயன்.வை. தியாகராஜா, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வரட்ணம் ஆகியோரும், ஆசியுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் வழங்கவுள்ளனர். கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (ஒ)

# யாழ்.செயலகத்தில் 11,12 ஆம் திகதிகளில் வரவேற்பாளர் நியமன நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்.பெப்.06

வரவேற்பாளர் நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த டிசெம்பர் 18ஆம் திகதி 9.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 11ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கும்,

அன்றைய தினம் பி.ப 1.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 11ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கும்,

கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கும்,

அன்று பி.ப 1.30 மணிக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு 12ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சை கடந்த டிசெம்பர் மாதம் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடை பெறவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-1)

### சரசாலை-பருத்தித்துறை வீதியில்

# மதகு திருத்த வேலை முடிவுறாததால் போக்குவரத்தில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்.பெப்.06

சரசாலை-பருத்தித்துறை வீதியில் கடந்த 2006ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதகு திருத்த வேலை இன்னும் பூர்த்தியாகாததால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மதகு அமைப்பதற்காக அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதை மோசமாகச் சேதடைந்துள்ளதால் வாகனங்களில் செல்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கனகரக வாகனங்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே தற்காலிக பாலத்தில் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பாதையைச் செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என்று வாகனச் சாரதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

சாவகச்சேரி-பருத்தித்துறை போக்குவரத்திற்கு இந்த வீதி பிரதானமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

# மகஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 2204ஆம் இலக்க நேற்று நடந்த சீட்டிழுப்பில் 'S' என்ற ஆங்கில எழுத்தும் 5/3/9/8/4/9 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 5/3/9/8/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2 பேருக்கு முதலாம் பரிசாகத் தலா 20 இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/9/8/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 17 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/8/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 136 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,381 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/9 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,407 பேருக்கு ஐந்தாம் பரிசாகத்தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட 133,114 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான வடிவமைப்பில் 5/3/9/8/4 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 16 பேருக்கு ஏழாம் பரிசாக தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/3/9/8 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 136 பேருக்கு எட்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/3/9 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,342 பேருக்கு ஒன்பதாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5/3 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,256 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'S' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 53,354 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (6)

# வீரசிங்கம் ம.வி.யின் மரதன் ஓட்டம்

சாவகச்சேரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் ஓர் அங்கமாக 13கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டிகள் நேற்றுக் காலை நடைபெற்றன.

மரதன் ஓட்டம் மீசாலை- புத்தூர் சந்தியில் ஆரம்பித்து, கொடிகாமம், வரணி, வேம்பிராய் ஊடாக வித்தியாலய முன்றலில் முடிவுற்றது.

இந்தப் போட்டியில் 70 மாணவர்கள் பங்குபற்றினர் என்று அதிபர் வே.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

போட்டியில் மு.கலாவினோதன் முதலிடத்தையும், அ.சதீஸ், ம.தினேஸ் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றனர்.

### யாழ். போதனா வைத்தியசாலையில்

# இதய சிகிச்சை ஆய்வுகூடக் கட்டடத்தை கனேடியத் தூதுவர் திங்களன்று திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம்.பெப்.06

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இதய நோய் சிகிச்சைக்கான ஆய்வுகூடக் கட்டடத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கான கனேடியத் தூதர் புறூஸ்லெவி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் 3.93 மில்லியன் ரூபாவையும், சர்வதேச வைத்திய சுகாதார நிறுவனம் 2.44 மில்லியன் ரூபாவையும் இந்த ஆய்வு கூட நிலையத்தை அமைக்க நிதி உதவிவழங்கியுள்ளன.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-1)


**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம், 4ஆம் பாதம், 5 அடி 5'' உயரம் உள்ள சைவபோசன Chartered Accountant மணமகனுக்கு, இந்து உயர்சைவ படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு: க.மகேஸ்வரி 199, கோவில் வீதி, நல்லூர். [illegible]


# மரண அறிவித்தல்

## கணபதி சின்னராசா

வளலாயைப் பிறப்பிடமாகவும், அரசடி முதலாம் ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னராசா நேற்று (05.02.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், குலநாயகம் பவளத்தின் அன்புத் தந்தையும், குலநாயகத்தின் அன்பு மாமனாரும், குவேஸ்கரனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2010) சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குவேஸ்கரன்
(வெல்டிங் வேக் சொப்,
ஆனைப்பந்தி).

அரசடி முதலாம் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/564652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தீர்வு எனும் கானல் நீர்!

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் 'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது'; 'பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற கதை ஆரம்பமாகிவிட்டது.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் ஒன்றான தமிழர் இனம், இச்சர்ச்சைக்குத் தீர்வாக சில விடயங்களை அடிப்படைகளாக எதிர்பார்க்கின்றது. தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை உள்வாங்கி உணர்ந்து கொள்வதின் ஊடாக மட்டுமே அவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

தமது இனத்தின் தனித்துவமான பண்பியல் கோலங்களை - கலாசார விழுமியங்களை - மொழியியல் சிறப்புகளை - பாரம்பரிய தாயகப் பிரதேசங்களை - பேணித் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் அரசியல் கட்டமைப்பு ஒன்று தங்களுக்குத் தேவை என்பதே அவர்களின் மாற்ற முடியாத வேணவா.

எந்தத் தீர்வும் இந்த வரைய்றைக்குள் அமைந்து, இவ்விடயத்தில் தமது இனத்தின் அடிப்படை எதிர்பார்ப்பை நிறைவு செய்தால் மட்டுமே அது ஏற்கத்தக்கதாக இருக்கும் என்பது தமிழர்களின் ஒரே நிலைப்பாடு.

ஆனால் தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுத வழியில் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அந்த இயக்கத்தோடு சேர்ந்து செயற்பட்ட தமிழ்த் தரப்புகளையும் இராணுவ ரீதியில் அடக்கி, ஒடுக்கி, அழிப்பதில் வெற்றி கண்டு விட்டமையால், தமிழர்களின் அபிலாஷைகளும், வேணவாவும், எதிர்பார்ப்பு நம்பிக்கையும் தகர்த்தழிக்கப்பட்டுவிட்டன, இனி நாம் பிச்சையாகப் போடுவதை மட்டுமே தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தென்னிலங்கை கருதிக்கொள்ளக் கூடாது.

எனினும், தென்னிலங்கை அரசியல் தலைமை அப்படித்தான் கருதுவது போல விடயங்கள் அரங்கேறுவதுதான் துரதிஷ்டவசமானதாகும்.

விடுதலைப் புலிகளை வெற்றிகரமாகத் தோற்கடித்தாயிற்று என்று பிரகடனப்படுத்தி, இலங்கை அரசு மார்தட்டிய பின்னர் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில், தென்னிலங்கையில் அதி உச்ச பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நாட்டின் பெரும் அரசியல் சக்தியாக - ஏக சக்தியாக - விஸ்வரூபம் எடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இத்தகைய பெரும் ஜனநாயகப் பலத்தோடு ஆட்சிக்கு மீண்டும் வரும் வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - அருகதையை - பெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதைப் பலமாக வைத்துக்கொண்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை - எத்தனங்களை - தாராள மனப்பான்மையோடும், சிறுபான்மையினரை அரவணைக்கும் தாராண்மைச் சிறப்போடும் முன்னெடுப்பார் என்று எதிர்பார்த்தால், அவரோ அதற்கு நேர்மாறான போக்கில் தாம் பயணிக்க விரும்புகின்றார் என்பதையே கோடிகாட்ட எத்தனிக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்த வரையில் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றி, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி என்ற இரண்டுமே பெரும் இமாலய சாதனைகளாகும். இத்தகைய பெரு வெற்றிகளின் மிதப்பில் நின்றுகொண்டு அவர் ஆற்றக்கூடிய சுதந்திர தின உரையில், நாட்டைத் தீராத பிணக்குக்குள் ஆழ்த்தி, ஓயாது பேரழிவுகளைத் தந்து நிற்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நியாயமான வழிமுறைகளை அவர் கோடிகாட்டுவார் என எதிர்பார்த்திருந்த தமிழருக்கு ஏமாற்றம் மட்டுமல்ல, அதையும் தாண்டி அதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை இங்கு பதிவு செய்தேயாக வேண்டும்.

தமது ஒருமித்த தாயகத்தை தென்னிலங்கை ஆட்சிப் பீடம் நீதித்துறையோடு சேர்ந்து திட்டமிட்ட காய்நகர்த்தல் மூலம் வடக்காகவும், கிழக்காகவும் துண்டாடி நிற்கின்றது என்ற பெரு விசனத்தில் ஏற்கனவே மூழ்கிக் கிடக்கின்றது தமிழினம்.

தமது பாரம்பரிய நிலப் பிரதேசத்தை ஐக்கியமாக எப்படி மீளப் பெறுவது என்று தெரியாமல் தமிழர்கள் துடியாய்த் துடித்து, வேதனையில் மூழ்கி, அவலப்பட்டுக்கொண்டிருக்க, அந்த மாகாணங்களைக் கூட மேலும் கிராமங்கள்வரை துண்டு போடுவது குறித்து ஜனாதிபதி சிந்திக்க முற்பட்டிருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கு நியாயம் செய்யும் நோக்கோடு முன்வைக்கப்படவிருக்கும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் அலகு, வடக்கு, கிழக்கு எனத் தமிழர் தாயகம் துண்டுபட்டு கிடக்கும் விதத்தில் வழங்கப்படுமா, அல்லது ஒட்டுமொத்த ஐக்கிய தமிழர் தாயகத்துக்கும் வழங்கப்படுமா என்றெல்லாம் தமிழ்த் தலைவர் கள் சிந்தித்துக்கொண்டிருக்க, இப்போது புதுக்கதை புருடா விட்டிருக்கின்றார் ஜனாதிபதி. அதுவும், நாட்டின் சுதந்திர தினச் செய்தியில். சர்வதேசத் தரப்புகளின் இராஜதந்திரிகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்த விடயத்தை அவர் அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்துக்கு அதிகாரப் பரவலாக்கலா, அல்லது இரு தனித்தனி மாகாணங்களுக்குத் தனித்தனி அதிகாரப் பரவலாக்கலா என்பது குறித்து சர்ச்சை இங்கு நடந்துகொண்டிருக்க, அதையெல்லாம் புறம் ஒதுக்கிவிட்டு மாவட்டங்கள், நகரங்கள் எல்லாம் தாண்டி, கிராமங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதைப் பற்றிப் பேசுகின்றார் ஜனாதிபதி.

இனப்பிரச்சினைக்கு நியாயத் தீர்வு காண்பதற்கான நீதியான பாதையில் அரசுத் தலைமை பயணிக்கத் தயாரில்லை தான் விரும்பும், உப்புச்சப்பற்ற அரைகுறைத் திட்டம் ஒன்றைத் தீர்வு என்ற பெயரில், ஏற்கனவே நொந்து நொடித்துப் பலவீனப்பட்டுப் போயிருக்கும் தமிழினத்தின் மீது பலவந்தமாகத் திணித்து, தமிழினத்தின் நியாயமான எதிர்பார்ப்பை நீர்த்துப் போய்விட வைப்பதிலேயே அரசுத் தலைமை குறியாய் இருக்கின்றது. இதனையே ஜனாதிபதியின் தற்போதைய கருத்து மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

# தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்த அடுத்த மாதம் திறந்து வைக்கிறார்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கொரிய நாட்டின் உதவியுடன் அமைக்கப்படும் புதிய கட்டடம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார் என கல்லூரியின் அதிபர் என். யோகராஜன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொரிய நாட்டின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

கொரிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள நவீன இயந்திரங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த இயந்திரங்களைப் பொருத்துவதற்கென கொரிய நாட்டின் துறைசார் பேராசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும் ஒரு பொறியியலாளர் குழு கொரியாவில் இருந்து அடுத்த வாரமளவில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு வருகை தர வுள்ளது.

நவீன ரக இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் பெரும்பாலும் இம்மாத இறுதிக்குள் நிறைவடையும்.இப்பணிகள் நிறைவு பெற்றதும் மார்ச் மாதம் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார் - என்றார். (50-9-14)

## யாழ்.- தாவடியூடாக மானிப்பாய் வரையான 771 பாதை இலக்க பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், பெப்.6

அரசாங்க உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணத்திலிருந்து தாவடி ஊடாக மானிப்பாய், மானிப்பாயிலிருந்து தாவடி ஊடாக கச்சேரி வரையான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பொது முகாமை யாளரைக் கேட்டுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன் பொது முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

அனேக வருடங்களாக தனியார் பஸ் கம்பனிகள் இருந்த காலம் தொட்டு யாழ்ப்பாணத்திலிருந்து தாவடி ஊடாக மானிப்பாய், மருதனார்மடம் வரையும் மருதனார் மடத்திலிருந்து தாவடி ஊடாக யாழ்ப்பாணம் கச்சேரி வரையும் 771 பாதை இலக்க பஸ் சேவை நடைபெற்று வந்தது. பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை நடைபெற்று வந்த இந்த பஸ் சேவையால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மட்டுமல்ல நோயாளிகளும் பொதுமக்களும் பயனடைந்தனர்.

நாட்டில் நிலவிவந்த அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து இந்த பஸ்சேவை நிறுத்தப்பட்டது. இப்பாதையால் மினிபஸ் சேவைகளும் நடைபெறுவதில்லை.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு 771 இலக்கமுடைய பஸ்சேவையை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது குறிப்பிட்ட நேரங்களுக்கு ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த பஸ்சேவையை ஆரம்பிப்பதன் மூலம் சுதுமலை, தாவடிப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அதிக பயனடைவார்கள் -என்றுள்ளது.

(ஒ-115)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் விசேட நிர்வாகக்குழுக்கூட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு கோண்டாவில் நாராயணா வெள்ளி விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சபையின் தலைவர் நா. கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்இந்தநிகழ்வில்பலவிடயங்கள் ஆராயப்பட இருக்கின்றன. (ஒ-1)

* * *

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிலையத்தின் தற்காலிகத் தலைவர் கி.துரைசிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெறும். (ஒ-1)

# தென்னிலங்கைத் தென்னங்கள்ளுக்கு குடாநாட்டில் வந்தது திடீர் மவுசு!

யாழ்ப்பாணம், பெப்.6

குடாநாட்டிலுள்ள கள்ளுத் தவறணைகளில் தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட தென்னங்கள்ளு விற்பனைசெய்யப்படுகின்றது.

பனங்கள்ளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்தே தென்னிலங்கை தென்னங்கள்ளுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. இந்தக் கள்ளைப் பாவனையாளர்கள் ஆர்வத்துடன் வாங்கி அருந்தி வருகின்றனர்.

குடாநாட்டில் பனங்கள்ளுச் சீசன் தை மாதத்திலிருந்து ஆரம்பமாகிப் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் முடிவடைவது வழக்கம். இக்காலப் பகுதிகளில் பெரும் தொகையான கள்ளு கிடைப்பதனால் பாவனைக்கு மிஞ்சிய கள்ளு போத்தல்களில் அடைக்கப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இந்தக் கள்ளு முடிவடைந்த காலத்தில் தவறணைகளில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

குடாநாட்டிலுள்ள பல தெங்கு, பனம் பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தல்களில் பனங்கள்ளை அடைக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ளதால் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான போத்தல் கள்ளு நிலத்தில் ஊற்றப்படுவது தவிர்க்கப்பட்டு வந்தது. இதனால் சீவல் தொழிலாளர்கள் அதிக நன்மை அடைந்து வந்தனர்.

வழமைபோல் இம்முறை பனங்கள்ளுச் சீசன் முடிவடைந்ததனால் போத்தல்களில் அடைக் கப்பட்ட பனங்கள்ளு விற்பனை செய்யப்பட்டு வந்தது. பாவனை யாளர்களின் தொகை அதிகரித் ததைத் தொடர்ந்து போத்தல் பனங்கள்ளும் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில் பாவனையாளர்களைத் திருப்பதிப்படுத்தும் வகையில் போத்தலில் அடைக்கப்பட்ட தென்னங்கள்ளு முதல் தடவையாக தவறணைகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மதுப்பிரியர்கள் இந்தக் கள்ளை ஆர்வத்துடன் வாங்கி அருந்தி வருகின்றனர். (ஒ-115)

# தாவடி சமிதியில் ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.6

தாவடி, மானிப்பாய் வீதியிலுள்ள ஸ்ரீ இராமகிருஸ்ண சமிதி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆன்மீக ஒன்று கூடலும் சாதுசங்கமமும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக தமிழ் நாட்டைச் சேர்ந்த சுவாமி வேதாந்தானந்தா கலந்துகொள்வார். 'இன்றைய வாழ்வில் ஆன்மீகம்' என்னும் தலைப்பில் அவர் விசேட உரை ஆற்றுவார்.

நாளைய நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு நல்லாசிகளை பெற்றுக்கொள்ளுமாறு சமிதியின் செயலளர் சி.சிவமோகன் அழைத்துள்ளார். (ஒ)

# தெல்லிப்பழை ஞானோதயா சபையின் 64ஆவது ஆண்டு விழா நாளை

தெல்லிப்பழை பாலர் ஞானோதயா சபையின் 64ஆவது ஆண்டு விழாவும், முன்னாள் தலைவர் சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்களின் மூன்றாமாண்டு ஞாபகார்த்ததினமும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு காசி விநாயகர் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ சிவ சடாட்சர குருக்கள் இசையரங்கில் பிரம்மஸ்ரீ சு.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை திருமதி கமலாதேவி பொன்னம்பலமும், ஆசியுரையை காசி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரதியாகராஜக் குருக்களும் வழங்குவார்கள்.

பிரதம விருந்தினர்களாக இணுவில் காயத்திரி பீட தர்ம சாஸ்தா குருகுல அதிபர் சிவகாம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்களும் கலந்துகொள்வார்.

நினைவுப் பேருரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் சி.அருளானந்த சிவம் நிகழ்த்துவார். (50-86)

## நாளை

| | |
|---|---|
| தை 25 | 07.02.2010<br>ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி<br>மு.இ. 11.36 வரை |
| நட்சத்திரம்: | அனுசம்<br>முழுவதும் |
| சுபநேரம்: | 09.35-11.05வரை |
| ராகுகாலம்: | 05.05 - 06.35 வரை |

# பட்டம் ஏற்றி விளையாடிய சிறுவன் கிணற்றில் தவறிவீழ்ந்து மரணம்

குடத்தனை,பெப்.06

பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்து மரணமான சம்பவம் குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வரதராசா வசந்தராஜ் என்ற 10வயதுச் சிறுவனே மரணமானவராவார்.

இந்தச் சிறுவன் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாட சாலையில் தரம் 5இல் கல்வி கற்று வருகின்றார். பட்டத்தை ஏற்றுவதற்காக ஓடியவேளை அங்கிருந்த கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்து இவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்திகை மருத்துவ மனையில் சடலம் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின்னர் நேற்று குடும்பத்தினரிடம் ஒப்படைக் கப் பட்டது. (50-14-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் திருச்செல்வம்

(ஓய்வு பெற்ற உபஅதிபர்,
புனித மரியாள் வித்தியாலயம், O.L.R யாழ்.)

நாரந்தனையைப்பிறப்பிடமாகவும், ஊரெழுவிலும், கொழும்பிலும் வசித்தும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய நாகலிங்கம் திருச்செல்வம் 05.02.2010 வெள் ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-சின்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், ஊரெழுவைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான மயில்வாகனம்-முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவகாமன் (ஆசிரியை, யா/கன்னியர்மடம் த.ம.வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், சுகிதரன் (U.K), சுகிர்தா (கனடா), ரஜிதரன் (கனடா), மயூரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உஜ்ஜயனி (U.K), தயாணந்தன் (கனடா), சாந்திதா (கனடா), சிவமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அனுஜன், ஜானுஜயனி (U.K), அபிஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், மனோன் மணி, அமரர் நகுலாம்பிகை, பொன்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியை), பராசக்தி, அமரர் தங்கலட்சுமி, சிந்தாமணி, மங்கையர்க்கரசி, கிருஷ்ணபாலா (ஓய்வு பெற்ற ஆசிரியர், சென். சாள்ஸ் ம.வி), சகுந்தலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும், குமாரசாமி, ரூபாவதி (முன்னாள் ஆசிரியை, யா/இ.ஆ. பாடசாலை), காலஞ்சென்றவர்களான சுந்தரம், சண்முகம், சண்முகராஜன், சொக்கலிங்கம், சபாரெத்தினம், தம்பையா ஆகியோரின் மைத்துனரும், அமரர் சிவக்கொழுந்து, சிவகுரு (முன்னாள் பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்), அமரர் சிவபாக்கியம், சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும், அமரர் இராசநாயகம், சரஸ்வதி, செல்லப்பா, அமரர் தம்பிஐயா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.No:
கனடா: 0019055082729
யாழ்.: 0212221029

தகவல்,
நா.கிருஸ்ணபாலா (தம்பி),
406, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே.இல 0777065940

(92267)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## ரேவதி சிவஞானம்

திதி: வெண்பா 06.02.2010

பாசத்தினைச் சொல்லி ஊட்டி வளர்த்த தாயே!
அதை மறக்கச் சொல்லி எம்மை வளர்க்கவில்லையே!
இரண்டாண்டுகள் கடந்தன ஆனால் எம் இதயத்தின்
கலக்கம் அடங்காமல் குமுறுகின்றது எம் மனம்

தோற்றம் 23.04.1960
மறைவு 30.01.2008

123, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அகிலன், லக்ஸ்மன்,
டினோஜன்.

(92256)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25
.
07
.
1931



மறைவு
07
.
01
.
2010

திருமதி **இரத்தினம் சரஸ்வதி**

(சரஸ் அக்கா, குஞ்சம்மா)

எத்தனை நாள்கள் சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

என்றும் நினைவுடன்
கணவன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(92255)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## தில்லையம்பலம் செல்வராசா

அன்னையின்மடியில் - 18.02.1944
ஆண்டவன் அடியில் - 18.01.2009

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், தபாற் கந்தோர், சுன்னாகம்.)

ஆண்டொன்று கடந்ததப்பா
உங்கள் திருமுகம் பார்த்து
ஆறவில்லை எம் துயரம்.......!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகாது அப்பா!
நிலையற்ற இவ்வுலகில்
நிஜமான பாசத்தைக் காட்டி

நிரந்தர துயரத்தை தந்து விட்டு
எங்கு சென்றீர்கள் - எம் இனிய அப்பாவே
நீங்கள் இம் மண்ணுலகை விட்டு மறைந்தாலும்
எம் மனதை விட்டு மறைய மாட்டீர்கள்!
எல்லாம் வல்ல மல்லாகம் பழம்பதி விநாயகப்
பெருமானின் பாதாரவிந்தங்களில் சரணடைய
தினம் தினம் வேண்டுகின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

மனைவி,
பிள்ளைகள்.

(C/564644)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.பெப்.06

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகம் வருடந்தோறும் நடத்தும் விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்.பல்கலைக் கழக வி.கவுடன் மோதுகின்றது.

இந்நிகழ்விற்கு பிரமவிருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் என். நாகேஸ்வரனும், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப்பிரிவின் பணிப்பாளர் கே.கணேச நாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (1-23)

வலிவடக்கு.பெப்.06

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (04-86)

* * *

யாழ்ப்பாணம்.பெப்.06

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (04-23)

* * *

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மு.முரளிதரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி ப.யோ. அன்ரனியும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, இளைப்பாறிய ஆசிரியை செல்வி வ.தேன்மொழி ஆகியோரும் கலந்து கொள்வர். (1)

## இல்ல மெய்வன்மை போட்டிகள்

யாழ், பெப்.06

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார். (ஓ-207)


## தேவை

உணவகத்திற்கு அனுபவமிக்க
சமையலாளர், ரீமேக்கர், சப்ளையர் தேவை.
தொடர்பு: லிங்கம் கபே, வைத்தியசாலை அருகில்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

## பூபதி காட்சியறையில்



05Kg - 8000.00
15Kg - 12000.00
15Kg - 21000.00
15Kg - 33000.00

வாடிக்கையாளர் கவனத்திற்கு:
★அரசாங்கத்தினால் நிறை நிர்ணயம் செய்யப்பட்டது.
★கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும்.

தொடர்பு: 0777427777

## டீசல் - கார் உடன் விற்பனைக்கு

அரச அலுவலரின் பாவனையில் உள்ள 32-XXXX இலக்கம் கொண்ட டீசல் (வெள்ளை) கார் உடன் விற்கப்படவுள்ளது. சனி- ஞாயிறு பார்வையிடலாம்.

T.P.0775226462, 0213212676

## Personal Class

தரம் 1-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். குறிப்பாக A/L மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயப்படுத்தப்பட்டமையால் அவர்களுக்கும் மற்றும் Spoken With Grammer & Sinhala கற்க விரும்புவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை.
தொடர்புகளுக்கு:- கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P- 077- 1372280

## தொழிற்சாலைக்கு உடன் ஆள்சேர்ப்பு

உரும்பிராய் - நீர்வேலி - கோண்டாவில் மற்றும் இதர பிரதேசங்களில் உள்ள 25 வயதிற்குட்பட்ட ஆண்- பெண் ஆகியோர் பொருத்தமான பணி நிலைகளில் சேர்க்கப்படவுள்ளனர். நாளை ஞாயிற்றுக்கிழமை (07.02.2010) காலை 9 மணி முதல் 2மணி வரை "ஹேமா இன்டஸ்ரீஸ்" HEMA-INDUSTRY) இராசபாதையில் சிறுப் பிட்டி மேற்கு, ஞானவைரவர் ஆலயத் திற்கு அருகில் உள்ள நிறுவனத்திற்கு வருகை தரவும்.

தொ.பே 0779594326, 0213210 919


## பணிநிலை வெற்றிடம்

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கணனிசார் சேவைகளை வழங்குகின்ற நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண்,பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி மானிப்பாய் மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்தவராக இருத்தல் விரும்பத்தக்கது. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுடையோர் தங்கள் தகைமை மற்றும் பட்டறிவு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் நாளை (07.02.2010) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணியளவில் சமுகம் தரவும்

சுகன் நெற் சிற்றி,
உடுவில் வீதி, மானிப்பாய்.
தொ.பே. 0777 774586 (92263)


# வாழ்த்துகின்றோம்



## பேராசிரியர் க.தேவராஜா

(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

அவர்கள் பேராசிரியராக
பதவி உயர்வு
பெற்றமையையிட்டு
பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்
அதிபர்கள், ஆசிரியர்கள்,
உடுவில் கல்விக் கோட்டம்.

(92257)

# வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி-2010

புனித ஹென்றியரசர் கல்லூரி- இளவாலை
கன்னியர் மடம் மகாவித்தியாலயம்- இளவாலை

பிரதமவிருந்தினர்:
திரு. என்.எஸ்.ஆர். சிவரூபன்
(பிரதித்திட்டப் பணிப்பாளர், நிக்கோட், யாழ்.)
கலாநிதி (திருமதி) அபிராமி சிவரூபன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. சுவாம்பிள்ளை ஹென்றி
(பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்.)

திகதி: 06.02.2010 (சனிக்கிழமை)
இடம்: புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானம்
நேரம்: பி.ப 1.30

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்

(92258)

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு சிவபாலன்.

நீர்வேலி (சமாதான நீதிவான்)

[தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம், தலைவர், நீர்வேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம், செயலாளர், நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலனசபை, கௌரவ உறுப்பினர், வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபை]

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவபாலன் 03.02.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், தவமணியின் அன்புக்கணவரும், கவிமித்திரன்(கனடா), அகிலன் (கனடா), றகுணா (கனடா), பிரகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுகன்யா, மகேந்திரகுமார், ஜெயரூபன்(லண்டன்) நிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும் பதுஷன், விதுஷன், அஸ்வின், பிரகாஷ், பிருஷாயினி (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
சகோதரர் -V.K. கணபதிப்பிள்ளை,
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை),
மைத்துனர் - V.K. செல்வநாயகம்
(வர்த்தகர், நீர்வேலி).

(92265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம் - கங்கு - ராஜன் வெற்றிக்கிண்ணம்:
# ஜெயந்திரன், செல்ரன் அதிரடித் துடுப்பாட்டம்; இறுதியாட்டத்துக்குள் பல்கலை. அணி நுழைவு


செல்ரன்

ஜெயந்திரன், செல்ரன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டம் கைகொடுக்க யாழ். பல்கலைக் கழக அணி 8விக்கெட்டுக்களால் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டதோடு இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது.

கொக்குவில் வளாமதி முன்னேற்றக் கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் விக்ரம்- கங்கு-ராஜன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 ஓவர் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் வியாழக்கிழமை யாழ். பல கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றொகான் 22 ஓட்டங்களையும் மதுஷன் 44 ஓட்டங்களையும் நிஷந்தன் 15 ஓட்டங்களையும் சுதர்சன் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். பல்கலைக்கழக அணிசார்பில் தேவரூபன் 6 ஓவர்கள் பந்து வீசி 34ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் உதயன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி 16ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் ஜனார்த்தன் ஆறு ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்துஇரண்டு விக்கெட்டுக்களையும் ஜெயரூபன், சஞ்சீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் னையும் வீழத்தினர்.


ஜெயந்திரன்

140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய யாழ். பல்கலைக் கழக அணி 25.5 ஓவர்களில், இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கனியைப் பறித்தது. இதில் யாழ்.பல்கலைககழக அணியைச் சேர்ந்த ஜெயந்திரன்,செல்ரன் ஆகியோர் ஆட்டம் இழக்காமல் முறையே 53,43 ஓட்டங்களையும் லவன் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் றொஹான் ஆறு ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், கோபிகான் நான்கு ஓவர்கள் பந்து வீசி30 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(04-23)




## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் சென். றோக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 06

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது இதில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை 5:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றியை பெற்றுக் கொண்டது. (04-23)

## குமாரசாமி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.6

முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்தமாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் வெற்றிக் கிண்ணத்துக்காக ருவென்ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி மதியம் ஒரு மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ். ஓங்காரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(04-23)

## மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.6

வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் கி.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி வி.அம்பலவாணர் கலந்து கொள்ளவுள்ளார்.(50-9-236)

வடமராட்சி,பெப்.6

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணியளவில் அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (50-9-236)

* * *

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி ந. பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் சிறப்பு விருந்தினராக வலிகாமக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பி.அம்பிகைபாகனும் கலந்து கொள்வர். (1)

* * *

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன. வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ் வில் முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். (04-207)

## கரபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 06

மஞ்சிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கிடையே நடை பெற்றுவரும் ஆண், பெண் இருபாலருக்கும் இடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

* பிற்பகல் 3 மணிக்கு - பெண்கள்- கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம்

* பிற்பகல் 4 மணிக்கு - ஆண்கள்- ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி எதிர் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி.

இந்த நிகழவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார். (1-23)

## யாழ். இந்துக் கல்லூரி நடத்திய வீதி ஓட்டத்தில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு கனிஸ்ட, சிரேஸ்ட மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற வீதி ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

கனிஷ்ட பிரிவு


க.கிரிஷாந் (முதலாமிடம்)


அ.அனோஜன் (இரண்டாமிடம்)


இ.சிவகாந் (மூன்றாமிடம்)

சிரேஸ்ட பிரிவு


ஆர். சதீசன் (முதலாமிடம்)


கு.சிவேந்திரன் (இரண்டாமிடம்)


எஸ். செந்தூரன் (மூன்றாமிடம்)



யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கிடையே நடைபெற்ற 30 ஆவது வீதியோட்டப் போட்டி நிகழ்வு நேற்றுக் காலை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வீதியோட்டப் போட்டிக்கு வீரர்கள் தயார் நிலையில் நிற்பதை முதல் படத்திலும் கொடியசைத்து வீதியோட்டத்தை மத்தியஸ்தர்கள் ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும் முடிவிடத்தை நோக்கி வீரர் [illegible] படத்திலும் காணலாம். (படங்கள் - தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக்கு ஒப்பான ஒரு தாயகத்தை காணவிரும்புகின்றது ஈழத் தமிழினம்

## கருணாநிதிக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கடிதம்



சென்னை, பெப். 06

உங்கள் காலத்திலேயே தமிழ்நாட்டுக்கு ஒப்பான ஒரு தமிழர் தாயகத்தை ஈழத் தமிழினம் காண விரும்புகின்றது. - இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை அலுவலகம் தமி ழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையில் எமது தமிழர் தாயகத்தில் வாழ்ந்து வரும் நமது மக்கள் அனுபவித்த வார்த்தைகளால் வடிக்க முடியாத துன்பங்கள் இழப்புக்கள் ஆகியவற்றின் தாக்கங்களின் மத்தியிலும் இன்னமும் தமது நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பது உங்கள் தமிழ் நாட்டின் மீதுதான்.

எனவே, உங்கள் காலத்திலேயே தமிழ்நாட்டுக்கு ஒப்பான ஒரு தமிழர் தாயகத்தை ஈழத் தமிழினம் காண விரும்புகின்றது. இதற்கான முன்னெடுப்புக்களையும் தீர்மானங்களையும் மிகவிரைவில் நடை பெறவுள்ள உங்கள் கட்சியின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்து அதனை மத் திய அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து எங்கள் கனவுகளை நனவாக்குங்கள் - என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் திரு கணேசலிங்கமும், இயகத்தின் சர்வதேச ஊடகத் தொடர்பாளர் ஆர்.என்.லோகேந்திரலிங்கமும் இணைந்து அனுப்பி வைத்துள்ள மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சில மாதங்களுக்கு முன்னர் நீங்கள் இலங்கைக்கு அனுப்பி வைத்த நாடாளுமன்றக் குழுவிடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு விரைவில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு, அவர்கள் சுதந்திரமாக வாழ வழி செய் யப்படும் என்று உறுதியளித்ததை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் மேலான கவனத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

நீங்கள் மனது வைத்தால் பல விடயங்களை எமது மக்களுக்காகச் செய்யலாம். அதுவும் உங்கள் காலத்திலேயே செய்து முடிக்கலாம்.

இந்தியாவின் மத்திய அரசாக உள்ள காங்கிரஸ் அரசு தற்போது இலங்கையில் குறிப்பாக வட பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது என அறிகின்றோம். விமான நிலையம், அன்னை இந்திரா காந்தி நினைவான பல்கலைக்கழகம் ஆகியனவும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளன எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஆனால் இவ்வாறான திட்டங்களால் நமது மக்களின் அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும். அங்கு உங்கள் இந்திய அரசு எந்த அபிவிருத்தியை மேற்கொண்டாலும் அது இலங்கை அரசிற்கு மட்டுமே நன்மை பயக்கும் விடயமாக அமையுமே தவிர நமது மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்கின்ற திட்டங்களாக அமையாது.

எனவே, நமது மக்களுக்கு அதிகாரப் பகிர்வுகளை வழங்கும் வகையில் இலங்கை அரசிற்கு அழுத்தங்கள் இந்தியாவின் மத்திய அரசிடமிருந்து அதிகளவில் கொடுக்கப்படுவதை தாங்கள் உறுதி செய்யவேண்டும்.

எனவே மிகவிரைவில் கூடவுள்ள உங்கள் கட்சியின் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் நமது மக்களின் விடிவுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தூணாக நிற்கக் கூடிய தீர்மானங்களை எடுத்து அதை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் நமது மக்கள் அரசியல் அதிகாரங்களை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள். இதன் மூலம் உங்கள் தமிழ்நாட்டுக்கு ஒப்பான தமிழர் தாயகம் ஒன்று அமைவதை உறுதி செய்யுங்கள் - என்றுள்ளது.

# உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு கோவை நகரில் இன்று ஆரம்பம்

## புதிய தமிழகம் கட்சி தலைவர் பேட்டி

உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு கோவையில் இன்று தொடங்குகிறது என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்த அவர், அதுகுறித்து மேலும் கூறியவை வருமாறு -

கோவையில் நாளை (இன்று) உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டுக்கான திகதி 5 மாதங்களுக்கு முன்பாகவே முடிவு செய்யப்பட்டு கோவை பொலிஸ் ஆணையரிடம் மாநாடு நடத்துவதற்கான அனுமதி கேட்டு மனு அளித்திருந்தோம். 2 மாதகாலமாக அனுமதி வழங்காமல் காலம் கடத்தியதால் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம்.

கடந்த 31 ஆம் திகதி மாநாடு நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் மாநாடு நடத்த கோவை மாநகரப் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர். உலக அளவில் ஒட்டுமொத்த தமிழர்களின் வாழ்வுரிமை, மண் உரிமையை மீட்பதற்காக இந்த மாநாடு நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம்.

முழுக்க முழுக்க அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழ் இனத்தினுடைய நலனை மட்டுமே குறிக்கோளாக கொண்டு நடத்தப்படும் இந்த மாநாட்டிற்கு பொலிஸார் பல நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளனர். இது ஒட்டுமொத்த ஜனநாயக உரிமையையே கேள்விக்குறியாக்கியுள்ளது. இந்த மாநாடு வரும் 6, 7 ஆம் திகதிகளில் கோவையில் நடைபெறுகிறது.

உலகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால் யாரை அணுகுவது என்ற குறை இருக்கிறது. இந்த குறையை தீர்க்கும் வகையில் உலக தமிழர் பாதுகாப்பு மையம் ஒன்றைத் தொடங்குவது குறித்து இந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்ற இருக்கிறோம் - என்றார்.

இந்தியச் செய்திகள்

# நளினியின் விடுதலை விடயத்தில் சோனியாவின் நிலைப்பாடு என்ன?

## சுப்பிரமணியசுவாமி கேள்வி

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினியின் விடுதலை விவகாரத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் - ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டியளித்த அவர், இது குறித்து மேலும் கூறியவை வருமாறு -

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினி, முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரியுள்ளார். இந்த விடயத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தாக வேண்டும். ராஜீவ் கொலையில் பெரிய குற்றவாளியான நளினி, தனது வேண்டுகோள் தொடர்பாக தானே நேரில் ஆஜராக அனுமதிக்குமாறு உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். ஒரு குற்றவாளியான அவரை உயர்நீதிமன்றில் வாதாட அனுமதிக்கக் கூடாது.

மும்பை மராட்டியர்களுக்கே சொந்தம் என்ற சிவசேனாக் கட்சியின கோஷம் நகைப்புக்குரியது. இதுபோன்ற கருத்தை மராட்டிய மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நானே மும்பையில் இருந்து இரண்டு முறை எம்.பியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறேன். மராட்டிய மக்கள் எனக்கு வாக்களித்தார்கள். மராட்டிய மக்கள் ஒரு போதும் இனவெறியை ஆதரிக்கமாட்டார்கள் என்பதற்கு எனது வெற்றியே நல்ல எடுத்துக்காட்டு - என்றார்.

# ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த கதி விரைவில் எமக்கும் ஏற்படலாம்

## திருச்சியில் மலேஷிய தமிழ் எம்.எல்.ஏக்கள் கவலை

திருச்சி, பெப். 06

இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்த கதி எங்களுக்கும் வரலாம் - என்று திருச்சி வந்த மலேஷியத் தமிழ் எம்.எல்.ஏக்கள் கவலை தெரிவித்தனர்.

கோவையில் புதிய தமிழகம் சார்பில் நடத்தப்படும் உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காக மலேஷியாவிலிருந்து தமிழ் எம்.எல்.ஏக்கள் பி.குணசேகரன், மு.ரவி ஆகியோர் தலைமையில் மக்கள் நீதிக் கட்சியைச் சேர்ந்த 22 பேர் அடங்கிய குழுவினர் கொண்ட குழு ஒன்று விமானம் மூலம் திருச்சி வந்தனர்.

திருச்சியிலிருந்து கோவை புறப்படும் முன்பு செய்தியாளர்களுக்கு அவர்கள் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

மலேஷியாவில் வாழும் இந்தியர்களில் 90 சதம் பேர் தமிழர்கள். 2007இற்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் 83 தமிழ் எம்.பிக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனாலும், தமிழர்கள் பிச்சையெடுக்க வந்தவர்கள் என்கின்றனர். 40 ஆயிரம் தமிழர்கள் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கின்றனர் எனக் கூறுகின்றனர்.

சமீபகாலமாக மலேசியத் தமிழர்கள் அடைந்து வரும் துன்பங்கள் அதிகம். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பொறுப்புகளில் மலாய் இனத்தவர்களே நியமிக்கப்படுகின்றனர். பாடசாலைப் பாடங்களில் தமிழ், தமிழ் இலக்கியப் பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து மோசடியாக அனுப்பி வைக்கப்படும் தமிழ்த் தொழிலாளர்களுக்கு மலேசியாவில் இருக்கும் இந்தியத் தூதரகத்தில் இருப்பவர்கள் ஆதரவளிப்பதில்லை. ஆனால், அதேநேரத்தில் இந்தியாவைச் சேர்ந்த வேறு மாநிலத்தவர் சிக்கலில் இருந்தால் அவர்கள் மட்டும் காப்பாற்றப்படுகின்றனர்.

எனவே, மலேஷியாவுக்கு தமிழ்த் தொழிலாளர்கள் செல்வதற்கு தமிழக அரசு தனியாக குழு ஒன்றை அமைத்து, அவர்கள் மோசடியில் சிக்காத வகையில் அதிகார பூர்வமாக அனுப்பிவைக்க வேண்டும். பெரும்பான்மையாக தமிழர்கள் மலேஷியாவில் இருப்பதால், தூதரகத்தின் உயர் அலுவலர்களாக தமிழர்களை நியமிக்க வேண்டும்.

புதிய தமிழகம் கட்சி சார்பில் நடைபெறும் இந்த மாநாட்டை அடுத்து நடைபெறவுள்ள செம்மொழி மாநாட்டில் திரளாகப் பங்கேற்கவும் தயாராக உள்ளோம். மலேஷியத் தமிழர்களின் பிரச்சினைகளை முன்வைக்க அந்த மாநாட்டில் பேச சில நிமிடங்களாகவது அனுமதிக்க வேண்டும்.

மலேஷியாவில் தமிழர்களுக்கு துரோகம் செய்யும் பிரதமர் உள்ளிட்டோருக்கு தமிழகத்தில் மாலை போட்டு வரவேற்பளிப்பது வருத்தத்தைத் தருகிறது.

ஏறத்தாழ 80 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஒரு பிரச்சினை என்றால், முதலில் குரல் கொடுக்க வேண்டியது தமிழ்நாடுதான். தமிழ்நாட்டின் அழுத்தத்தால், இந்திய அரசு எங்களைக் காக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில், அவர்களுக்கு ஏற்பட்ட கதி எங்களுக்கும் ஏற்படலாம். மலேஷியாவில் தமிழர்கள் வசதியுடன், செல்வாக்குடன், மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என எண்ண வேண்டாம். மலேஷியத் தமிழர்களுக்கு நெருக்கடிகள் தொடங்கிவிட்டன. இப்போது 'வருமுன் காப்போம்' முயற்சியில்தான் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் - என்றனர்.

## 15 இலங்கை மீனவர்கள் கைது மூன்று படகுகளும் பறிமுதல்

இந்தியக் கடல் எல்லைக்குள் 3 படகுகளில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த 15 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை கைதுசெய்துள்ளது.

இலங்கை மீனவர்கள் சிலர் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து வருகின்றனர் என சில தகவல்கள் கிடைத்தன. அதைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற கடலோரப் பாதுகாப்புப் படையினர் 3 படகுகளில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த 15 இலங்கை மீனவர்களை சுற்றிவளைத்தனர். அவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி வீதியில் சமைத்துப் சாப்பிடும் போராட்டம்

தனித் தெலுங்கானா மாநிலத்துக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கும் வரை போராட்டங்கள் தொடரும் - என்று தெலுங்கானா கூட்டு நடவடிக்கை குழுவின் ஒருங்கிணைப்பாளர் கோதண்டராம் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாக் கோரிக்கையை வலியுறுத்தி வீதியிலேயே உணவு சமைத்து சாப்பிடுவது மற்றும் ஆடல், பாடல்களை அரங்கேற்றுவது என்ற வினோதமான போராட்டங்களை, கூட்டு நடவடிக்கை குழுவினர் நேற்றுமுன்தினம் தொடங்கினர்.

இதுகுறித்து ஒருங்கிணைப்பாளர் கோதண்டராம் செய்தியாளர்களிடம் பேசியவை வருமாறு -

தெலுங்[illegible] இந்தப் போராட்டம் தொடரும். பெண் கள், மாணவர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் என பலரும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர். தெலுங்கானாப் பகுதியில் அடிலாபாத் முதல் ஆலம்பூர் வரை பிரம்மாண்டமான மனிதச்சங்கிலி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது - என்றார்.

இதற்கிடையே, தெலுங்கானாவுக்கு ஆதரவு தெரிவித்து மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், கடந்த 2003ஆம் ஆண்டு ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரைக்கு, ஒன்றுபட்ட ஆந்திராவை விரும்புபவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

என்னைப் பொறுத்தவரை, மகாராஷ்டி[illegible] விதர்பாவும், ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலமும் உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என சிதம்பரம் அந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ளார். மேலும், பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்களையும் பிரிக்கலாம் என்றும் சிதம்பரம் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, தெலுங்கானா பிரச்சினைக்குக் காரணம் காங்கிரஸ் கட்சியே என தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திர பாபு நாயுடு தெரிவித்துள்ளார். காக்கிநாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பாக நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா குழு அளிக்கும் முடிவை அப்படியே அரசு ஏற்கக் கூடாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிட வசதிகள் இல்லாமையால் யாழ். வரும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் பெரும் அவதி

## துரையப்பா விளையாட்டரங்கே தஞ்சமாகின்றது




யாழ்ப்பாணம், பெப்.6

தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இடவசதியின்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனாதிபதித் தேர்தலையொட்டி கடந்த சில நாள்களாக வெகுவாகக் குறைந்திருந்தது.

தேர்தல் முடிவடைந்ததை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெரும் எண்ணிக்கையான தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பல்வேறு தரப்புகளினதும் வருகையால் விடுதிகள், ஹோட்டல்கள் என்பன ஏற்கனவே நிரம்பி வழிகின்றன. இதனால் தங்குமிடங்களைப் பெறமுடியாத நிலை இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ளது.

இதனால் தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இடமின்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடவசதிகள் இல்லாமையால் அநேகமான சுற்றுலாப் பயணிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலேயே தமது இரவுப் பொழுதைக் கழிக்கின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் சில பயணிகள் தாம் வரும் வாகனங்களை யாழ். முற்றவெளிப் பகுதியில் நிறுத்தி இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர்.

வேறு சிலர் நல்லூர் ஆலயச் சூழலிலும் தங்குகின்றனர். எனவே சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-224)

## பருத்தித்துறையில் சதொச கிளை திறந்துவைப்பு

வடமராட்சி, பெப்.6

பருத்தித்துறை நகரில் சதொச விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இவ்விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இந்த விற்பனை நிலையம் அமைந்துள்ளது. (1-236)

## வெற்றிமணியின் மணிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.6

வெற்றிமணி சஞ்சிகையின் மணிவிழா ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வெற்றிமணியின் யாழ்ப்பாண ஆலோசகர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன், கோப்பாய் பிரதேச உதவிச் செயலர் செல்வி எஸ்.பிறேமினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஒ-1)

## இடம்பெயர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் உதவி வேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.6

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குச் சில நிறுவனங்கள் சில உதவிகளை வழங்கி வருகின்றன. இது வரவேற்கத்தக்கது. ஆனால் யுத்தத்திற்கு முன்பிருந்தே யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்புப் போன்ற இடங்களில் கல்வி பயின்றுவரும் மாணவர்களுக்கு எதுவித உதவிகளும் இதுவரை கிடைக்க வில்லை என மேற்படி மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த மாணவர்களின் குடும்பங்களும் சொத்துக்களை இழந்தும் உடைமைகளை இழந்தும் குடும்ப உறவு களை இழந்தும் உள்ளன. பல்கலைக் கழகம் செல்லும் சில மாணவர்கள் சைக்கிள் கூடக் கிடைக்காதா என ஏங்கி நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே பாரபட்சமின்றி சகல வன்னி மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் அங்கலாய்ப்பு ஆகும். (ரி-341)

## வரி அறவீட்டில் பாரபட்சம் இல்லை யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

அனைத்து நடை பாதைக் கடைகளும் பொருத்தமான இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதும் சகல நடைபாதை வியாபாரிகளிடமும் வரி அறவிடப்படும்.

தென்பகுதியில் இருந்து வரும் நடைபாதைக் கடைகளுக்கும் வரி அறவிடப்படுவதில்லை என்று கூறப்படும் தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராசா இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது அனைத்து நடைபாதைக் கடைகளாலும் போக்குவரத்துப் பிரச்சினைகள் எழுவதாகவும், அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களுடனும் கலந்தாலோசனை செய்து இவற்றை நிரந்தரமாக அமைப்பதற்குரிய பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டதும் நடைபாதைக் கடைகள் யாவும் இடமாற்றம் செய்யப்படுவதோடு பாரபட்சமின்றி வரி அறவீடும் மேற்கொள்ளப்படும். இதற்கு ஒத்துழைப்புத்தர மறுக்கும் நடைபாதை வியாபாரிகளின் விடயத்தில் பொலிஸாரின் உதவி கோரப்படும் என்று மேயர் கூறினார்.

அனைத்து நடைபாதைக் கடைகளுக்கும் தற்போது வரிஅறவீடு செய்தால் காலப்போக்கில் குறிப்பிட்ட இடங்களிலிருந்து வியாபாரிகளை அப்புறப்படுத்துவதில் சிரமங்கள் தோன்றலாம் எனவும் முதல்வர் மேலும் தெரிவித்தார். (ரி-111)

## கால்நடை வைத்திய அதிகாரி பூநகரிக்கு இடமாற்றம்

பண்டத்தரிப்பு, பெப்.6

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் செல்வி க.மீனயோகினி பூநகரிக் கால் நடை வைத்திய அதிகாரியாகக் கடந்த 2ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடைச் சுகாதாரத் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளரினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ரி-130)

## சண்டிலிப்பாய் ஐந்து கண் மதகு விரைவில் புனரமைப்பு

சண்டிலிப்பாய், சீரணி ஐந்து கண் மதகின் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த மதகை இரும்புச் சட்டங்களைக் கொண்டு புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென இரும்புச் சட்டங்கள் அங்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (50-224)

## ஒருவர் உடைத்த தேங்காய் மற்றவரின் தலையை பதம் பார்த்தது

யாழ்ப்பாணம், பெப்.6

ஆலய உற்சவத்தில் தேங்காய் உடைக்கக் குனிந்தவரின் தலையில் மற்றொருவர் அடித்த தேங்காய் தாக்கியதில் காயமடைந்தார்.

மட்டுவிலைச் சேர்ந்த நிரோஜன் (வயது 20) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ரி-207)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வடமராட்சியிலிருந்து யாழ்.நகருக்கு அதிகாலை 4.30 மணிக்கு பஸ் சேவை ஆரம்பம்

வடமராட்சி, பெப்.6

வடமராட்சிப் பகுதியிலிருந்து வெளி இடங்களுக்குச் செல்லும் பயணிகள் வசதி கருதி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தினமும் அதிகாலை 4.30 மணிக்கு இ.போ.ச.பஸ், மினிபஸ் வண்டிகள் புறப்பட்டுச் செல்கின்றன.

கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, கல்முனை போன்ற வெளியிடங்களுக்குப் பஸ் வண்டிகளில் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து பயணிப்போரின் வசதிகருதியே அதிகாலை பஸ் சேவைகள் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பமாகின்றன.

வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களுக்கான பஸ்சேவைகள் பருத்தித்துறையிலிருந்து நடைபெற்று வருகின்றபோதிலும் ஏனைய இடங்களுக்கான பஸ் சேவைகள் அனைத்தும் யாழ்ப்பாணத்திலிருந்தே நடைபெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (1-236)

## மருத்துவர்களுக்கு இணையவழி கற்கை நெறி; திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.6

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுச் சுகாதாரத் துறையினால் நடத்தப்படும் மருத்துவர்களுக்கான பொது மருத்துவச் சான்றிதழ்(CME/CPD) கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இளமருத்துவ மாணிப்பட்டத்தை (MBBS) நிறைவு செய்திருப்பதுடன் இலங்கை மருத்துவ ஆலோசனைச் சபையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவராக இருத்தல் வேண்டும். இக்கற்கை நெறி இணையத்தளவழி கற்கை நெறியாகும். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பதாக இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந் திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.



லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களும், யாழ்.மாநகர சபைச் சுகாதார அதிகாரிகளும் இணைந்து அத்தியடி (ஜே/78) கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அப்பிரதேச வீடுகளுக்குச் சென்று டெங்கினால் ஏற்படும் பாதிப்பினையும்டெங்கின் தீவிர நிலையையும் நன்கு விளக்கியும் வீட்டுச் சுற்றுச் சூழலில் நுளம்பின் உற்பத்தியினைத் தடுக்கும் முறையை அறிவுறுத்தியும் செயற்படுத்தியும் வருகின்றார்கள்.

மருத்துவக் கல்லூரிக்கு முன்பாக துப்புரவுப் பணியில் மாணவர்கள் ஈடுபடுவதையும், பொதுமக்களுக்கு விளக்கம் அளிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜன.31–பெப்06

இப்போது விற்பனையில்

* ஜனாதிபதித் தேர்தல் சொல்லும் சேதி
* சிறுபான்மையினரின் வாக்குகள் என்ன சொல்கின்றன?
* உயிர்வலிக்கும் கணங்கள் தொடர்...
* வேண்டப்படாத ஒரு தலைவர்
* வேலுப்பிள்ளையின் இறுதி நாள்கள்
* நளினிக்குக் கருணை கிடைக்குமா?
* மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.

இந்த இதழ் தொடக்கம் விலை 5ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது

உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்..



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701204093 முதல் 701216878 வரை. சீட்டிழுப்பு இல. 620 திகதி 04-02-2010

வெற்றி எண்கள்

06 08 50 58 | ஆங்கில எழுத்து I

ஜக்பொட் பரிசு ரூ. 13,531,270/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,531,270/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 252 | 1,000/= | 252,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 433 | 1,000/= | 433,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 10450 | 60/= | 627,000/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4769 | 40/= | 190,760/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 123004 | 20/= | 2,460,080/= |
| | | மொத்தம் ரூ. | 4,384,840/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - M. அதுல பண்டார - கண்டி.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.H. சந்ரா மல்காந்தி - மாபலகமை.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 701208552-4-31 |
| பதுளை | 701210427-2-44 |
| மொணராகலை | 701204489-7-02 |
| குருணாகல் | 701204344-6-10 |
| புத்தளம் | 701215418-0-01 |
| களுத்துறை | 701205955-0-24 |
| அம்பாந்தோட்டை | 701209483-9-14 |
| கம்பஹா | 701211088-6-44 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,784,840/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 13,863,640/=

தொடர் இல. 601240307 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 08 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7



## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 805 திகதி: 04.02.2010

ஆங்கில எழுத்து: R | வெற்றி இலக்கங்கள்: 14 16 58 62 | போனஸ் இல: 53

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,213,716.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 214 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 10418 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 146093 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 6,691,660.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 12,314,846.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.

இணையம் www.nlb.lk



### பூசோ பஸ் விற்பனைக்குண்டு

40 சீட்ஸ் உள்ள, A/C வசதியுள்ள பூசோ பஸ் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0774746344 (94844)

### காணி விற்பனைக்கு

முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கில் (K.K.S.வீதியில் இருந்து 500m தூரத்தில்)

02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0772668426
0779870559 (94637)

### ஒடியல் கூழ் விற்பனைக்கு

தரமான, சுவையான ஒடியல் கூழ் விற்பனைக்கு

(சின்னக்கடை மீன் சந்தைக்கு முன்பாக)

**வேல் கபே**

ஆரம்பம்:- சனிக்கிழமை

விற்பனைக் காலம்:- வெள்ளி, செவ்வாய் தவிர்ந்த ஏனைய தினங்களில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை வரை. (ச/564639)

### உடனடியாகத் தேவை

சகலவிதமான உணவு வகைகளும் செய்யக் கூடிய 3 பெண் சமையலாளர்களும்

ரொட்டி வேலைகள் சகலதும் தெரிந்த 2 ஆண்களும் உடனடியாகத் தேவை.

தொடர்பு:- 0774716929 (94638)

### தவறிவிட்டது

30/1, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய பிரசாத் ராஜ்குமார் என்பவரது தே.அ. அட்டை (913082591V) பேர்ஸ் உடன் ஒட்டுமடச் சந்திக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் அல்லது பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0214920490


## கைதடியில் இன்று ஓராண்டு நிறைவு விழா

கைதடி,பெப்.6

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் சமூக முன்னெடுத்தல் குழுவின் ஓராண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற இருக்கின்றது. குழுவின் தலைவர் செல்வி வ.வனிதா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேசசெயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக கெயர் சர்வதேசம், லீவ்ற் திட்டம் 2 இன் பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய் றோஸ் ஞானேஸ்வரன் உட்பட மேலும் சிலரும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (1-288)

## ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் மீளக் குடியமர்வதற்கு விருப்பம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு யுத்தம் நடைபெறாத இடமாக இருந்தும் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இப்பகுதியில் கண்ணிவெடி, மிதிவெடி என்பன யுத்தம் நடைபெறாத காரணத்தால் புதைக்கப்படாதிருக்கலாம் எனவும் அப்பகுதி மீள் குடியேற்றத்துக்கு எவ்வித தடையும் இல்லையெனவும் மக்கள் தெரிவித்ததுடன் தற்போது குளத்தில் நீர் நிரம்பி உள்ளதால் விவசாயப் பணிகளை உடனே மேற்கொள்ளலாம் எனவும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ரி-341)

## தொழில் திணைக்கள உப அலுவலகம் விரைவில் கிளிநொச்சியில் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

தொழில் திணைக்களத்தின் உப அலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் கே.கணேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த உப அலுவலகத்தை கரைச்சிப் பிரதேசசபை செயலகத்தில் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-224)


## நீங்காத நினைவுகள்

| 7 ஆம் வருட நினைவஞ்சலி | 18 ஆம் வருட நினைவஞ்சலி |
|---|---|
|  |  |
| அமரர் A.R.சிவகுருநாதன் | திருமதி தவமணி சிவகுருநாதன் |
| மலர்வு: 14.12.1918 | மலர்வு: 09.08.1924 |
| உதிர்வு: 25.01.2003 | உதிர்வு: 06.09.1992 |

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழ்கின்ற:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.



International Training programme for Journalists on

## Media and Democracy

*Denmark, Norway and Belgium - 2010*

Applications are invited for the above mentioned training programme due to be held in Denmark, Norway and Belgium - April 2010

Journalists who have experience and writing and editing / production in main stream newspapers, and on TV and Radio with five years experience are eligible to apply, as the course will be conducted in the English language, a working knowledge of the language and basic computer skills are minimum requirements.

The maximum number choosen for the programme will be around twenty (20). Women journalists are strongly encouraged to apply to ensure gender balance of the participants of the programme.

Participants will be short-listed by an independent interview panel and the final selections will be made by the Danida Fellowship Centre of Denmark.

The programme is of three weeks duration. Air fare and accommodation costs will be met by the Danish organisers and a per diem will be paid for food and other expenses.

Application forms can be collected between 9 a.m. and 5 p.m on weekdays from

*No 96, Kirula Road, Colombe 5.*

*or*

by sending a self addressed stamped envelope to the above address.

*For more details please contact:*

*Azzam Ameen*
*Course Coordinator*
Srilanka Press Institute
96, Kirula Road, Colombo 5
Phone: 011 5353635/ Fax: 011 5335500
Email: azzam@slpi.lk / Hotline: 0773 411111

Pleailse note that any form of canvassing will be disqualification,

Please apply within 10 days of this advertisement.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.03.1988

*இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் முக்கிய பேச்சுக்கள் நடத்த காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா புதுடில்லிக்கு திடீர் விஜயம்.

*ஐ.தே.க.தலைவா ஹர்ஷா அபயவர்த்தனா, பொலிஸ் அதிபர் டெரன்ஸ் பெரோ விஜய குமாரண துங்க ஆகியோரைக் கொலை செய்தவர்கள் யார் எனத் தமக்குத் தெரியும் என கொழும்புப் புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு.

*வடக்கு கிழக்கில் இந்திய அரசின் அனுமதியின்றி எதுவுமே செய்ய முடியாத நிலை உருவாக்கியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆர். மன்சூர் கவலை தெரிவிப்பு.

17.03.1988

*வடக்கு கிழக்கில் சகஜ நிலையை உருவாக்க இந்தியா பாடுபடுமென இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை அமைச்சர் காமினி திஸநாயக்காவிடம் உறுதியளிப்பு.

*மாகாண சபைத் தேர்தல் ஒரு கேலிக் கூத்து என ஐக்கிய இலங்கை மக்கள் கட்சித் தலைவர் ருக்மன் சேனநாயக்கா விமர்சிப்பு.

* வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட இந்திய அதிகாரிகள் குழு இலங்கைக்கு வருகை.

18.03.1988

*சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வந்த திருமதி அன்னம்மா டேவிட் இந்திய அமைதிப்படை முகாமிற்கு ஏற்றிச் செல்லப்பட்டார்.

*கிழக்கு மாகாண சிங்கள மக்களுக்கு இலங்கை இராணுவம் பாதுகாப்பு வழங்க வழிசெய்யும் உடன்பாடு இந்திய, இலங்கை அரசுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது.

*நமது நாடு இன்று இந்த அளவுக்குப் பலவீனமடைய நாம் கடந்த காலத்தில் விட்ட தவறுகளே காரணம் என ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு.

19.03.1988

*விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்திய அமைதிப்படையுடன் இலங்கை இராணுவமும் கூட்டாக இயங்காது என இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவிப்பு.

*அம்பாறை மாவட்டத்திலுள்ள சிங்களக் கிராமமொன்றில் புகுந்த இனந்தெரியாதோரால் 14 சிங்களப் பொதுமக்கள் படுகொலை.

20.03.1988

*இவ்வாண்டு வெசாக் தினத்துக்கு முன்னர் நாட்டில் அமைதி ஏற்படும் என கல்விச் சேவைகள் அமைச்சர் லயனல் ஜயதிலக தெரிவிப்பு.

*இலங்கை அரச படையினராலும், இந்திய அமைதிப் படையினராலும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க யாழ். அரச அதிபரால் விவரங்கள் சேகரிப்பு.

21.03.1988

*வடக்குக்கிழக்கு மாகாணங்களில் அரசியல் ஸ்திரநிலை ஏற்பட்ட பின்னரே அப்பகுதிகளின் புனர்நிர்மானத்துக்கென கனேடிய அரசு ஒதுக்கிய நிதியை வழங்கும் என கனடா சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சியின் தலைவி அறிவிப்பு.

*ஜே.வி.பி மீதான தடையை நீக்குமாறு சுதந்திரக்கட்சி உட்பட ஏழு அரசியல் கட்சிகள் ஜனாதிபதி ஜே.ஆரிடம் கோரிக்கை முன்வைப்பு.

22.03.1988

* ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்து தி.மு.க. ஒருபோதும் அரசியல் இலாபம் தேட முயன்றதில்லை என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

* பருத்தித்துறை இலங்கை இராணுவ முகாம் முற்றாக மூடப்பட்டது.34 வாகனங்களில் இலங்கை இராணுவத்தினர் வெளியேற்றம்.

* அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் வேல்முருகு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

23.03.1988

* அனுராதபுரம் - வவுனியா வீதியில் இனந்தெரியாதோரால் பஸ் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 17 தமிழர்கள் உயிரிழப்பு. வவுனியா மாவட்டத்தில் இரு சிங்களக் கிராமங்கள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் 13 சிங்களவர்கள் பலி.

* தமிழா நாட்டில் தங்கியுள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்படுவர்.

* தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உயர்மட்டப் பிரமுகர் ஜொனி இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக்கொலை.

* அமைதி ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்த இலங்கை அரசு இந்தியாவுக்கு உறுதி வழங்கியிருப்பதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவிப்பு.

* தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு இந்தியப் பிருதமர் ராஜீவ்காந்தியிடம் ஜெயலலிதா வற்புறுதது.

* இலங்கையில் இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணம் இந்திய அரசுக்கு இல்லை என இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

25.03.1988

* ஆயுதங்களைக் களைவது, சமரசப் பேச்சுக்களை நடத்துவது என்பன தொடர்பாக இந்திய அரசின் யோசனைகளை ஏற்பதற்கு விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் விதித்த புதிய நிபந்தனையை ஏற்க இந்திய அரசு இணக்கம் எனத் தகவல்.

* ஈழத் தமிழர் உயிர்காக்க சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரை எழுச்சிப் பயணமொன்றை தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆரம்பித்து வைப்பு.

*இசைப்பேரறிஞர், பின்னணிப்பாடகர் சீகாழி கோவிந்தராஜன் மாரடைப்பால் மரணம்.

26.03.1988

*தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர் மீது தமிழகப் பொலிஸார் மேற்கொண்ட கடும் சோதனைகளில் இலங்கைத் தமிழர்கள் பலர் கைது.

*ஜனாதிபதி ஜே.ஆரின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக அவரது பயணத்துக்கென குண்டு துளைக்காத இரண்டு கார்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

27.03.1988

*தென் இலங்கையில் கடந்த ஐந்து மாதங்களில் அரசியற் காரணங்களுக்காக 230 பேர் கொலை. 173 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர்.

*கடந்த மூன்று மாதங்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை சுமார் ஆறாயிரம் எனக் கணிப்பீடு.

28.03.1988

*இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈரோஸ் பிரமுகர் ஹரன் பலாலி முகாமிலிருந்து விடுவிப்பு.

*பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வது குறித்து தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராய்வு.

*விஜய குமாரண துங்காவின் படுகொலை தொடர்பான முக்கிய தகவலொன்றை வழங்கிய சந்தேக நபர் சிறைச்சாலையில் நிமோனியா நோயால் உயிரிழந்ததாக பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு.

29.03.1988

*யாழ். மாவட்ட மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை உரியவர்களுக்குத் திருப்பி வழங்கும் பணி ஆரம்பம்.

*வட மாகாணத்துக்கான தொலைத்தொடர்பு சேவையை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் தெரிவிப்பு.

30.03.1988

*யாழ். போதனா வைத்தியசாலைக்கு கனேடிய வெளிநாட்டு உதவித்திட்டத்தின் கீழ் குருதிச்சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு.

*மதவாச்சியிலிருந்து ஹொரவப் பொத்தானைக்குச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பஸ் ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த ரைம் குண்டு வெடித்ததில் சிங்களப் பிரயாணிகள் உடல் சிதறிப்பலி.

31.03.1988

*ஜனாதிபதி ஜே.ஆர். மற்றொரு பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக பதவி வகிக்க ஏற்ற விதத்தில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த ஐ.தே.கட்சி முயற்சி.

*பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பகுதியாக விடுதலை...

# இந்து சமய அறிஞர்கள்,சோதிட வல்லுநர்களுடன் இணைந்து முடிவுசெய்துள்ள இந்து விழா, விரத தினங்கள்

யாழ்ப்பாணம், பெப்.6

இந்து சமய அறிஞர்கள்,சோதிட வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் குழு பரிந்துரைத்ததன் பிரகாரம் இவ்வாண்டுக்கான விரத,விழாத்தினங்கள் தொடர்பான விவரங்களை இந்து சமய, கலாசாரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இந்து சமய விரதங்கள் மற்றும் விழாக்கள் அமையும் தினங்கள் தொடர்பாக வருடந்தோறும் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்குடன், 2010 ஆம் ஆண்டு அமைகின்ற விரதங்கள், விழாக்கள் பற்றிய தினங்களை இந்து சமய,கலாசார அலுவல்கள் திணைக்களம் உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகப் பல்வேறு இந்து சமய அமைப்புக்கள்,நிறுவனங்கள் என்பன திணைக்களத்துக்கு விடுத்த தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கமைய, இந்து சமய அறிஞர்கள், சோதிட வல்லுநர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டதோடு, இக்குழுவினர் பல தடவைகள் கூடிக் கலந்தாலோசித்துத் தீர்க்கமான தமது முடிவுகளைத் தெரிவித்துள்ளனர்.

இத் தீர்மானங்களுக்கமைய 2010 ஆம் ஆண்டில் அமையும் இந்து சமய விரதங்கள் விழாக்களையும் அனைத்து ஆலயங்களும், இந்து சமய மக்களும் ஒரே விதமாக அனுஷ்டித்துப் பின்பற்றுதல் சாலவும் பொருத்தமானது என்பதை இந்து மக்களிடையேயும், ஆலயங்களின் பரிபாலனங்களுக்கிடையேயும் குழப்பங்களைத் தவிர்த்துக் கொள்ள ஏதுவாகும் எனவும் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2010 ஆம் ஆண்டிற்கான பிரதான இந்து சமய விரதங்கள், விழாக்களின் பட்டியல் வருமாறு

| விழாக்கள் | நிர்ணயிக்கப்பட்ட திகதி |
|---|---|
| ★தைப்பொங்கல் | 2010.01.14 வியாழக்கிழமை |
| ★விகிர்தி புது வருடப்பிறப்பு | 2010.04.14 புதன் கிழமை |
| ★தீபாவளிப் பண்டிகை | 2010.11.05 வெள்ளிக்கிழமை |

| விரதங்கள் | நிர்ணயிக்கப்பட்ட திகதி |
|---|---|
| ★தைப்பூசம் | 2010.01.30 சனிக்கிழமை |
| ★மாசிமகம் | 2010.02.28 ஞாயிற்றுக்கிழமை |
| ★மகாசிவராத்திரி | 2010.03.13 சனிக்கிழமை |
| ★பங்குனிஉத்தரம் | 2010.03.29 திங்கட்கிழமை |
| ★சித்திரை சித்திரகுப்த விரதம் | 2010.04.27 செவ்வாய்க்கிழமை |
| ★சித்திரைப் பூரணை | 2010.04.28 புதன்கிழமை |
| ★வைகாசி விசாகம் | 2010.05.27 வியாழக்கிழமை |
| ★ஆனி உத்தரம் | 2010.06.19 சனிக்கிழமை |
| ★ஆடிப்பிறப்பு | 2010.07.17 சனிக்கிழமை |
| ★ஆடி அமாவாசை | 2010.08.09 திங்கட்கிழமை |
| ★ஆடிப்பூரம் | 2010.08.12 வியாழக்கிழமை |
| ★வரலட்சுமி விரதம் | 2010.08.20 வெள்ளிக்கிழமை |
| ★ஆவணிச் சதுர்த்தி | 2010.09.11 சனிக்கிழமை |
| ★மகாளயபட்ச ஆரம்பம் | 2010.09.24 வெள்ளிக்கிழமை |
| ★மகாளயபட்ச முடிவு | 2010.10.07 வியாழக்கிழமை |
| ★நவராத்திரி ஆரம்பம் | 2010.10.08 வெள்ளிக்கிழமை |
| ★நவராத்திரி முடிவு(நவமி) | 2010.10.16 சனிக்கிழமை |
| ★மானம் பூ (விஜயதசமி) | 2010.10.17 ஞாயிற்றுக்கிழமை |
| ★கேதாரகௌரி விரத ஆரம்பம் | 2010.10.17 ஞாயிற்றுக்கிழமை |
| ★கேதாரகௌரி விரத முடிவு | 2010.11.05 வெள்ளிக்கிழமை |
| ★ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பம் | 2010.11.06 சனிக்கிழமை |
| ★ஸ்கந்த ஷஷ்டி விரத முடிவு(சூரன் போர்) | 2010.11.11 வியாழக்கிழமை |
| ★சர்வாலயதீபம், குமராலயதீபம் | 2010.11.21 ஞாயிற்றுக்கிழமை |
| ★விஷ்ணுவாலயதீபம் | 2010.11.22 திங்கட்கிழமை |
| ★விநாயக விரத ஆரம்பம் | 2010.11.22 திங்கட்கிழமை |
| ★விநாயக விரத முடிவு(பெருங்கதை) | 2010.12.11 சனிக்கிழமை |
| ★திருவெம்பாவை ஆரம்பம் | 2010.12.13 திங்கட்கிழமை |
| ★சுவர்க்க வாயில் ஏகாதசி | 2010.12.17 வெள்ளிக்கிழமை |
| ★திருவெம்பாவை முடிவு (திருவாதிரை) ஆருத்திராதரிசனம் | 2010.12.22 புதன்கிழமை |

# மன்னார் சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கை நீக்கம்

கொழும்பு, பெப். 06

மன்னார் கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் அகற்றப்பட்ட நிலையில் சிரமமின்றி போக்குவரத்துகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நுழைவாயிலுக்கு அருகாமையிலேயே கோட்டை சோதனைச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. இங்கு கடற்படையினரதும், பொலிஸாரினதும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன்போது, கடற்படையினரின் சோதனைச் சாவடி முதலாவதாக அகற்றப்பட்டது.

அந்த வகையில் தற்போது பொலிஸாரினது சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட்ட நிலையில் போக்குவரத்துகள் இயல்பாக இடம்பெற்று வருகின்றன. அதே வேளை, மக்கள் மயப்படுத்தப்பட்ட மன்னார் பஸ் டிப்போவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவைக்கட்டணம் நேற்று முன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

இதற்கு முன்னர், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவைக்கட்டணம் 300 ரூபாவாக அறவிடப்பட்டு வந்த நிலையில், நேற்றுமுன்தினம் முதல் 221 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (சி)

# பிரான்பற்றில் நவீன சிறுவர் நூலகம் அமைக்க ஏற்பாடு

பண்டத்தரிப்பு, பெப். 6

வலி.தென்மேற்கு பிரதேசசபைக்கென பிரான்பற்று மக்கள் நல்ன்புரி சங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு பரப்புக் காணியில் நவீன வடிவிலான பாலர் பாடசாலையும், சிறுவர் நூலகமும் அமைத்துத் தருமாறு பிரான் பற்று கலைமகள் சனசமூக நிலையம் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைவாக பிரதேச சபைக்குரிய 2010 ஆம் ஆண்டுக்கான நிதி கிடைக்கப் பெற்றதும் பிரதேச சபைச்செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளாரென கலைமகள் சனசமூக நிலையச் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார். சிறுவர்களுக்கான நவீன வடிவிலான் நூல் நிலையம் குடாநாட்டில் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குரிய தனிக்கட்டடத்தில் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ரி-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சாவகச்சேரி நகரப் பகுதியில் பாதுகாப்புப் படையினரும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பாதுகாப்புப் படையினரும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரும் சிரமதானப் பணிகளுக்கு செல்வதற்கு ஆயத்தமாகி நிற்பதை முதலாவது படத்திலும், சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கைத்தொழில் வணிகர் மன்றத்தினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

நல்லூர் பிரதேசத்தில் 9 ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு;

# அதிகாரிகள் குழு வீடுகள் தோறும் சென்று பரிசோதனைகளில் ஈடுபட ஏற்பாடு

நல்லூர், பெப்.6

எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை டெங்கு நோய் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள நல்லூர் பிரதேச செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 9 ஆம் திகதி பல்வேறு திணைக்களப் பிரதிநிதிகள் 15 பேர்களைக்கொண்ட குழு அன்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம மட்டக்குழுவுடன் இணைந்து பிரதேசத்தில் உள்ள அனைத்து வீடுகள் தோறும் களப் பரிசோதனையை மேற் கொள்ளும்.

களப்பரிசோதனையின் போது இனங்காணப்படும் குறைபாடுகளை உரிய படிவங்களில் குறித்துக் கொள்வதோடு சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு அது பற்றி எடுத்துக்கூறி குறைபாடுகளைச் சீர்செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும். சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் எச்சரிக்கப்படுவதுடன் அன்றைய தினமே தமது தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் வலியுறுத்தப்படும். (ரி-111)

## யாழ்.வலயத்தில் 4,360 இடம்பெயர்ந்த மாணவர்

கோப்பாய், பெப்.06

நலன்புரி முகாம்களிலிருந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களில் 4 ஆயிரத்து 360 மாணவர்கள் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களுக்கான கற்றல் உபகரணப் பொதிகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் யாழ்.கல்வி வலயத்தில் உள்ள 100 பாடசாலைகளுக்கு 3 நீர்கொள்கலன்களும் யுனிசெப் அமைப்பின் ஏற்பாட்டில் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-72)

# வெளி மாவட்டம் செல்லும் இ.போ.ச பஸ் கட்டணங்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையால் நடத்தப்படும் பேருந்து சேவைக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை அறிவித்துள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் மேற்படி பஸ் சேவைகள் பாதுகாப்புப் படையினரின் வழித்துணையுடன் இடம்பெற்றதுடன் பாதையின் இடையில் எந்தப் பயணிகளையும் ஏற்றாமல் நேரடி சேவையாக இடம்பெற்றது. எனினும் தற்போது பாதுகாப்பு வழித்துணை எதுவுமின்றி அந்தச் சேவை நடைபெறுவதுடன் இடையில் பயணிகள் ஏற்றப்படுவதால் மேற்படி கட்டணங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் - யாழ்ப்பாணம் - மன்னார் பேருந்துக் கட்டணங்கள் 300 ரூபாவிலிருந்து 221 ரூபாவாகவும், யாழ்ப்பாணம் - வவுனியா பேருந்து கட்டணம் 200 ரூபா விலிருந்து 138 ரூபாவாகவும், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பேருந்துக்கட்டணம் 100 ரூபாவிலிருந்து 73 ரூபாவாகவும், பருத்தித்துறை - வவுனியா பேருந்துக் கட்டணம் 200 ரூபாவிலிருந்து 139 ரூபாவாகவும், அத்துடன் யாழ்ப்பாணம்- மாங்குளம் சந்திவரையான பேருந்துக் கட்டணம் 140 ரூபாவிலிருந்து 99 ரூபாவாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-16)

# 'அசல்' திரைப்படத்தைப் பார்வையிட மனோகராவில் ரசிகர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.6

தென்னிந்தியத்திரையுலகின் நடிகர் அஜித்குமாரின் 'அசல்' திரைப்படம் யாழ். மனோகரா திரை அரங்கில் நேற்று முன்தினம் திரையிடப்பட்ட போது திரையரங்கிற்கு முன்பாக ரசிகர்கள் தேங்காய் உடைத்து, வெடிகொளுத்தி ஆரவாரத்தில் ஈடு பட்டனர்.

நீண்ட இடைவெளியின் பின்னர் அஜித்குமார் நடித்த அசல் திரைப்படம் நேற்று முன்தினம் யாழ். மனோகரா திரையரங்கில் திரையிடப்பட்டது.

திரைப்படம் திரையிடப்பட்ட உடன் அங்குதிரண்ட ரசிகர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த அசல் படத்தின் கட் அவுட்டுக்கு மாலைகளை அணிவித்தனர். பின்னர் தேங்காய்களை உடைத்து, பாலூற்றி, வெடிகொளுத்தி பெரும் ஆர வாரத்தில் ஈடுபட்டனர்.

தென்னிந்தியத்திரையுலகின் எம். ஜி.ஆர், சிவாஜி ஆகிய முன்னணி நடிகர்களின் திரைப்படம் வெளியிடப்படுகின்ற போது இது போன்ற செயல்களில் அந்தக் காலத்து இளைஞர்களும் ஈடுபட்டதைச் சிலர் நினைவு கூர்ந்தனர். (50-9)

# சில பகுதிகளில் நாளை 3 மணி நேர மின் வெட்டு

யாழ்ப்பாணம், பெப்.6

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்படும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ். நகரின் சில பகுதிகள், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சேவை
சகல விதமான குளிரூட்டிகள் -(A/C), குளிர்சாதனப் பெட்டிகள் (FREIGH). ஒரு வருடம் உத்தரவாதத்துடன் வீடுகளில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0771341991

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு; சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.6

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து கடந்த 3 ஆம் திகதி குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலையிலும், உடம்பிலும் பலத்த வெட்டுக்காயங்களுடனும், அடிகாயங்களுடனும் எஸ்.சிவராசா (வயது 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையின் சடலம் கடந்த 3 ஆம் திகதி கிணற்றிலிருந்து யாழ் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

யாழ். பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணையையடுத்து கொலையுண்டவரின் மனைவியும், மற்றுமொரு நபரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (50-9-224)

## பேராசிரியர் தேவராஜாவுக்கு கௌரவிப்பு நாளை

யாழ்ப்பாணம், பெப்.6

வணிகத்துறையின் முதலாவது பேராசிரியராகத் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு பேராசிரியர் க.தேவராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொது நூலகக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் குருக்கள் சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்களும், வாழ்த்துரையை வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் க.கனகராசாவும், இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் நிர்வாகி த. வேதராஜாவும் வழங்குவர். (50-16)

மரண அறிவித்தல்

பொன்னம்பலம் இராசரத்தினம்



(இரத்தினண்ணை)

தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் சிவன்வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசரத்தினம் நேற்று (05.02.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், பகவதியின் அன்புக் கணவரும், வேதநாயகி, யசோதா (கொழும்பு), குமாரதாஸன் (கனடா), குகதாஸ் (மோகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநடேசன் (சக்திவேல் கடைச்சல் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்), கருணைநாதன் (மாலைதீவு), தேவி (கனடா), திலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கரத்தினம், லீலாவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜீ, அரவிந், அகிலன், சாம்பவி, தாட்சாயினி, பிரியா, நதியா, சபீனா, ஜனார்த்தனன், யதூசன், கஜவர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(92251)

33, சிவன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776393776

தகவல்
குடும்பத்தினர், குகதாஸ்
(மோகன், சிவன்கோயிலடி).

Computer Express
Institute of Information Technology

மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொழில்சார் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...
Duration:- 1week

Diploma in Film Technology & Video Editing
Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter
Capturing
Pinnacle Studio
Adobe Premiere
Internet & e mail

Diploma in Hard ware Engineering & Net working
System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail

Diploma in Graphic Designing & Adverdisement Marketing
Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail

உறுதியானதும் ஸ்திரமுள்ளதுமான எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள இன்றே எம்நிறுவனத்துடன் இணைந்து மேற்காணும் கற்கை நெறிகளை கற்றுக்கொள்ளுங்கள்.

No 167, Kasthuriyar Road, Jaffna.
T.P-021 2228250

வகுப்புக்கள் ஆரம்பம்
08.02.2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் காவடி ஆட்டக்கலை

**சுந்தா**

பக்திக்காகவும் தெய்வ நேர்த்திக்காகவும் எடுக்கப்பட்ட காவடியாட்டம் இன்று கலை என்னும்பெயரால் நிலையில் இருந்து சற்றுக் கீழிறங்கி கேளிக்கைகளுக்காவும் பயன்பட்டு வருகின்றது.

தொப்புள் கொடி உறவு என்று நாம் சொல்லும் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்துதான் முதன் முதலில் காவடி என்ற கலை இங்கு கொண்டுவரப்பட்டது. வல்வெட்டித் துறை வர்த்தகர்களினால் கடல் கடந்து அந்தக்கால வண்டிமரம் என்னும் கட்டுமரம் மூலம் தமிழ் நாட்டு கலைஞர்களைக் கூட்டிவந்து வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இது அரங்கேற்றப்பட்டது. இதுவும் தெய்வ சார்புக் கலையாகவே வளர்க்கப் பட்டுள்ளது. இக் கலையின் பின்னணி வாத்தியமாக உடுக்கு ஆரம்பத்தில் இருந்த போதும் பின்னர் பறைமேளம், தவில் போன்றனவும் காவடியாட்டத்திற்கான பின்னணியாக நிலைத்து விட்டன.



விழாக்களின் போது உடுக்கின் உடன் பிறப்புகளில் ஒன்றான நையாண்டி மேளமும் தற்போது நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்தக் காவடி ஆட்டத்திற்கு மிகமிகப் பொருத்தமான பின்னணி வாத்தியம் பறைமேளமே என்றால் மிகையாகாது.

இவ்வாத்தியத்தை வாசிப்பதில் மிகப் பாண்டித்தியம் பெற்றவர்கள் நெல்லியடியைச் சேர்ந்த கலைஞர் களாவர். தவில், உடுக்கு போன்ற செந்நெறி பின்னணி வாத்தியங்களுக்கு எந்த வகையிலும் பறைமேளவாத்தியம் குறைந்தது இல்லை என இந்தக் கலைஞர்கள் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இவர்கள் கையாளும் பறைமேளத் தாளக்கட்டுக்கும், மிருதங்கம், உடுக்கு, தவில் போன்ற வாத்தியக் கலைஞர்கள் பயன்படுத்தும் தாளக்கட்டுக்கும் எவ்வித வேறுபாடுமில்லை என்பது கவனத்துக்குரியது.

காவடி என்பதன் பொருள் காவும் தடி என்பதாகும். காவு+தடி என்பதை இணைக்கும்போது காவடி என்றும் பெயர் பெறும்.

அன்று தெய்வ நேர்த்திக்கடன் வைத்து அவற்றைச் செலுத்துபவர்கள் நீண்ட முறியாத தடியின் இருமுனைகளிலும் தெய்வத்திற்கான நேர்த்திக் கடன் பொருள்களைத் தராசு மாதிரி சம நிறையாகக் கூடையில் வைத்துக் கட்டுவார்கள். பின்பு கூடையை மஞ்சள் அல்லது காவித் துணிகளினால் மூடிக்கட்டி, தடியின் நடுப்பகுதியினைத் தோளில் காவிக்கொண்டு ஆலயம் நோக்கிச் செல்வர். இதன் மூலம் தான் காவடி என்னும் பெயர் வந்தது.

இங்கு இக்காவடியினை மிகவும் ஒழுங்காகவும், அழகாகவும் வடிவமைப்பர். இதற் குப் பிரம்பு, மூங்கில், பட்டுத்துணி, மணிமாலைகள் என்பவற்றுடன் மயிற்தோகை எனப்படும் மயில் இறகுகள் மிக முக்கியமானவையாகும். இவற்றைக் காவடியில் இரு பகுதியிலுமுள்ள நான்கு முனைப்பகுதிகளிலும் மேல் நோக்கி குத்தி வண்ணமமைப்பர்.

வடமாகாணத்தில் உள்ள ஆலயங்களில் காவடிக்குப் பெயர் பெற்றது தொண்டைமானாறு செல்வச் சந்நிதியாகும்.

வருடாந்த உற்சவ காலங்களில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் காவடி எடுத்துவந்து தங்கள் நேர்த்திக்கடனைச்செலுத்துவது இங்கு கண்கொள்ளாக் காட்சியாகும்.

காவடி ஆட்டத்தினை- நோக்கம், அமைப்பு, ஆட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு- பல்வேறு வகையாக வகுக்கலாம். காவடி, செடில் காவடி, பாற்காவடி, பன்னீர்க் காவடி, ஆட்டக்காவடி, [illegible]காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி என்பவற்றை நேர்த்திக் கடனுக்காக செய்வதுண்டு.

தூக்குக் காவடி என்பதை முதன் முதலாக வலிகாமத்தை சேர்ந்த முருக பக்தர் ஒருவரே எடுத்ததாக நம்பப்படுகின்றது. அவர் தற்செயலாக நடைபெற்ற ஒரு சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தார். தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டிய நாளும் வந்தது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளிடம் அவர்களின் கடைசியாசை என்னவென்று கேட்கப்பட்டு அது நிறைவேற்றப் படுவது வழமை. அதன்படி இவரிடமும் கடைசியாசை என்னவென வினவப்பட்டது. அதற்குத் திருப்புகழை சிறிது நேரம் தான் பாடவிரும்புவதாக அவர் கூறினார். அவரது விருப்பம் நிறைவேற்றப்பட்டது. அவர் திருப்புகழைப் பாடத்தொடங்க சிறையதிகாரிகள் அதனை மெய்மறந்து கேட்கத் தொடங்கினர். இதனால் அவரைத் தூக்கிலிடும் நேரம் தாண்டிவிட்டது. இதன் காரணமாக அவரைத் தூக்கிலிடாமல் ஆயுள் தண்டனையாக அவரது தண்டனை குறைக்கப்பட்டது. தண்டனைக் காலம் நிறைவுற்று விடுதலையானதும் வீட்டுக்குச் செல்லாமல் அந்த நபர் சந்நிதி முருகன் ஆலயத்துக்கே வந்து தூக்குக்காவடி எடுத்தார். இது 1953 இல் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இத் தூக்குக் காவடி பறவைக் காவடியை விட, முற்றிலும் மாறுபட்டது.

இன்று வடமராட்சியில் எல்லா வகையான காவடிகளும் எடுக்கப்படுகின்றன. காவடி ஆட்டம், கரகாட்டம் போன்றவற்றைப் பழகிய ஐம்பது முதல் அறுபது வயதிற்குட்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் அண்ணாவியார் என அழைக்கப்பட்டனர்.

இவர்களில் ஆட்டக் காவடி பழக்குவதில் வித்துவம் பெற்றவர் கம்பர் மலையைச் சேர்ந்த கம்பர் வல்லி என்பவரும் காவடி ஆட்டத்தைப் பழக்குவதில் நெல்லியடியைச் சேர்ந்த சகல கலாவல்லுனரான நற்குணம் என்பவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## உதயன் வார வசந்தம்

தொகுப்பு: ஔவையன்

# இதுமுறையா? தகுமா?

**கவிநேசன்**


அன்று மாலை நேரம் 5 மணியிருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாயில் உள்ள வீட்டுக்குச் செல்வோம் என்று பஸ்ஸுக்காக வீதியோரம் காத்திருந்தேன்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலும், தனியார் மினிபஸ்களிலும் சனங்கள் குறைவில்லாமல் வந்து கொண்டிருந்தன.

அதிக சனம். மிதிபலகையில் கூட நிற்க முடியாததால் அவற்றில் ஏற முடியவில்லை. அடுத்த பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். ஒருவாறு அடுத்த பஸ்ஸும் வந்தது. அதில் மிதிபலகையிலாவது நிற்கக்கூடிய நிலை காணப்பட்டது.

நேரம் சென்று கொண்டிருந்ததால் அதில் எப்படியாவது போக வேண்டும் என்று தீர்மானித்து பஸ்ஸில் ஏறினேன்.

''அண்ணை பின்னுக்குப் போங்கோ'' என்று பஸ் நடத்துநர் உரத்த தொனியில் கத்திக் கொண்டிருந்தார்''. சன நெரிசல் அதிகமாகத்தான் இருந்தது. இதனால் நடத்துநருக்கு சினம் ஏற்பட நியாயம் இருக்கத்தான்செய்யும். தவிர்க்க முடியாதது என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டேன்.



ஒவ்வொரு இடத்திலும் பயணிகளின் இறக்கம் வரும் போதும் ''அண்ணை வேளைக்கு இறங்குங்கோ, அக்கா வேளைக்கு இறங்குங்கோ, எங்களுக்கு நேரம் போகுது'' என்று சீறிச்சினந்து கொண்டிருந்தார் நடத்துநர்.

முன்னர் பின்னுக்குப் போங்கோ என்று கத்திக்கொண்டிருந்த நடத்துநர் இறங்கும் போது வேளைக்கு வாங்கோ என்று சீறிச் சினந்து கொண்டார்.

பஸ் மெல்ல மெல்ல உருண்டு ஆனைக்கோட்டையைச் சென்றடைந்தது. அதில் ஒரு நான்கு பேர் இறங்க வேண்டியிருந்தது. ஒவ்வொருவரும் மெது மெதுவாக பின்னாலிருந்து சன நெரிசலுக்குள்ளியிருந்து கஷ்டத்தின் மத்தியிலும் வெளியில் வந்து கொண்டிருந்தனர்.

பஸ் நடத்துநரோ பொறுமை தாங்க முடியாமல் சீறிச்சினந்து கொண்டிருந்தார். கீழே நின்று நடத்துநர் ஒரு கட்டத்தில் பஸ்ஸுக்குள் நின்று கொண்டிருந்த பத்து வயதுச் சிறுமியொருதியின் கையைப் பிடித்து தற...தற வென இழுத்துப் பாதையை விடு என்று வெளியில் இழுத்து எறிந்தார். எதுவுமே அறியாத அந்தச் சிறுமி ஒரு கணம் பதகளித்தாள்.




பார்த்தீர்களா? சம்பவத்தை, சேவையில் ஈடுபடும் மினிபஸ்களிடத்தில் ஒரு வித செயற்பாடு இருக்கிறது. அதாவது வீதியில் மெது மெதுவாக பஸ்ஸினைச் செலுத்துவது பின்னர் தமக்குரிய நேரம் நெருங்குகிறது என்றதும் பயணிகளை இறக்கும் போது முறையற்ற விதத்தில் சீறிச்சினந்து நடந்து கொள்வது. மேற்படி சம்பவம் கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து இளவாலைப் பகுதிக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற மினிபஸ்ஸில் மாலை சரியாக 5.30 மணியளவில் ஆனைக்கோட்டையில் இடம் பெற்றுள்ளது. தனியார் சிற்றூர்திச் சேவைச்சங்கத்தினரே இச் சம்பவம் உங்களின் பார்வைக்காக இப்பத்தியில் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-தென்னாபிரிக்கா மோதல் நாக்பூரில் இன்று ஆரம்பமாகிறது

புதுடில்லி, பெப். 06

தென்னாபிரிக்க-இந்திய அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் தொடர், இரு அணிகளுக்குமிடையிலான - தரவரிசையில் முதலிடம் என்ற இலக்கு நோக்கியதான - ஐ.சி.சியின் டெஸ்ட் சம்பியன் ஷிப் பரிசு என அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் ஆட்டமாக, பலத்த எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பமாகிறது.

ஐ.சி.சி. டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் இந்திய அணி கடந்த டிசம்பர் மாதம் முதல் முறையாக முதலிடத்தைப் பிடித்தது. இலங்கையை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தியதன் மூலமே இந்த மகுடம் இந்தியாவுக்குக் கிடைத்தது.

தற்போதைய நிலவரப்படி முதல் 5 இடங்களில் முறையே இந்தியா (125 புள்ளி), தென்னாபிரிக்கா (120), ஆஸ்திரேலியா (118), இலங்கை (115), இங்கிலாந்து (107) ஆகிய அணிகள் உள்ளன.

இந்த நிலையில் இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே இன்று (சனிக்கிழமை) தொடங்கவுள்ள 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடர் தரவரிசையில் முதலிடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் போட்டியாக அமைந்துள்ளது.

இந்தத் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றினால் அந்த அணி 123 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தைப் பிடிக்கும். இந்தியா 122 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திற்குத் தள்ளப்படும். தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்றால், அந்த அணி 125 புள்ளிகளும், இந்தியா 120 புள்ளிகளும் பெறும்

அதே சமயம் இந்திய அணி இந்தத் தொடரை சமனிலைப்படுத்தினால் கூட முதலிடத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

அல்லது 1-0 என்ற கணக்கில் இந்திய அணி வெற்றியை ருசித்தால இந்திய அணியின் புள்ளிகள் எண்ணிக்கை 127 ஆக உயரும். தென்னாபிரிக்கா 118 புள்ளிகளுக்குக் குறைந்து விடும். இரு டெஸ்ட்களிலும் தென்னாபிரிக்கா தோற்றால் 116 புள்ளிகளுக்கு இறங்கிவிடும்.

ஏப்ரல் முதலாம் திகதி எந்த அணி தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறதோ அந்த அணிக்கு ஐ.சி.சியின் சம்பியன்ஷிப் கதாயுதமும், சுமார் 2 கோடி ரூபா பணத் தொகையும் வழங்கப்படுவது வழமை. டெஸ்ட் சம்பியன்ஷிப்பைத் தட்டிசெல்லும் அணி எது என்பதையும் இந்த தொடரே நிர்ணயிக்கவுள்ளன.

தறபோது 3ஆவது இடத்தில் உள்ள ஆஸ்திரேலிய அணி ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பாக நியூஸிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. எனினும், அந்தத் தொடரில் ஏற்படும் வெற்றி தோல்விகள் தரவரிசையிலோ, அல்லது ஏப்ரல் முதலாம் திகதிய நிகழ்விலோ எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

இது ஒருபுறமிருக்க தனிநபர் தரவரி சையை நிர்ணயிக்கும் இந்தத் தொடர் அமைந்துள்ளது. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் இந்தியாவின் கௌதம் கம்பீர் முதலிடத்திலும், அவரை விட 39 புள்ளிகள் பின்தங்கியுள்ள தென்னாபிக்க அணித் தலைவர் ஸ்மித் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

முதலிடத்தைத் த்க்க வைத்துக் கொள்ள கம்பீர் தொடர்ந்து ஓட்டங்களைக் குவிக்க வேண்டியது அவசிய மாகும். கம்பீர் சறுக்கலைச் சந்தித்து, அதே வேளையில் ஸ்மித் ஜொலித்தால் அவர் முதலிடத்திற்கு வந்துவிடுவார்.

இவற்றுக்கும் மேலாக டெஸ்ட் அணிகளில் ஆஸ்திரேலிய அணியைப் போலவே பலமான அணியாகப் பலராலும் வர்ணிக்கப்படும் தென்னாபிரிக்கா அணி, டெஸ்ட தரவரிசையில் தற்போது முதலிடத்தில இருக்கும் இந்திய அணி, என பெரும் சவாலான இரு அணிகளும் மோதும் இந் தத தொடர்உண்மையிலேயே பலவிதமான எதிர் பார்ப்புகளுக்கு மத்தியில்தான் இன்று ஆரம்பமாகிறது



என்பது குறிப்பிடத்தக்கது.

# ஷேவாக் என்ன கொம்பா? இந்தியாவை வீழ்த்துவோம்

நாக்பூரில் இன்று ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்டில் இந்திய வீரர் ஷேவாக்கின் அதிரடியைக் கட்டுப்படுத்தவதற்கு வியூகங்கள் வகுக்கப்பட்டுள்ளன என தென்னாபிரிக்க அணியினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுடனான தொடர் குறித்து தென்னாபிரிக்கத் தரப்பினர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

**ஸ்ரெயின் (வேகப்பந்து வீச்சாளர்)-**

''ஷேவாக்கைக் கட்டுப்படுத்துவது சவாலானது. சென்னையில் 2008ஆம் ஆண்டு நடந்த எங்களுக்கு எதிரான டெஸ்டில், துடுப்பாட்டத்துக்குச் சாதகமான ஆடுகளத்தில் ஷேவாக் (319 ஓட்டங்கள்-304 பந்துகளில், 42 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) அதிக ஓட்டங்களைக் குவித்திருக்கலாம். ஆனால், ஒருமுறை அவரது பலவீனத்தை நாங்கள் கண்டுபிடித்த பிறகு, அவரால் முன்புபோல் எங்களுக்கு எதிராக மீண்டும் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

''ஷேவாக் போன்ற திறமையான துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்களுடன்தான் நாங்கள் வந்திருக்கிறோம்.

''ஷேவாக் உள்ளிட்ட எந்த இந்திய வீரர்களைக் கண்டும் நாங்கள் பயப்படவில்லை. ஆனாலும், டெண்டுல்கர், கம்பீர் போன்ற சிறந்த வீரர்களும் அந்த அணியில் உள்ளனர். அவர்களின் பலவீனங்களை அறிந்து அதற்கு ஏற்ப செயற்பட்டு அவர்களை வீழ்த்தத் தயாராக இருக்கிறோம்.

**டி வில்லியர்ஸ் (துடுப்பாட்ட வீரர்)**

''என்னைப் பொறுத்தவரையில் டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரையில் 3ஆவது வரிசை மிகவும் முக்கியமானது. நடுவரிசையில் எந்த ஒரு நெருக்கடியான நிலைமையையும் சமாளித்து நிலைத்து நிற்கக்கூடியவீர் டிராவிட். அவர் இந்திய அணியில் இல்லாதது, நாங்கள் கலிஸை இழப்பது போன்றது. அவரது இடத்தை நிரப்புவது கடினம்.

**போர்னல் (வேகப்பந்து வீச்சாளர்)-**

''டிராவிட் இல்லாதது இந்திய அணிக்கு மிகப்பெரிய இழப்புத்தான். ஆனாலும், லக்ஷ்மன், ஷேவாக், கம்பீர் போன்ற வீரர்களால் பெரியளவிலான ஓட்டங்களைக் குவிக்க முடியும்.''

**மோர்னே மோர்கல் (வேகப்பந்து வீச்சாளர்)-**

''எங்கள் அணியில் மணிக்கு 145 கிலோ மீற்றர் வேகத்துக்கு மேல் பந்து வீசக்கூடிய பந்துவீச்சாளர்கள் உள்ளனர்.

''இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான கம்பீரும், ஷேவாக்கும் சிறப்பாக விளையாடி வருகிறார்கள். அவர்களைச் சமாளிப்பது மிகவும் சவாலானது. இந்தச் சவாலை எதிர்கொள்ள நாங்கள் ஆவலுடன் உள்ளோம்.''

**காரி வோன் ஜீல் (பயிற்சியாளர்)-**

''எமது வீரர்கள் தென்னாபிரிக்காவில் பந்து எகிறிச் செல்லக்கூடிய மைதானங்




களில் விளையாடிப் பழக்கப்பட்டவர்கள். அவர்களை இங்குள்ள சூழலுக்கு ஏற்றபடி, கிடைத்துள்ள குறுகிய காலத்திற்குள் தயார் செய்வதுதான் எனக்குள்ள சவாலான பணியாகும்.

''எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் பயிற்சிகளை மேற்கொள்வோம். இந்தியக் கிரிக்கெட் சபை லெவன் அணிக்கு எதிரான பயிற்சியாட்டம் மிகவும் உதவியாக இருந்தது. இங்குள்ள கடினமான சூழலின் சவாலை ஏற்கமுடியும் என்ற மனநிலை ஏற்படுவதுதான் முக்கியமான ஒன்றாகும்.'' - இவ்வாறு அவர்கள் கூறினார்கள்

# டெஸ்டில் லீ?

''காயத்தால் அவதியுறும் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான பிரட் லீ யின் எதிர்காலம், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் மட்டுமே உள்ளது'' - என்று ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளரான டிம் நீல்சன் தெரிவித்துள்ளார்.

''பிரட் லீ கடந்த 12 மாதங்களாக முதல் தர டெஸ்ட் போட்டிகள் எதிலும் விளையாடவில்லை. இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது எதிர்காலம் மிகவும் கடினம். எனினும், ஒரு நாள் போட்டிகளில் இன்னமும் அவருக்குப் போதிய இடம் உள்ளது.'' என அவர் மேலும் தெரிவித்தார்.

# பதவியிலிருந்து விலகும்படி இஸாட் பட்டிற்குப் பணிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்யும்படி இஸாட் பட்டிற்கு, அந்நாட்டு நாடாளுமன்ற விளையாட்டு நிலைக்குழு உத்தர விட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வி, ஐ.பி.எல். போட்டிகளில் பாக். வீரர்களைப் புறக்கணித்தமை மற்றும் அப்ரிடியின் செயல் எனப் பல்வேறு காரணங்களுக்கான விசாரணைக்கு வருமாறு இஸாஸ் பட்டுக்கு பாகிஸ்தான் நாடாளுமன்ற விளையாட்டு நிலைக்குழு அழைப்புவிடுத்திருந்தது.

இதையடுத்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஜர்தாரியின் முதன்மைச் செயலாளரான சல்மான பரூக்கி, தன்னைச் சந்திக்க வருமாறு இஸாட் பட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இதையடுத்து கடந்த வியாழக்கிழமையன்று பிற்பகல் அவரைச் சந்திப்பதற்காக இஸாட் பட் சென்றிருந்தார். அதன்போது பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து தாமாகவே விலகுமாறு இஸாட் பட்டுக்கு உத்தர விடப்பட்டது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ராஜிநாமாத் தொடர்பாகப் பேசுவதற்கு இஸாட் பட் மறுத்துள்ள அதேவேளை, பாக். கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்து நான் எனது பணியைச் சிறப்பாகவே செய்துள்ளேன். நான் தவறாக எதையும் செய்யவில்லை'' - என்றார்.

இதேவேளை, கிரிக்கெட் விவகாரங்கள் தொடர்பாக நாடாளுமன்ற விளையாட்டு நிலைக்குழு விசாரணை நடத்துவதற்கு முதல் நாளன்று இஸாட் பட ராஜிநாமாச் செய்வார் எனத் தெரியவருகிறது.

# தலைவர் பதவியிலிருந்து விலக மாட்டேன்!



''நான் பாகிஸ்தான் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகமாட்டேன். தொடர்ந்தும் நாட்டுக்காக - அணிக்கான சிறந்த வெற்றிகளுக்காகத் தொடர்ந்தும் தலைவராக நீடிக்கவே விரும்புகிறேன். அத்துடன், அப்ரிடி பந்தைக் கடித்துச் செயற்படுத்திய விதம் கிரிக்கெட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.'' - என்று பாகிஸ்தான் அணியின் தலைவரான யூசும் முகமது தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில், முகமது யூசுப் தலைமையிலான பாகிஸ்தான் அணி படுமோசமான தோல்வியைத் தழுவியமையால், பாகிஸ்தான் அணிக்கு இளம் அணித்தலைவர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரான இஸாட் பட், தெரிவித்திருந்தார்.

இது குறித்துக் கூறும் போதே முகமது யூசுப் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''அணித்தலைவர் பதவியிலிருந்துகொண்டு நான் மோசமாகச் செயற்படவில்லை. அப்படி இருக்கும்போது அணித் தலைவர் பதவியிலிருந்து நான் எதற்காக விலக வேண்டும்? ஆஸ்திரேலியத் தொடருக்கான பாக். அணியின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வராத நிலையில் நான் அந்தப் பொறுப்பை ஏற்றேன்.

''நாட்டின் நலன் கருதியே நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன. வருங் காலத்திலும் நாட்டுக்காகத் தொடர்ந்து சிறந்த அணித்தலைவராக நான் இருப்பேன்.

ஆஸித் தொடரின்போது அப்ரிடி பந்தைச் சேதப்படுத்தியமையானது நாட்டுக்கும் கிரிக்கெட்டிற்றும் களங்கத்தை ஏற படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனினும், அவர் தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளமையானது வரவேற்கத்தக்கது. இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக் கூடாது.'' - என்றார்.




பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி, 146 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 336 ஓட்டங்களைக் குவித்தது. ஜேக்கப் ஓரம் 40 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்றமை சிறப்பம்சமாகும்.

பின்னர் 337 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு ஆடிய பங்களாதேஷ் அணி 43.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன்மூலம் நியூஸிலாந்து அணி 190 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஜேக்கப் ஓரம் தெரிவுசெய்யப்பட்டார்.

# தெ.ஆசிய விளையட்டு நிலைவரம்

பங்களாதேஷில் நடந்துவரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் நேற்று மாலை வரையான நிலைவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 32 | 14 | 9 | 55 |
| பாகிஸ்தான் | 6 | 15 | 8 | 29 |
| பங்களாதேஷ் | 5 | 6 | 15 | 26 |
| இலங்கை | 3 | 11 | 16 | 30 |
| நேபாளம் | 0 | 0 | 7 | 7 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 0 | 5 | 5 |
| பூட்டான் | 0 | 0 | 0 | 0 |
| மாலைதீவு | 0 | 0 | 0 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த இடங்களில் மீளக்குடியேறிய மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வன்னியில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறிய குடும்பங்களுக்கான 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.ஏற்கனவே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானி கராலயத்தினால் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய்க் கொடுப்பனவுக்கு மேலதிகமாகவே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இக் கொடுப்பனவு யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறிய அனைத்து மக்களுக்கும் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

ஏனெனில் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் சொந்தக் காணியில் மீளக் குடியமர்ந்திருக்க வேண்டும் என-அறிவுறுத்தப்பட்டுள்ளதாலேயே மீளக்குடியேறிய பலர் இந்தக் கொடுப்பனவைப் பெறமுடியாத சூழல் தோன்றியுள்ளது. அத்துடன் பாதுகாவலர்களுடன் வசிக்கும் 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பணம் வங்கியில் வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04-86)



நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்த மக்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர்.நிறுவனம் தேவையான அடிப்படைப் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் வைத்து நேற்று இந்தப் பொதிகள் விநியோகிக்கப்பட்டபோது எடுக்கப்பட்டதே இப்படம். (படம்-நந்தன்)

# புத்தக சாலை

## சிந்தனைச் சிற்பி



கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் துரை-50, சிந்தனைச் சிற்பி என்ற நூலை வெளியிட்டுள்ளது.

நூல் ஆசிரியர் ச.தங்கராஜா ஈழநாடு, உதயன் ஆகிய நாளிதழ்களில் கடமையாற்றிய பத்திரிகையாளரும், எழுத்தாளருமான கைதடி என்.கே.துரைசிங்கத்தின் 50 ஆவது பிறந்த தின நிறைவையொட்டி அவரின் எழுத்துலக நண்பர்கள், அபிமானிகள் கைதடியிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது.

தான் வாழ்ந்த கிராமத்தை, யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தை தனது எழுத்துக்களின் ஊடாகப் படம் பிடித்துக் காட்டிய ஓர் சமூக நோக்குள்ள சிந்தனைகளை இந்நூல் பதிவேற்றம் செய்துள்ளது. செய்திகள், கவிதைகள்,கட்டுரைகள், கடந்தகால நிகழ்வுகளில் நிழல்படங்கள் என இந்நூல் சமூகத்தை ஆவணப்படுத்தும் நோக்கிலும் சிறப்பாகப் பதிந்துள்ளது. எழுத்தாளன் வாழும் நாளிலே நூல் வெளியிட்டுக் கௌரவிக்கப்படுவது நிச்சயம் பாராட்டுக்குரியதே. அவ்வரிசையில் இப்படைப்பும் ஒருகாலத்தின் பதிவாக வர்ண அட்டையுடன் வெளியிட்டுள்ள கைதடி கலை இலக்கிய நண்பர்களின் முயற்சி வரவேற்பிற்குரியது.

★ ★ ★

## சுகமஞ்சரி




சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் கலாண்டு வெளியீடான மருத்துவ சஞ்சிகை "சுகமஞ்சரி" வெளிவந்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத் துறையின் தயாரிப்பு ஆலோசனையுடன் பல்வேறு நோய்கள் தொடர்பான மருத்துவ விளக்கங்களுடன் துறைசார் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக் கருத்துக்களையும் தாங்கி சுகமஞ்சரி வெளிவந்துள்ளது.

★ ★

## த ஓஷன் ஒவ் பேர்ல்ஸ்




ஆங்கில மொழியில் கவிதை எழுதுகிற சிலரில் எஸ். மகேஸ்வரனும் ஒருவராவார். சமுத்திரத்தில் மூழ்கி கவிதைகளாகிய முத்துக்களை இந்நூலின் வாயிலாக அவர் வழங்கியுள்ளார்.

எளிமையான சொற்களைப் பயன்படுத்தி எளிமையான கவிதைகளை அவர் படைத்துள்ளார்.

பல்வேறு தலைப்புக்களில் அவரது கவிதைகள் அமைந்துள்ளன.

அவரது கவிதைகளில் சில ஆங்கில கவிஞர் வேட்ஸ்வேர்த்தை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன. சமயம் மற்றும் அன்மீக சிந்தனைகள் நிறைந்தவையாக அவை காணப்படுகின்றன. வாசகனுடன் நேரடியாகப் பேசும் அவரது நடை பாராட்டுக்குரியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆங்கில ஆசிரியரான மகேஸ்வரனின் இந்நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

எஸ்.மோகனகிருஷ்ணன்.

# வாசகர் திருமுகம்

## டெங்கு நோயும், சுகாதாரச் சீர்கேடும்

நாடெங்கும் டெங்கு நோய் பரவி வருகின்றது. நாளாந்தம் இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. நோய்க்கான விழிப்புணர்வுகளையும், பரவுவதற்கான தடை வேலைகளையும் வெகு விரைவான நடவடிக்கை மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையும், இதர வைத்திய நிலையங்களும், யாழ். மருத்துவ மாணவர்களும், ஏனைய சமூக மன்றங்களும் சுகாதார அதிகாரிக்கும் மிகுந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு பகீரத முயற்சி எடுத்து வருவது பாராட்டப்பட வேண்டியது.

இந் நிலையில் குடா நாட்டிற்கான போக்குவரத்துக்கள் தாராளமாகி விட்டதன் விளைவாக தென் இலங்கையில் இருந்து வருபவர்கள், வியாபாரிகளால் எமது பகுதியின் சுகாதாரம் சீர் குலையும் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சோளம் விற்பனை செய்வோர், ஆரிய குளத்தில் இருந்து தண்ணீர் எடுத்து அத் தண்ணீரில் அதனை அவித்து விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதன் மூலம் தொற்றுநோய்கள் பரவுவதற்கு வழியுண்டாகும் என்பதை அவர்கள் கவனிப்பதில்லை என்றாலும் உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுக்காததை விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இதே போன்று யாழ். போதனா வைத்தியசாலையின் வீதியின் இரு மருங்கிலும் நடைபாதை வியாபாரம் செய்யக்கூடாது என்று கட்டளையிட்ட போதும் இந் நடைமுறை செயற்பாட்டில் உள்ளதா? இதன் மூலம் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படுவது மட்டுமல்ல பல சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. இதன்மூலம் பல நோய்கள் வரும் வாய்ப்புகளும் உள்ளன.

இவற்றினால் டெங்குநோய் மட்டுமல்ல பல விதமான தோற்று நோய்களும் தோன்றுவதற்கு இடம் கொடுத்தது போல நாம் செயற்படுகின்றோம். எனவே இக் கைங்கரியங்களில் ஈடுபடுவோரைக் கண்டிப்பதோடு , சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். மக்கள் நலன் நாடி.

# மக்கள் முகம்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தம்பிராசா சிவசுப்பிரமணியம் தனது 32 வருடகால ஆசிரிய சேவையில் இருந்து கடந்த 31 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார்.

கட்டுடையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 23 வருடம் ஆசிரிய சேவையாற்றிய துடன் பகுதித் தலைவராகவும், மாணவர்களை நல்வழிப்படுத்தும் சிறந்த கணிதபாட ஆசானாகவும் தனது சேவைக் காலத்தில் சிறப்பான பணி புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். (9)

★ ★ ★



யாழ்ப்பாணம் வண்.கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் கோயிலடியைச் சேர்ந்தவரும் வவுனியா மாவட்ட நீதிமன்றப் பதிவாளருமான துரையப்பா ஐயர் சுரேந்திரன் யாழ்ப்பாணம் குடியியல் மேல் முறையீட்டு மேல் நிதிமன்றப் பதிவாளராக நீதிச்சேவைக் குழுச் செயலாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (9)

★ ★ ★

புத்தூர் மேற்கைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் அண்மையில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றிவருவதுடன் இந்தியா பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமூகசேவை (Social work) துறையில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு வருகிறார். (9)

# ஊடகவியலாளர் சத்திய மூர்த்தியின் நினைவுகள் சில........



அரச ஊழியர்,அரசியல் ஆய்வாளர், ஊடகவியலாளர், இலக்கிய ஆர்வலர் என பன்முக ஆளுமை கொண்ட இவர் 15 வருடங்களுக்கும் மேற்பட்ட ஊடக அனுபவம் கொண்டவர். நேர்மையும் கனிவான பேச்சும் ஆழ்ந்த புலமையும் உள்ள இவர், மென்மையான புன்னகையுடன் வலம் வந்த நல்ல மனிதரும் கூட,ஊடகத் துறையே தன் வாழ்வெனச் செயற்பட்ட சத்தியமூர்த்தி தான் சார்ந்த பத்திரிகையில் பணியாற்றிய கமலநந்தினி என்பவரை மணம் முடித்தவர். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் உண்டு.

அநுராதபுரம், மன்னம்பிட்டியைச் சேர்ந்த அவர் சிறுவயது முதல் யாழ்ப்பாணம் மண்டைதீவில் வாழ்ந்தவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்விகற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர். 1995 இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இடப்பெயர்வுடன்பல்கலைக்கழககல்வியையும் இடைநிறுத்தி வன்னிப் பகு திக்குச் சென்றவர். தன் இறுதிக் காலம் வரை வன்னிப் பகுதியையே வாழ்விடமாகக் கொண்டிருந்தார்.

சுகாதாரத் திணைக்கள முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றிய இவர் ஊடகப் பரப்பில் தேசிய ரீதியில் அறியப்பட்டதைவிடச் சர்வதேச ரீதியில் அதிலும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையேயும் அவர்களது ஊடகங்களிலுமே அறியப்பட்டது அதிகம். அவர்களிடையே நன்கு பரீட்சியமா னவர். வீரகேசரி வார வெளியீட்டில் சமகால அரசியல் சார் கட்டுரைகளை சில காலம் வரைந்தவர். ஈழ நாதம்,வெள்ளி நாதம், நமது ஈழநாடு, பிரான்ஸ் ஈழமுரசு, கனடா உலகத் தமிழர் ஆகிய பத்திரிகைகளில் வாரா வாரம் சமகால அரசியல் விவகா ரங்களையும் நடப்பு சார் நிகழ்வுகளை யும் எழுதியவர்.

நீத்தார் நயப்புரை

ஐ.ரி.என். தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணியாற்றியதுடன் பல ஊடகங்களில் அரசியல் ஆய்வாளராக பிரத்தியேக நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர். இவற்றுடன் சங்கதி என்ற இணையத்தளச் செய்தியாளராகவும் பணியாற்றி தான் சார்ந்த மக்களுக்கு ஊடகங்கவூ வாயிலாகப் பெரும் பணியாற்றிய அவையடக்கமான மனிதர்.

சமாதானக் காலப்பகுதியில் வன்னியில் பல உள்ளூர், வெளியூர் ஊடகவியலாளர்களுடன் நட்புப்பாராட்டிய சத்தியமூர்த்தி, அவர்களால் நன்கு மதிக்கப்பட்டதும் நேசிக்கப்பட்டவருமான ஒரு ஊடகவியலாளர். இக்காலப்பகுதிகளில் நடைபெற்ற அனைத்துப் பத்திரிகையாளர் மாநாடுகளிலும் இவரைக் காணலாம். ஆங்கில மொழியில் நன்கு பரீட்சையமான இவரால் வெளியூர் ஊடகவியலாளர்களுடன் தொடர்ச்சியான உறவைப்பேணக் கூடியதாக இருந்தமை இவரது திறமைக்கும் சிறப்புக்கும் சான்றாகின்றது.வன்னியில் இடம் பெற்ற மிகப் பெரிய இடப்பெயர்வில் எறிகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகி 12.02.2009 இல் மரணமானார் என்ற செய்தி ஊடக நண்பர்களிடையே பெரும் தாக்கத்தையும் தவிப்பையும் ஏற்படுத்தியது. ஊடகத்துறையில் பணியாற்றும்போது தாக்குதலுக்கு இலக்காகி உயிர் நீத்த புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி பற்றி அதிகளவில் யாரும் கதைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமே.

காவலூரர் இ.விஜேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதிப் புரட்சிக் குற்றச்சாட்டின் பேரில் பொன்சேகா மீது நடவடிக்கைக்கு முனைந்தால் குழப்பம் உருவாகும்

## மேற்குலகைப் பகைக்கவும் நேரும் என்கிறது 'ரோய்ட்டர்'

கொழும்பு, பெப்.6

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா சதிப்புரட்சியொன்றுக்குத் திட்டமிட்டார் எனக் குற்றம் சாட்டும் அரசு, இந்த விடயத்தில் தீவிர நடவடிக்கைகளை எடுத்தால் அது உள்நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், மேற்குலகத்துடனான உறவுகளையும் பாதிக்கலாம் என 'ரோய்ட்டர்' செய்திச் சேவை எச்சரித்துள்ளது.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் இன்னும் பெரும் எண்ணிக்கையானவர்கள் முகாம்களிலேயே உள்ளனர். மேலும் இது தமிழ் சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மைச் சமூகத்திற்கும் இடையில் பாதிக்கப்பட்டுள்ள உறவைச் சரிசெய்வதற்கு உதவியாக அமைய வில்லை என்றும் 'ரோய்ட்டர்' சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை அரசியலில் எதிர்காலத்தில் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களைப் பட்டியலிட்டுள்ள 'ரோய்ட்டர்' அதிலேயே இவற்றைத் தெரிவித்துள்ளது.

தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்னவென்பதையும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள 'ரோய்ட்டர்ஸ்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏப்ரலுக்கு முன்னர் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி மிக வேகமாக நகர்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரை விட 18 வீத அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அவர் வென்றுள்ளமையைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுள்ளமையுடன் மனந்தளர்ந்துமுள்ளன. மேலும் தேர்தல் மோசடிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போகின்றன எனவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முயல்கிறார்.

இது அரசமைப்பை அவர் மாற்றுவதற்கும் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவக்கூடும்.

மஹிந்த ராஜபக்ஷவினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியுமா என்பது அவதானிக்க வேண்டிய விடயம். இது அவர் தீர்க்கமான கொள்கை மாற்றங்களை மேற்கொள்ள அவருக்கு உதவும்.

இதற்காக அவர் எதிர்க்கட்சிகளுக்கு நேசக்கரம் நீட்ட வேண்டி நேரலாம்.

மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் எவை என்பதும் முக்கியமானது. அவர் தேர்தலில் வெற்றி பெற்றால் எவ்வாறான கொள்கைகளைப் பின்பற்றுவார் என்பதை இது தீர்மானிக்கும்- என்றுள்ளது.

(சி)

# மக்களை வீதிக்கு அழைப்பதன் மூலம் அவர்களின் நேரத்தை வீணடிக்காதீர்கள்

## எதிர்க்கட்சிகளிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, பெப். 6

மக்களை வீதிக்கு அழைப்பதன் மூலம் அவர்களின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் - என்று எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை



விடுக் கிறது எனவும், எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தயார்ப் படுத்தல்களுக்காகவே எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் முடிவை விமர்சிக்கின்றன எனவும் அரசு தெரிவிக்கின்றது.

மேலும் சர்வதேசத்தின் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது எனவும், சத்தியாக்கிரகங்கள் நடத்துவதன் மூலம் வாக்குகளை பெறமுடியாது என்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

தேர்தல் முடிவுகளில் எந்த சிக்கலும் இல்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எனவே இதற்குப் பின்னரும் எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுவதில் அர்த்தம் இல்லை. கடந்த ஒன்றரை மாதங்களாகவே இவ்வாறு பிரசாரம் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் திட்டங்களை மேற்கொண்டன.

தேர்தல் நடைபெற்ற தினத்தன்று மாலை ஊடகங்களை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் தேர்தல் அமைதியாகவும் நீதியாகவும் நடைபெற்றது எனத் தெரிவித்திருந்தார். மேலும் அதற்காக பாதுகாப்புத் தரப்பினருக்கும் அரச ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது எதிர்க்கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்ய முயற்சிக்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? எதனை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்?

சத்தியாக்கிரகம் செய்வதன் மூலம் வாக்குகளைப் பெற முடியாது. எனினும் எதிர்க்கட்சிகள் ஏன் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றன என்று எம்மால் புரிந்துகொள்ள முடியும். அதாவது எதிர்வரும் பொதுத் தேர்தலில் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளிடம் விடயங்கள் இல்லை. எனவே இந்தத் தேர்தல் விடயத்தை பிரசாரமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

மேலும் சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பில் தவறான எண்ணத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. மக்கள் விடுதலை முன்னணி பாரிய வீழ்ச்சியைக் கண்டிருந்தது. கடந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலம் இந்த விடயம் புலப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்த முடியவில்லை. எனவே அவர்கள் வெளிப்படுத்திய புதிய வேட்பாளர் தோல்வியடைந்தார்.

அரச நிறுவனங்களில் பழிவாங்கல்கள் போன்ற சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வருகின்றன. அரசு அதனை முற்றாக நிராகரிக்கின்றது. எனினும் அவ்வாறு சம்பவங்கள் இடம்பெற்றால் அதுகுறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிக்கின்றோம்.

தேர்தலில் எதிரணி வேட்பாளர் வெற்றி பெற்றிருந்தால் தண்டனை வழங்குவதற்கு என்று அரசில் உள்ள முக்கியஸ்தர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் தேர்தல்களில் இவ்வாறு இடம்பெறவில்லை. இறுதி நாட்களில் எதிரணி வேட்பாளரின் வார்த்தைப் பிரயோகங்களை நாம் அவதானிக்க வேண்டும்.

நேரடியாக ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களை குறிப்பிட்டு சேறுபூசப்பட்டது. ஊடகசுதந்திரம் தொடர்பில் எந்த இடையூறும் இல்லை என்பதை அரசு சார்பில் தெரிவிக்கின்றேன்.

சில செய்திகள் தொடர்பில் விளக்கம் கோரப்பட்டுள்ளது. எனினும் எதிரணி வேட்பாளர் வெற்றிபெற்றிருந்தால் நாட்டில் பாரிய அழிவு ஏற்பட்டிருக்கும். இன்று காணப்படும் அமைதிநிலை இருந்திருக்காது - என்றார்.

(சி)

### போக்குவரத்து விதிகளை இளையோர் அனுசரிக்காததால் பொதுமக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதில்லையென பொதுமக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிள், உந்துருளி ஆகியவற்றில் பயணிக்கும் இவர்கள் வீதிகளை மறைத்துக்கொண்டு மூவர், நால்வராக சமாந்தரமாகச் செல்வதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

எனவே உரியவர்கள் இவர்களின் இச் செயலை நிறுத்தி போக்குவரத்து விதிமுறைகளைத் தீவிரமாக அமுல் செய்யுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ரி-341)

# இடி அமீன் நிர்வாகமே இலங்கையில்; கடுமையாகச் சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 6



கொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் வெள்ளை ஆடைகளை அணிந்து பூ தட்டுகளை ஏந்தி விகாரைகளுக்கு செல்வதுடன் போதி மரங்களையும் சுற்றி வருகின்றனர். இந்த வெள்ளை யாடை அணிந்தவர்களே கொலைகளைச் செய்கின்றனர். வீதிகளில் மக்களை வகைதொகையின்றி கொலை செய்யும் இடி அமீன் நிர்வாகமே இலங்கையில் இருக்கிறது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொரக்கா புளிகளை வேடன் வேட்டை இறைச்சியாக மாற்றுவானாம். அதுபோன்ற அரசே தற்போது ஆட்சியில் இருக்கிறது. கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அப்பாவிகளைப் பிடித்து சிறையில் தள்ளுகின்றனர். உண்மையான சூழ்ச்சியாளர்ளுக்கு மகுடம் சூட்டப்ப டுகிறது. கொலைகாரர்களுக்கு தண்டனை வழங்குமாறும் நாம் அரசை வலியுறுத் துகிறோம். நாட்டு மக்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுங்கள் என தாம் அரசிடம் கேட்டுக்கொள்வதாகவும் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் கடந்த 25 ஆம் திகதி கடுமையாகத் தாக்கப்பட்ட ஜே.வி.பியின் அம்பலாங்கொட பிரதேச சபையின் உறுப்பினர் சந்திரதாச நைதுவாவடு கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்தார். அந்த மரணத்தை இயற்கையான மரணம் என வெளிக்காட்ட அரசு முயற்சித்து வருகிறது.

இந்த கொலைப் பழியில் இருந்து அரசு விலகிச் செல்ல முடியாது. கொலை கலாசாரத்தையும் அதில் இருந்து மீள மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் ஜே.வி.பி. அருவருப்புடன் கண்டிக்கிறது. கடந்த 25 ஆம் திகதி இரவு அம்பலாங்கொட பொல்வத்தையில் இந்துனில் உள்ளிட்ட வன்முறையாளர்கள் சுமார் 15 பேர் தோழர் சந்திரதாச மீது தாக்குதல் நடத்தினர். இவர்கள் சாதாரணமாக அவரைத் தாக்கவில்லை. பொலிஸாரின் சித்திரவதை போன்ற தாக்குதலை அவர்கள் நடத்தியுள்ளனர்.

தலையில் பலகையொன்றை வைத்து இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர். இப்படித் தாக்கினால் உடலின் மேற்பகுதியில் காயம் ஏற்படாது. உட்காயங்கள் ஏற்படும் - என்றார்.

### கோண்டாவில் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.கோண்டாவில் பகுதியில் இரவு, பகல் நேரங்களில் அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மின் வெட்டு இல்லை எனப் பத்திரிகைகளில் செய்திகள் வந்த போதும் இப்பகுதியில் மின்வெட்டு தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதனால் கல்வி நடவடிக்கைகள் உட்பட சகலவற்றிற்கும் மின்சாரத்தை நம்பி உள்ள மக்கள் சிரமத்திற்கு ஆளாகின்றனர். தமது பிரதேசத்தில் மின்வெட்டு ஏற்படாத வண்ணம் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ரி-341)

# கட்சித் தாவல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஐ.தே.கட்சி தீர்மானம்

கொழும்பு, பெப். 6

கட்சித் தாவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டமொன்றை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தாவல்களில் ஈடுபடும் உறுப்பினர்களை பதவி விலக்குவதற்கு கட்சித் தலைமைக்கு அதிகாரம் வழங்கும் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பிக்கும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வுள்ளது.

கேகாலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்கள் இந்த யோசனைத் திட் டத்தை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித்க பிரேமதாஸவினால் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

உறுப்பினர்கள் கட்சித் தாவல்களில் ஈடுபடும்போது வாக்காளர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த யோசனைத் திட்டம் எதிர்வரும் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி



03.02.2010 புதன்கிழமை
காலமான மருத்துவர்
**இராமன் இராமசாமி**
அவர்களின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவர் ந.ஜெயராஜா, டி.ஏ.எம் (இல)
அம்பிகை வைத்திய நிலையம்,
வட்டக்கச்சி.

சுதேச மருத்துவர்கள்
*கிளிநொச்சி மாவட்டம்.*

(82456)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 கோடி ரூபா செலவில் ஊவாவில் வீதி அபிவிருத்தி

நுவரெலியா, பெப். 06

ஊவா மாகாணத்திலுள்ள வீதிகளை புனர்நிர்மானம் செய்யவென 200 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் குமாரசிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

இம்மாகாணத்திலுள்ள பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல வீதிகளை கொங்கிரீட் மூலம் புனர்நிர்மாணம் செய்வதற்கென திறைசேரி மூலம் இந்த நிதி ஒதுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

ஊவா மாகாண முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கிராமிய மற்றும் தோட்டப்புற வீதிகள் பலவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அந்த வகையில், பதுளை மாவட்டத்தில் பதுளை - குட்டியகொல்ல, கஹடரூபா இலுக்தென்ன வீதி, கன்தகொல்ல - எல்பமுல்ல வீதி, ஆகிரதென்ல - வெல்கொல்ல வீதி, எட்டாம்பிட்டி கெடவெல - கீனகலை - தோட்ட வீதி, கந்தேகெதர - கிரிஒருவ வீதி, சொரனாதொட்ட தோட்ட வீதி, மெதவெல - கிரேட் எல்ல வீதி, வெல்வூட் கிரவனாகமை வீதி, ஹீல்ஓய - கிதல் எல்ல வீதி, பூனாகலை - அம்பேதண் டகம தோட்ட வீதி, கும்பல்வெல - மகவேமுவான வீதி, வத்தலயாய - ஹபஒருவ வீதி, ஹெவனகும்புர - கெப்பெட்டிபொல வீதி,தன்கமுவ - மெதவெல, மூதனாவெல பொறகஸ் - சில்மியாபுர வீதி.

மொனராகலை மாவட்டத்தில் பதியதலாவை - தபனகுருகும்புர வீதி, யல்கும்புர - நன்னபுறாவ வீதி, ஹூலன்தாவ - கஹம்பான வீதி, தம்பகல்ல - தெலிவ வீதி, 9 ஆம் கட்டை - புத்தமவீதி, பகினி கஹவெல - ஒப்பேகமுவ வீதி, கொடயான - பத்தேகம வீதி, மெதகம - அலுபொத வீதி, அய்வெல - வெதியாய வீதி, கொட்போவ தித்தவெல்லகும்புர வீதி, இலுக்பத - ரதலியத்த வீதி, மீயனவத்த - கொடிகல்வென 5 ஆம் கட்டை - அதிமலை வீதி, சதுவதுர ஆர - கல்டம் மன்டிய வீதி, கந்த உடபங்குவ - முதுகண்டி வீதி, பொல்கஹபிட்டி - பகணிகஹவெல வீதி, யல்கும்புர - நன்னபுராவ வீதி, அமிவெல - கொடபோவ வீதி, செத்பதிகம - வெலிபிடிய வஹினகல வீதி, தம்வெல் ஓய - மியனகும்புர வீதி, ரனமுல்ல - படல்கும்புர போகஹபெலச வீதி, படல்கும்புர - கரவெல வீதி; ஒக்கம்பிட்டி - கல்லெம் மண்டிய வீதி, கும்புக்கன - நக்கல வீதி, ஹந்தபானகல் சந்தி-ஒக்கம்பிட்டி - போகஸ் தென்ன சந்தி வீதி, ரந்தெனிய - சியம்பலாகுனே வீதி, மொரகெடி கொவுல் ஆர வீதி, மொரகெடிய - அபேபூமி வீதி, கமேவெல வராதொல வீதி போன்றவை இந் நிதி மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன - என மேலும் தெரிவிக்கப்பட்டது.(ளி)

# பொலிஸாரை ஏற்றிச் சென்ற பஸ் மாத்தளை - தம்புள்ளை வீதியில் விபத்து

கொழும்பு,பெப்.06

கண்டி-பல்லேகலவில் நடைபெறும் ''தேசத்திற்கு மகுடம்'' கண்காட்சிப் பணியில் ஈடுபடுவதற்காகப் பொலிஸ் குழுவொன்றை ஏற்றிச்சென்ற இ.போ.ச.பஸ் மாத்தளை- தம்புள்ளை வீதியில் பாதையை விட்டு விலகி வீழ்ந்துள்ளது என்றும், அதில் பயணம் செய்தவர்கள் நூலிழையில் உயிர்தப்பினர் என்றும் தெரிய வருகின்றது.

எனினும், இதன்போது பஸ்ஸிலிருந்து துக்கிவீசப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவரின் கால் முறிந்ததால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிரே வந்த லொறியொன்றுக்கு இடம் கொடுப்பதற்காக சாரதி பஸ்ஸை ஓரம் கட்டியபோது பாதையில் இருந்த கான் ஒன்றில் அதன் சக்கரங்கள் இறங்கியதால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

கால் முறிவுடன் வைத்தியாசாலையில் சேர்க்கப்பட்ட கான்ஸ்டபிள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர் எனவும், விபத்துக்குள்ளானபோது பஸ்ஸில் நாற்பது பொலிஸார் இருந்தனர் என்றும் தெரிய வருகின்றது.

நாவுல பொலிஸ் பொறுப்பதிகாரி ஸ்ரீலால் ஹெட்டி ஆராச்சியின் தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# தேனீ வளர்ப்பை ஊக்குவிக்க கமநலசேவை அமைச்சு ஏற்பாடு

ஹரிஸ்பத்துவ,பெப். 06

ஹரிஸ்பத்துவ தொகுதியில் பிரபலமாகவும், சிறந்த வருவாய்தரும் தொழிலாகவும் விளங்கி தற்போது சோபை இழந்த நிலையில் காணப்படும் தேனீ வளர்ப்பை மீள் அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத் திட்டமொன்று மத்திய மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் நிமல் பியதிஸ்ஸவின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் தேனீ வளர்ப்பை ஊக்குவித்து, இத்துறையில் ஈடுபட்டுள்ளோரின் பொருளாதார வளத்தை மேம்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுக்கப்பட உள்ளதாகவும் கூறப்பட்டது.

சிறந்த குணவியல்புடனான தூய்மையான தேன் பொதுமக்களுக்குக் கிடைக்கவும் இத்திட்டம் மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப் படும்.

தேனீ வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு, இத்தொழிலை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான உபகரண வசதிகள், தொழில்நுட்ப வசதிகள், பயிற்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கவும் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ளி)




# மத்திய மாகாணத்தில் விவசாயக்கிணறுகள்

ஹரிஸ்பத்துவ,பெப். 06

மத்திய மாகாணத்தில் வரட்சிக்காலங்களில் அடிக்கடி நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதால், விவசாய முயற்சிகளை சிரமமின்றி மேற்கொள்ளும் பொருட்டு கண்டி , மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 16 விவசாயக் கிணறுகளை அமைக்க மத்திய மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் நிமல் பியதிஸ்ஸவின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் அடிப்படையில், முதற்கட்டமாக மாத்தளை மாவட்டத்தில் விவசாயக் கிணறுகளை அமைக்க 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப் பட்டது. (ளி)

# பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி கற்றல் செயற்பாடு பெப். 10 இல் ஆரம்பம்

கொழும்பு, பெப். 06

இவ்வருடம் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் 60 வீதம் பூர்த்தியடைந்துள்ளன என்றும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் ஒரு தொகுதியினருக்கான கல்வி நடவடிக்கைகள் இந்த மாதம் 10 ஆம்திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு 2010 ஆம் ஆண்டுக்குரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த வருடம் இடம்பெற்றன. இந்த நேர்முகப் பரீட்சைகளின் போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் ஒரு தொகுதியினர் இந்த மாதம் 10 ஆம் திகதி முதல் கல்லூரிக்குள் அனுமதிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழிமூலப் பாடநெறியில் சமூகக் கல்விப் பாடத்துக்கு 30 பேரும்,தமிழ் மொழிப் பாடத்துக்கு 30 பேரும், ஆரம்பக் கல்விப் பாடத்துக்கு 25 பேரும், விஞ்ஞானப் பாடத்துக்கு 20 பேரும், கணித பாடத்துக்கு 10 பேரும், நடன பாடத்துறைக்கு 10 பேரும், சங்கீத பாடத்துக்கு 25 பேரும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

சிங்கள மொழிமூலப் பாடநெறியில் ஆரம்பக்கல்விக்கு 15 பேரும், விஞ்ஞானப் பாடத்துக்கு 20 பேரும், கணித பாடத்துக்கு 25 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆங்கிலமொழி மூல தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கான போட்டிப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளதால் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் இடம்பெறவுள்ளன.

இந்தத் தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கு 22 தமிழ் மாணவர்களும், 8 சிங்கள மாணவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இந்தநிலையில் தமிழ்,சமூகக் கல்வி, ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்குப் பலத்த போட்டி காணப்படுவதால் தற்போது தோட்டத்தில் தொழில்புரிகின்ற தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கே முதலிடம் வழங்கப் படவுள்ளது.

இவர்களுள் உரியவர்கள் தெரிவு செய்யப்படாதவிடத்து தோட்டத்தொழிலிலிருந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அதன்பின்பு தோட்டத்தில் தொழில் செய்யாத இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிள்ளைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் தமக்குரிய பூர்த்தி செய்யப்பட்ட பிணைப்பத்திரங்களுடன் வருகை தருவதுடன், அரச மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும்- என்றார்.(ளி)

# அம்பேபுஸ்ஸவில் கப்பம் கேட்டு கடத்தப்பட்ட சிப்பாய் மாத்தறையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 06

அம்பேபுஸ்ஸ பகுதியில் கடத்தப்பட்ட லான்ஸ் கோப்ரல் ஒருவர் மாத்தறையில் மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அம்பேபுஸ்ஸ இராணுவமுகாமில் பணிபுரிந்த 23 வயது சிப்பாயான இவர் தனது வீட்டிலிருந்து பணிக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் கடந்த 28 ஆம் திகதி ஓட்டோ ஒன்றில் வந்த நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

அதன்பின் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் அவர் கடந்த முதலாம் திகதி மாத்தறைப் பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் இவர் இரண்டு லட்சம் ரூபா கப்பம் கேட்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பேபுஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ளி)

# இறப்பர்ச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

மொனராகலை மாவட்டத்தில் இறப்பர் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக இறப்பர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இம் மாவட்டத்தில் மொனராகலை, குமுக்கணை, புத்தள, வெல்லவாய, பிபிலை, மெத கமை நன்னப்புறாவ போன்ற இடங்களிலும், படல்கும்புர, நக்கல, ஹிலந்தாவ போன்ற இடங்களில் சுமார் ஆயிரத்து 800 ஹெக்டர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மானிய அடிப்படையிலான உரம் மற்றும் இறப்பர் கன்றுகளுக்கு விநியோகிக்கவும் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இம் மாவட்டத்தில் இறப்பர் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வோருக்கு ஹெக்டருக்கு ரூபா 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை வழங்கவும் அரசு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# கம்பளை விகாராதிபதி கொலை சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு ,பெப். 06

கம்பளையில் விகாராதிபதி உட்பட இருவரை கைக்குண்டு வீசிக்கொலை செய்த குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபரையும், மற்றொருவரையும் நேற்றுமுன்தினம் கம்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் களுத்துறை தெம்புவன பிரதேசத்தில் வீடொன்றில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மற்றைய சந்தேகநபர் லொத்தர் சீட்டு விற்பனையில் ஈடுபட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவருடன், இராணுவத்தில் இருந்து விடுமுறையில் வந்த சிப்பாய் இருவரும், இராணுவத்தை விட்டோடிய சிப்பாய் ஒருவரையும் கைது செய்ய நடவக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன எனக் கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பலியான மற்றைய நபரான வசந்தகுமார ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாவலப்பிட்டி அமைப்பாளரும், மின்சக்தி அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகேயின் ஆதரவாளருமாவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் ஆரம்ப விசாரணைகளின் பின் கம்பளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். - (ளி)

# கண்டியில் ஊடகவியலாளர்களுக்கு வீட்டுத்திட்டம்; ஜனாதிபதி அங்கீகாரம்

கொழும்பு,பெப். 06

கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க அவர்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றை ஏற்பாடு செய்ய ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அநுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் கடந்த 31 ஆம் திகதி ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது ஊடகவியலாளர்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக இந்த வீட்டுத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே, வடமத்திய மாகாண திஸாநாயக்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்து



திரு.திருமதி மா.துரைசிங்கம்
தம்பதியரின் புதல்வன்
திருநிறை செல்வன்
**றெக்ஸ்**
அவர்களுக்கும்

திரு.திருமதி அ.இராயப்பு
தம்பதியரின் புதல்வி
திருநிறை செல்வி
**மேரி மெற்றில்டா (விஜி)**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் இன்றைய தினம் (06.02.2010) சனிக்கிழமை பிரான்ஸில் திருமணம் நடைபெறவிருப்பதனால் இவர்கள் இருவரும் காலமெல்லாம் புனித காணிக்கை அன்னையின் துணையுடன் அருள் வரங்களினை நிறைவாகப்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திருமதி இராயப்பு,
இ.அன்ரன் குடும்பத்தினர் *(ஜேர்மனி)*,
ந.யோசப் அன்ரனி குடும்பத்தினர் *(பிரான்ஸ்)*,
இ.யோண்சன் குடும்பத்தினர் *(லண்டன்)*,
ஞா.சுரேந்திரன் குடும்பத்தினர்,
இ.ஜீவரட்ணம்,
இ.விஜயரட்ணம் *(ஜேர்மனி)*.

தவசிகுளம், மிருசுவில்.


## மன்னார் கோட்டைப் பகுதியில் அமைந்திருந்த சோதனைச் சாவடி அகற்றப்பட்டது

கொழும்பு, பெப். 6

மன்னார் கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் நீக்கப்பட்ட நிலையில் இப்போது சிரமமின்றி போக்குவரத்துகளை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும்பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நுழைவாயிலுக்கு அண்மையில் கோட்டை சோதனைச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. இங்கு கடற்படையினரதும், பொலிஸாரினதும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. கடற்படையினரின் சோதனைச்சாவடி ஏற்கனவே அகற்றப்பட்டது.

அந்தவகையில் தற்போது பொலிஸாரினது சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட்ட நிலையில் போக்குவரத்துகள் இயல்பாக இடம்பெற்று வருகின்றன. அதேவேளை, மக்கள் மயப்படுத்தப்பட்ட மன்னார் பஸ் டிப்போவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவைக்கட்டணம் நேற்றுமுன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கா[illegible]க் கட்டணம் 300 ரூபாவாக அறவிடப்பட்டு வந்தநிலையில், நேற்று முன்தினம் தொடக்கம் 221 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. (சி)

## இயற்றாலையில் புதிய மின்மாற்றி

சாவகச்சேரி, பெப்.6

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகம், வரணி- மீசாலை வீதிகளில் இயற்றாலைப் பகுதியில் புதிதாக மின்மாற்றி ஒன்றை நிறுவியுள்ளது. இதன் மூலம் அந்தப் பிரதேச மக்களுக்கு சீரான மின்சார விநியோகம் கிடைக்கவுள்ளது. (ஒ-131)




**e-Type now launched in Sri Lanka!**

Writing has now given way to typing as a means of communication. And e-Type, is the ideal course for developing typing skills for those using the computer keyboard. It does away with 'two finger typing' and helps the individual gain speed, accuracy and efficiency while building confidence and increasing productivity.

The training course can be carried out at work or at home at the learner's own pace. Endorsed by the British Computer Society, e-Type is a great course for beginners and experienced computer users alike.



**GATEWAY LANGUAGE AND ICT CENTRE JAFFNA**
*347, Kasthuriyar Road,*
*Jaffna.*

*Phone : 021 222 7967 / 021 567 5555*
*E-mail : gatewayjfn@sltnet.lk*

ICDL Sri Lanka | ECDL Foundation | BCS | e-TYPE


# இராணுவத் தரப்புத் தகவல்களை அதிகாரிகளிடமிருந்து பெறுவதற்குச் செய்தி ஊடகங்களுக்குத் தடை விதிப்பு

## படைசார் ஊடகப் பேச்சாளர்களுக்கே அதிகாரம்

கொழும்பு, பெப். 6

இராணுவத் தரப்பைச் சேர்ந்த தளபதிகள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் எவரும் அனுமதியின்றி நேர்காணல்கள், செய்திகளைப் பெற்றுக்கொள்ளுதல் தடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக முப்படையினர் மற்றும் பொலிஸ் துறையில் இடம்பெறும் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

- ஏன்று அரச பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்லவின் கையெழுத்தில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில் இராணுவம் மற்றும் பொலிஸ் துறையினர் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்களை வெளியிடும் உரிமை அவற்றின் ஊடகப் பேச்சாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த அதிகாரிகளை ஊடகங்கள் தொடர்புகொள்ள வேண்டுமாயின் அது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயராஜபக்ஷவிடம் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுமதி கோரும் முன்னர் அது குறித்து தமக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் என லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளில் பணியாற்றும் அதிகாரிகளிடம் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களையும் அவர்களின் செவ்விகளையும் வெற்று சில ஊடகங்கள் அவற்றை வெளியிட்டு வருகின்றன. எவ்வித பொறுப்புமற்ற வகையில் அவர்கள் வெளியிடும் தகவல்களால் மக்கள் தவறாக வழி நடத்தப்படுவதுடன் நாட்டின் பாதுகாப்புக்கும் நேரடியான அழுத் தங்கள் ஏற்படுகின்றன என்றும் ஹுலுகல்ல குறிப்பிட்டுள்ளார்.

இதனால் நடைமுறையில் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (சி)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**
PACKED BY: *Industries*
**ROYAL** *Colombo 12*
*T.P 0777277670*
அனைத்துப்பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணைப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## கிழக்கில் ஒரு தொகுதியினர் மீள்குடியேற்றம்

கொழும்பு, பெப். 6

திருகோணமலை ஆலங்கேணி பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களில் இருந்து ஒரு தொகுதியினர் நேற்று முன்தினம் மீள் குடியேற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலங்கேணிப் பிரதேசத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் நேற்று முன்தினம் மீள் குடியேற்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் கட்டைப்பறிச்சான் பகுதியில் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரண்டு பஸ்களில் நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுள்ளது. (சி)


# அரிய சந்தர்ப்பம்......!



**தகவல் தொடர்பாடற்றுறையில் சர்வதேச அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள்.**

ICDL | ICDL Advanced | e-Citizen
ICDL CAD | ICDL ImageMaker | ICDL WebStarter

e-TYPE அறிமுகமாகியுள்ள புதிய பல தேர்வுகள் உங்களுக்காகவே....

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.02.2010 பி.ப 3 மணி**

**GATEWAY LANGUAGE AND ICT CENTRE**
347, Kasthuriyar Road, Jaffna. Phone: 0215675555 / 0212227967



**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவானவிலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம்.புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.விலைக்கழிவுகள் உண்டு.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கல்டி.T.P.0217912783.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளவை நோக்கி தி.மு.க.!

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் பிள்ளைகளான துணை முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் அவரது மூத்த சகோதரர் மத்திய அமைச்சர் அழகிரி ஆகியோருக்கு இடையிலான அதிகாரப் போட்டியில் சிக்கித் தவிக்கின்றது ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் - இந்த அரசியல் சர்ச்சை பற்றிய ஒரு மேலோட்டமான கண்ணோட்டம் இது.


அன்பழகன்

ஆரம்பத்தில் அழகிரி அரசியல் போட்டியில் ஈடுபடாமல் ஒதுங்கித்தான் இருந்தார். அதன் பிறகு தென்மண்டலப் பொறுப்பாளர், எம்.பி., மத்திய மந்திரி என விஸ்வரூபம் எடுத்தார். அவரின் இந்த வளர்ச்சி, தி.மு.க.வில் அசைக்க முடியாத சக்தியாக கட்சியினரைப் பிரமிக்க வைத்திருக்கிறது.

இன்னொருபுறம் துணை முதல்வர் நாற்காலியில் ஸ்டாலினை அமரவைத்து அழகு பார்க்கிறார் கருணாநிதி. தந்தை என்கிற முறையில் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முதல்வர் பார்த்துப் பார்த்து செய்யும் ஒவ்வொரு விஷயமும் கட்சியின் மூத்த தலைவர்கள் மத்தியிலும் அவர்களது ஆதரவாளர்களிடையேயும் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது. இதில் பலரின் நிலைப்பாடு - எதிர்காலத்தில் யார் பக்கம் நிற்பது என்பதே மிகப்பெரிய


அழகிரி

கேள்வியாக இருக்கிறது. இன்னும் சில மூத்த தலைவர்கள் அரசியலிலிருந்தே ஓய்வு பெற்றுவிடும் எண்ணத்திலும் இருக்கின்றனர். இது முதல்வருக்கும் தெரியாமலில்லை. இவ்வளவு காலமும் பிரச்சினை என்று வருகிறபோது அன்பழகன் போன்ற மூத்த தலைவர்கள் மூலம் சமாதான முயற்சி மேற்கொள்ளப்படும். சமீபத்திய நிகழ்வுகளில் முதல்வரே நேரடியாக சமாதான முயற்சியை மேற்கொள்கிறார். சுமூகமான நிலையை எட்ட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று மூத்த தலைவர்கள் கூறுகின்றனர். யாருக்கும் பாதகம் ஏற்படாமல் முதல்வர் பிரச்சினையைத் தீர்க்க நினைக்கிறார். அதுதான் சிக்கலே என்கின்றனர் அவர்கள்.

சமீபத்தில் முதல்வரின் பெங்களூர் 'விசிட்'கூட சமாதான முயற்சிப் பயணமாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் சமாதானப்படுத்தப்பட வேண்டிய இருவரில் ஒருவர் வெளிநாடு சென்றுவிட்டதால் வரமுடியவில்லை என்று கூற இதையே காரணமாகச் சொல்லி மற்றவரும் பெங்களூர் செல்லாமல் புறக்கணித்துவிட்டார். முதல்வரின் இந்தப் பயணம் தோல்வியில் முடிந்துவிட்டதாகவே கூறுகின்றனர் நோக்கர்கள்.

இதன்பிறகு பல முக்கிய திருப்பங்கள் நடந்தேறி இருக்கின்றன. இடைத்தேர்தலில் வெற்றிக்குப் பிறகு வேட்பாளர்களுடன் முதல்வரை சந்திக்கும் அழகிரி திருச்செந்தூர் இடைத்தேர்தல் வெற்றியின்போது முதல்வரை சந்திக்காமல் தவிர்த்தார். பொங்கல் பரிசாக ஸ்டாலினுக்கு ஆதரவாக ஏதாவது நடக்கும் என்றிருந்த நிலையில் முதல்வரைச் சந்தித்தார் அழகிரி. இதனால் பொங்கல் பரிசாக முதல்வருக்கு இணையான சலுகைகளை துணை முதல்வரும் பெறுவார் என்ற அறிவிப்போடு நின்றுபோனது விவகாரம். ஆனால் இந்த சந்திப்பில் காரசார விவாதமே நடந்தது என்கின்றனர் மூத்த தலைவர்கள்.

தனது பிறந்தநாள் நிகழ்ச்சிக்குப் பிறகு (ஜனவரி 30) எந்த நேரத்திலும் மத்திய மந்திரி பதவியை இராஜினாமா செய்துவிடுவார் என அழகிரி சொல்லி இருக்கிறார். அதற்கான கடிதத்தையும் முதல்வர் முன்பு வைத்துவிட்டு வந்தார் எனவும் சொல்கின்றனர். அதற்கு மாற்றுப் பதவி தருவதோ அல்லது தன்னை ஒதுக்கி வைப்பதோ முதல்வரின் விருப்பம் என்றும் சொல்லி இருக்கிறார் அழகிரி. முதல்வர் தனது ஓய்வு முயற்சியை தள்ளி வைத்தால் அழகிரி அமைச்சர் பதவியில் நீடிப்பார் என்றும் சொல்கின்றனர்.

ஸ்டாலின் முதல்வராகும் நிலையில் தனக்கு துணை முதல்வர் பதவி மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி தரப்பட வேண்டும். அதோடு அடுத்த தேர்தல் வரை கட்சியின் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்டிருக்கும் 32 மாவட்டங்களில், தற்போது தென்மண்டல பொறுப்பாளர் என்கிற நிலையிலிருக்கும் ஒன்பது மாவட்டங்களுடன் கூடுதலாக கோவை, திருச்சி என மேலும் சில மாவட்டங்கள் - அதாவது கட்சியின் சரிபாதி அளவிற்கு - பொறுப்புத் தரப்பட வேண்டும் என்கிற ரீதியில் தனது ஆதரவாளர்களின் கோரிக்கையாக சொல்லி இருக்கிறார் அழகிரி.

அதோடு, 'அடுத்த தேர்தல் வரை தாங்களே முதல்வராக நீடிக்க வேண்டும். வரும் தேர்தல் முடிவிற்குப் பிறகு வெற்றி பெற்றவர்கள் முதல்வரை தேர்வு செய்யட்டும்' என்றும் அழகிரி வாதாடினார் என்றும் சொல்லப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில்தான் செய்தியாளர்களிடம் முதல்வர் தாம் பதவியில் தொடர்ந்து நீடிப்பார் என்றும் கூறி இருக்கிறார்.


ஸ்டாலின் ஆதரவாளர்கள் மத்தியில் அழகிரியின் இந்த வியூகம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை அழகிரி குறிவைத்திருப்பது கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான ஒரு தந்திரமாகவே அவர்கள் பார்க்கின்றனர். நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக கருணாநிதி தலைவர் என்கிற நிலையில் இருந்தாலும் கட்சிக்குள் அதிகாரம் மிக்க இடமாக பொதுச் செயலாளர் பதவிதான் இருக்கிறது. கட்சியிலிருந்து நீக்குவது, அறிவிப்பது எல்லாமே பொதுச் செயலாளர்தான். எம்.ஜி.ஆர். நீக்கப்பட்டபோது கூட ''நான் நீக்கவில்லை. (கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த) நாவலர்தான் நீக்கினார்'' என்று கலைஞர் சொன்னமை நினைவுகூர்கின்றனர்.

இதை எதிர்த்து ஸ்டாலினும் அதிருப்தியை வெளிப்படுத்தினார் எனக் கூறுகின்றனர். கட்சிப் பொதுச்செயலாளர், துணை முதல்வர் இரண்டும் அழகிரிக்கு என்றால் தான் டம்மி முதல்வராகத்தான் இருக்க முடியும். சுதந்திரமாக செயல்பட முடியாத நிலையே இருக்கும். இதைத் தவிர்த்து மாற்று வழிதான் ஸ்டாலின் நலனுக்கு ஏற்றதாக இருக்கும் என்பதே அவரது ஆதரவாளர்களின் கருத்து.

அண்ணன் - தம்பிக்கு இடையே நடக்கும் நிழல் யுத்தம் மூத்த தலைவர்களை மாற்றி யோசிக்கவும் செய்திருக்கிறது. அழகிரி அதிகார மையத்திற்கு வரும் சூழல் உருவானால் தி.மு.க. உடையும் நிலை உருவாகலாம். தயாநிதி சகோதரர்கள் அழகிரியுடன் அனுசரித்துப் போகாத நிலை இருந்தாலும் ஸ்டாலினுடன் சுமூகமாகவே இருக்கின்றனர். தந்தை மாதிரியே டெல்லிக்கு சகோதரர்களும், தமிழகத்திற்கு தானும் என்கிற ரீதியில் செயல்பட விரும்புகிறார் ஸ்டாலின். அழகிரிக்கு இதில் உடன்பாடில்லை.

தற்போது உள்ள நிலையிலேயே இடைத்தேர்தல் பிரசாரம், கட்சி நிகழ்ச்சி என எதிலும் தயாநிதி மாறனுக்கு முக்கியத்துவம் இல்லாத நிலையே இருக்கிறது. அழகிரி அதிகார மையத்திற்கு வரும்போது இதன் தாக்கம் இன்னும் அதிகமாகவே இருக்கும். அப்போது தயாநிதி சகோதரர்களும் தங்கள் பாதுகாப்புக்காக முக்கிய முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

''ஏற்கெனவே மத்திய மந்திரி பதவியிலிருந்து தயாநிதி இறக்கப்பட்டபோது 17 மாவட்டச் செயலாளர்கள், 36 சட்டமன்ற உறுப்பினர்கள், இரண்டு மூத்த அமைச்சர்கள் உட்பட தயாநிதிக்கு ஆதரவாக வெளியேறத் தயாராக இருந்தார்கள். தயாநிதி 'தாத்தா இருக்கும்வரை எதுவும் செய்ய மாட்டேன்' என்பதில் உறுதியாக இருந்தார். அதனாலேயே அப்போது ஏற்படவிருந்த பிளவு தவிர்க்கப்பட்டது. அவர்கள் இப்போதும் தயாநிதிக்கு


தயாநிதிமாறன்

விசுவாசமானவர்களாகவே இருக்கின்றனர். அதோடு சமீபகாலமாக இரண்டு நடிகர் மன்றத்தினர் தயாநிதிக்கு ஆதரவாக களமிறங்கத் தயாராக உள்ளனர். இதனால் ஒரு முக்கிய மாற்றுக் கட்சியில் அவருக்கு நல்ல பதவி கொடுக்கவும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் தயாநிதியும் கட்சிக்குள் நிழல் உருவில் பலமாகவே இருக்கிறார். இது தெரிந்துதான் கருணாநிதியும், ஸ்டாலினும் அவர்களை அரவணைத்துச் செல்கின்றனர்'' என்கின்றனர் மூத்த தலைவர்கள்.


கலைஞர்

இப்படியும் ஒரு தகவலைச் சொல்கின்றனர். 'அழகிரி மத்திய மந்திரி பதவியை இராஜினாமா செய்தால் துணை முதல்வர் நாற்காலியைப் பிடிக்க வசதியாக பென்னாகரம் தொகுதியில் போட்டியிடவும் வாய்ப்பு உண்டு.'


ஸ்டாலின்

இதனால் அவரது பிறந்தநாள் விழாவிற்குப் பிறகு தி.மு.க.வில் பல அதிரடி மாற்றங்கள் நடக்கும் என்கிற எதிர்பார்ப்பு மூத்த தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

அதோடு அழகிரிக்கு பொதுச் செயலாளர் பதவி கொடுக்க முடிவு செய்துவிட்டார் எனவும் சொல்கின்றனர். சமீபத்திய விருது வழங்கும் விழாவில் பேசிய முதல்வர் ''நான்

**பெருமாள் அழகர்**

இல்லாவிட்டாலும் ஒருவேளை அன்பழகன் இல்லாவிட்டாலும் பணியை தொடர்ந்து செய்வார் துணை முதல்வர்'' என்று பேசியமையை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அன்பழ கன் இல்லாவிட்டால் என்கிற வார்த்தையை திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி இது ஏன் என்று கேட்கின்றனர்.

மேலும் 2001 ஆம் ஆண்டு தேர்தலிலேயே அழகிரியின் விஸ்வரூபத்தை தி.மு.க. தலைமை பார்த்திருக்கிறது. தென் மாவட்டங்களில் தான் சிபாரிசு செய்தவர்களுக்குப் போட்டியிட வாய்ப்புக் கொடுக்காததால் மறைந்த பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் போட்டியிட்ட தொகுதி உள்பட பத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளில் தோல்விக்கு வழி வகுத்தார். இப்போது தென்மண்டல பொறுப்பாளராக இருக்கும் நிலையில் அழகிரி எதிர்பார்ப்பது நடக்காது போனால் வரவிருக்கும் தேர்தலில் தி.மு.க. ஆயிரமாயிரம் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்கின்றனர் மூத்த தலைவர்கள்.

ஆக, பெப்ரவரி மாதத்திலிருந்து தி.மு.க.விற்குள் திருப்பங்கள் ஏற்படும் நிலை உருவாகி இருக்கிறது. முதல்வர் எடுக்கும் முடிவில் தி.மு.க.வின் எதிர்காலமே இருக்கிறது என்கின்றனர் மூத்த தலைவர்கள். ★★★★★★★★★

நன்றி - 'சூரிய கதிர்' இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். சிலருக்கு நீங்களாக முன்வந்து பொருள் உதவி செய்வீர்கள். உடன் பிறப்புகள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். உங்களின் சில அனுபவங்களை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசுவீர்கள்.

### இடபம்



மனதில் பட்டதைச் சரியென செய்யும் நாள். இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட காரியம் இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். போட்டிகள், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். உறவினர் ஒருவர் கடந்த காலத்தில் செய்த உதவிக்கு இப்போது பதில் உதவி செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள்.

### மிதுனம்



விரதம், இறைவழிபாடுகளில் நாட்டம் செல்லும். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையான அணுகுமுறை அவசியம். சங்கடம் தரும் செய்திகளை அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். ஆடம்பரத்தைத் தவிர்க்கச் சிக்கனமாக இருப்பது நல்லது.

### கடகம்



மற்றவர்கள் சிலரின் பொருளுக்கு ஆசைப்படுவீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் சிலரின் செயற்பாடுகளைப் பார்த்துப் பொறாமைப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு அதைக் காப்பாற்றப் பிரயத்தனம் செய்யலாம்.

### சிங்கம்



பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். பழைய அனுபவங்களைப் புதிய விஷயங்களில் செயற்படுத்துவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். பெரிய மனிதர்கள் சிலர் மூலம் காரியங்களை முடிக்க வாய்ப்புக் கிடைக்கும். புதியவர்களின் நட்பைப் பெறலாம். கனவுகள் பலிக்கும் நாள்.

### கன்னி



வீண் பேச்சுக்கள் பேசி, அரட்டை அடித்து நேரத்தைப் போக்குவீர்கள். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். வேறு வேலைகள் காரணமாக வழக்கமான பணிகளைச் செய்ய முடியாமல் லீவு எடுக்கலாம். உடல் நலக்குறைவால் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

### துலாம்



சிக்கலான சிலரிடமும் சாமர்த்தியமான பேச்சுக்களால் கவிழ்த்துக் காரியம் சாதிப்பீர்கள். மாற்றுமத அல்லது மாற்று மொழி பேசும் நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். தொழில் விடயங்களில் யாரிடமும் சிடுசிடுப்பாக நடந்து கொள்ள வேண்டாம். நாளை சந்திக்க் நினைத்த நண்பர் ஒருவரை இன்றே சந்திக்கலாம்.

### விருச்சிகம்



மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கடன் மீதிகளைச் செலுத்தலாம். பொறுப்பில்லாமல் செயல்படும் குடும்ப உறுப்பினர்கள் மீது கோபம் கொள்ளலாம். இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம்.

### தனுசு



கருணை, பரிவுடன் நடந்து கொள்வீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிக, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலரிடம் ஆலோசனை கேட்டு முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள்.

### மகரம்



அசட்டுத் தைரியம், துணிச்சலுடன் சில வேலைகளைச் செய்வீர்கள். பல நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தலையிட்டுத் தீர்த்து வைப்பீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். ஆறுதலான நாள்.

### கும்பம்



பிள்ளைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர் ஒருவரின் செயற்பாடுகளால், கோபம், எரிச்சல் அடையலாம். விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். மற்றொருவருக்குக் கிடைத்த வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கவில்லையே என, வருத்தம் அடைவீர்கள். உங்களின் கருத்தை மற்றவர்கள் மீது திணிப்பீர்கள்.

### மீனம்



மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களிடம் காட்டலாம். உங்களின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டி சிலர் கேலி, பேசலாம். வாக்குவாதங்களை, மோதல்களை தவிர்க்க வேண்டும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். உங்களை புரிந்து கொள்ளாமல் சிலர் செயற்படலாம். கவனம் அவசியம்.

## மடுவிலிருந்து தலைமன்னார் வரையான ரயில்பாதையை புனரமைக்க நடவடிக்கை

### ரயில்வே திணைக்கள அதிகாரி தகவல்

கொழும்பு, பெப். 6

மன்னார் மடுவிலிருந்து தலைமன்னார் வரையிலான ரயில்பாதையை புனரமைப்புச் செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி புனரமைப்புப் பணிகள் எதிர் வரும் வாரமளவில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்கள வர்த்தகப் பிரிவின் அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

63கிலோமீற்றர் தூரமுடைய குறித்த ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இந்த ரயில்பாதையின் புனரமைப்புப் பணிகளுக்காக 10 லட்சத்து 149 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படவுள்ளது. அத்துடன், எதிர்வரும் 2 வருடங்களில் புனரமைப்புப் பணிகளை நிறைவுசெய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## தென்மராட்சியில் நெல் அறுவடை மும்முரம்

சாவகச்சேரி,பெப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

தனங்களப்பு, மறவன்புலோ வயல்வெளி மற்றும் வரணி, மட்டுவில், சரசாலை, கைதடிப் பகுதிகளில் நெல் நல்ல விளைச்சலைத் தந்துள்ளதால் மக்கள் ஆர்வமுடன் அறுவடைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்ப கட்டத்தில் கடும் மழை பெய்து வெள்ளம் ஏற்பட்ட போதும் பின்னர் நிலைமை சீரானதால் விவசாயிகள் பாதிப்பில் இருந்து விடுபட்டுத் தற்போது சிறப்பான விளைச்சலைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை குறிப்பிட்ட சில பகுதி வயல்களில் பன்றிகள் பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதனால் கொட்டும் பனியிலும் விவசாயிகள் வயல்வெளிகளில் கொட்டில்கள் மற்றும் பரண்கள் அமைத்துக் காவலில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-131)

## தென்மராட்சியில் கபடிப் பயிற்சி முகாம்

கைதடி,பெப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் கபடி விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் கபடிப் பயிற்சி முகாம் ஒன்றைப் தென்மராட்சிப் பிரதேச செயலகம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்த உள்ளது.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய மைதானத்திலே பிற்பகல் 3 மணிக்கு இந்நிகழ்வு இடம் பெறவுள்ளதாகவும் ஆர்வமுள்ள கழகங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.முகுந்தன் தெரிவித்துள்ளார். [illegible]


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகர் சின்னத்துரை

அன்னை மடியில் 25.08.1924

இறைவன் அடியில் 18.01.2009

திதி: அபரபக்க அட்டமி

ஓராண்டு கழிந்ததுவோ அன்புத் தந்தையே!
ஓயவில்லையே உன் குரலின் எதிரொலிப்பு
அரவணைத்துக் காத்து வளர்த்திட்ட
அன்புத் தெய்வமே!
என்றென்றும் எம் மனதில்
உங்கள் ஆத்மா சாந்திபெற
வணங்கிடுவோம் எம் அருமைத் தூயவரே!

தகவல்: மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

43/10, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (94612)



ரூபா 50/- மட்டுமே

சுகவாழ்வு Health Guide ஆரோக்கிய சஞ்சிகை ISSN 1800-4970

ஒவ்வொரு மாதமும் 1 ஆம் திகதி வெளிவருகிறது

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்! பாத்துப் பயன் பெறுங்கள்




உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து ஆரோக்கியத் தகவல்களும் அடங்கியது

எல்லா பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு 021 2222730, 021 5670166, பிரதான முகவர் 021 5670052

117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த 'ஒளிவிழா' நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. யூட் நிக்ஷன் அடிகளார், வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன், உரும்பிராய் இம்மானுவேல் ஆலய பங்குத்தந்தை டாஷியல் நிக்ஷன் அடிகளார் ஆகியோர் நிற்பதையும், நத்தார்த்தாத்தா வேடமணிந்த ஒருவர் நடனமாடி சபையோரை மகிழ்விப்பதையும் படத்தில் காணலாம். (49)




பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளையும், கோழிக்கூடுகளையும் அண்மையில் வழங்கியது.

இந்த நிகழ்வில் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் குடும்பம் ஒன்றுக்கு கோழிக்கூட்டையும், கோழிக்குஞ்சுகளையும் வழங்கி விளக்கமளிப்பதையும், அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்; கர்ணன்)



வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை கையளித்து பதவியேற்கும் வைபவம் செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மத்தியஸ்தர் சபை உறுப்பினர் ஒருவருக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா நியமனக்கடிதத்தை வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஜ், உதவிப்பிரதேச செயலர் செல்வி ச.பிறேமினி ஆகியோர் நிற்பதையும் காணலாம். (அச்சுவேலிச் செய்தியாளர்)



வாழ்வகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழாவின்போது புனித பத்திரிசியார் கல்லூரி வணிகமாணவர் ஒன்றியத்தினால் உலோகமணி ஒன்று வாழ்வக மாணவர் பயன்பாட்டுக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் கல்லூரியின் பகுதி முதல்வர் அருட்திரு. அருட்செல்வன் அடிகளார் மணியினை வாழ்வக பொருளாளர் எஸ்.கமலநாதனிடம் கையளிப்பதனையும் அருகில் வணிகமாணவர் ஒன்றியச் செயலாளர் செல்வன் கொலின்டன் மற்றும் செல்வன் தனிசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதிப்பங்களிப்புடன் ''கமநெகும'' திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்ட ஜே/ 70 குருநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கதிற்றல் ஒழுங்கை அண்மையில் உத்தியோகபூர்வமாக யாழ். பிரதேச செயலாளர் சுகுனா தெய்வேந்திரனால் நடாவெட்டி மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்டபடம். அருகில் யாழ்.சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.கீயூமன், உதவிதிட்டமிடல் பணிப்பாளர் கே.கே.சிவச்சந்திரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.வினோத ஆனந்தன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்; தமிழினியன்)




செலிங்கோ ஆயுள்காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளையில் காப்புறுதி பெற்றவருக்கான மரண இழப்பீட்டுக் கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த சபா நடேசன் என்பவருக்கான மரண இழப்பீட்டுக் கொடுப்பனவாக 3 லட்சம் ரூபாவை நிறுவனத்தின் பதில் விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் பா.நந்திகுமார் சபா நடேசனின் தாயாரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

விற்பனை ஆலோசகர் மு.மதுசன், விற்பனை நிறைவேற்று அதிகாரி திருமதி ப.ரேணுமதி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (16)



பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி மல்லாகம் நீதி மன்றத்திற்கு இடமாற்றலாகிச் சென்ற நீதிபதி கே.அரியநாயகத்திற்குப் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் அளித்த பிரிவுபசார நிகழ்வில் நீதிபதி கே.அரியநாயகம், புதிதாக பதவிஏற்றுள்ள பருத்தித்துறை மாவட்டநீதிபதி திருமதி ஜோய் மகாதேவா, முன்னர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி வவுனியாவுக்கு இடமாற்றலாகிச் சென்ற நீதிபதி அலெக்ஸ், இளைப்பாறிய நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், திருமதி அரியநாயகம், சட்டத்தர[illegible] ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதையும்-

சட்டத்தரணிகள் சபா, ரவீந்திரன், பொ.குமாரசாமி, த.வேலாயுதம், எஸ்.சிவநேசன், ஏ.கே. நடராசா ஆகியோர் பின்வரிசையில் நிற்பதையும் படத்தில் காணலாம் (படம்: கர்ணன்)



யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் பெங்கல் விழாவை முன்னிட்டு ஜே/ 70 [illegible] அலுவலர் பிரிவு அத்தியடி ஸ்ரீ வீரகத்தி சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சமுர்த்தி [illegible]களுக்கு இடையே தேங்காய் துருவும் போட்டி கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

(படம்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு**

கோண்டாவில் பகுதியில் 4 சிறி... தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. ஞாயிறு பார்வையிடலாம்.
தொடர்பு: 0213214895,0779779769


# விபத்துக்களில் சிக்கி இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.6

மோட்டார் சைக்கிள் - மிதிவண்டி விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்த சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றன.

மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் மீசாலையைச் சேர்ந்த எஸ்.விஜயகீலா (வயது - 21) என்பவரும், நுணாவிலில் இடம்பெற்ற விபத்தில் ஏ.நாகராசா (வயது-65) என்பவரும் காயமடைந்துள்ளனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எஸ். விஜயகீதா என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குஅனுப்பிவைக்கப்பட்டார்.(ரி-207)

## 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மாட்டின் செல்லத்துரை**

மலர்வு 10★03★1910 உதிர்வு 06★02★1975

வருடங்கள் பல சென்றாலும்
நீங்காத்துயர் தன்னில் என்றும் உங்கள்
நினைவுடன் நீந்துகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

44, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (94638)

# தென்பகுதி யாத்திரிகர் வருகை அதிகரிப்பு

ஒட்டுசுட்டான், பெப்.6

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தென் பகுதி மக்கள் வருகை அதிகரித்துள்ள தனியார் பேரூந்துகளிலும் அரச பேரூந்துகளிலும் தினமும் வருகைதரும் இவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கும் சென்று தரிசிப்பதுடன் இப் பகுதியில் காணப்படும் உற்பத்திப் பொருள் களையும் மிகவும் விரும்பிக் கொள்வனவு செய்து வருகின்றனர். குறிப்பாக பனங் கிழங்கு, பனங்கட்டி, ஒடியல், மரவள்ளி போன்றவற்றை மிகவும் விரும்பி வாங்கிச்செல்கின்றனர். (ரி-341)

## மரண அறிவித்தல்

### கந்தையா புவனேஸ்வரன்



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா புவனேஸ்வரன் நேற்று (05.02.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், கஜேந்திரா (பிரான்ஸ்), மயூரன், கார்த்திகா (தரம் - 8, யாழ். இளவாலை கன்னியர் மடம் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, லோகநாதன், தங்கப்பிள்ளை மற்றும் முருகையா, இராசேந்திரம் (ஜேர்மனி), சின்னத்தங்கம், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விமலாதேவி, தர்மபுத்திரன் மற்றும் விசுமாபுத்திரன், கனகாதேவி, புஸ்பதேவி, பூபாலேந்திரன் (பிரான்ஸ்), பத்மாதேவி, பாலபுத்திரன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்மலை,
இளவாலை. (94640)

தகவல்:
குடும்பத்தினர்.

# வாகனவரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இவ்வருடத்திற்கான வாகன வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 700 பேர் வாகன வரி செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரி-207)

# ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் சொத்துக்கள் திருட்டு

ஒட்டுசுட்டான், பெப்.6

ஒட்டிசுட்டான் பகுதியில் கால்நடைகள் கடத்தப்பட்டு வருவதாகவும் வீட்டுத் தளபாடங்கள் உட்பட இடம்பெயர்ந்த மக்களின் சொத்துக்கள் யாவும் சூறையாடப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று தமது வீடுகளைப் பார்வையிட்டு வந்தவர்கள் தெரிவித்தனர்.

கூரை ஓடுகள், யன்னல் கதவுகள், கிறில்கள், கதவுகள் போன்றவைகள் லொறிகளில் கடத்தப்படுவதாகவும் கால்நடைகளைப் பிடித்துக்கடத்துவதாகவும் கூறிய அவர்கள்தாம் அங்கு சென்று தமது சொத்துக்களைப் பெறமுடியாத நிலையில் இருப்பதுடன், வண்ணிப்பகுதியில் வேப்பமரங்கள் தறித்து ஏற்றப்பட்ட அடையாளங்கள் தென்படுவதாகவும் கூறினர். (ரி-341)

## வட இலங்கைச் சங்கீத சபை

நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 163 ஆவது

**ஆராதனை விழா - 2010**

அனுசரணை

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய நிர்வாகம்

காலம்: நிகழும் விரோதி ஆண்டு தை மாதம் 25 ஆம் நாள் (07.02.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை.

இடம்: ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் ஆலய லக்சுமி நாராயண மண்டபம்

தலைவர்: திருமதி அ.வேதநாயகம் (யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்)

(சி/564605)

அ.தற்பரானந்தன்,
செயலாளர்.

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(ஸ்ரான்லி கல்லூரி)

**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் - 2010**

இடம்: கல்லூரி பிரதான மண்டபம்

காலம்: 28.02.2010 ஞாயிறு மு.ப. 10 மணி

தலைவர் திரு.வி.கே.கணபதிப்பிள்ளை அவர்கள்

2010 ஆம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறும்.

சகல பழைய மாணவர்களையும் இக் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.வி.கே.கணபதிப்பிள்ளை, தலைவர். (946441)
திரு.ஏ.ஜெயகுமார், பொருளாளர்.
திரு.சி.சிவதாசன், செயலாளர்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில்: 11.10.1934

முருகன் அடியில்: 07.01.2010

### அமரர் பொன்னையா குமாரசாமி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தில் குலவிளக்காய் ஒளியேற்றிய தெய்வமே
எம்மைவிட்டுச்சென்று மாதம் ஒன்று சென்றதையா
மனம் நொந்து ஏங்குகின்றோம் மாறவில்லை எம் துயரமையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
கயிற்றசிட்டி முருகனையும்
பரமகுருநாதரையும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

'பத்மகிரி',
கைதடி வடக்கு, கைதடி. (94609)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



மலர்வு: 1946.01.15

உதிர்வு: 2010.01.05

### திருமதி கோவிந்து இராசம்மா

அன்பினால் அரவணைத்து
மெய்யறிவால் அறிவூட்டிய தெய்வமே
வெறுமையாய் இருக்கும் இவ் வீட்டில்!
பசுமையான வார்த்தைகளோடு கலந்த - உங்கள்
திருமுகத்தைக் காணத் துடிக்கின்றோமம்மா....

**நன்றி நவிலல்**

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த வேளையில் உடன்வந்து உதவிய இவ்வூர்வாழ் மக்களுக்கும் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு இரங்கற்செய்தியையும் அனுதாபத்தையும் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது அன்புத் தெய்வத்தை உயிர்காக்க அயராது பாடுபட்ட யாழ்.போதனா வைத்தியசாலை 3 ஆம் வார்ட் வைத்தியர்கள், தாதிமார்களுக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு, எமது இல்லத்தில் இன்று (06.02.2010) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டு அரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (94642)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

## முதலாம் ஆண்டு-நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 15.02.1961

திதி: 06.02.2010
அபரபட்ச அட்டமி

மறைவு: 18.01.2009

### திருமதி பாலகௌரி கிருபாகரன்

வெள்ளையுள்ளம் படைத்த எமது அன்பு அக்கா
கொள்ளையடித்துச் சென்றானோ காலன்
உனது இன்னுயிரை
சிரித்த முகத்துடன் வரும் உனதுருவம்
எமதுள்ளத்தில் மறையாதக்கா
மென்மையான உனது இனிய குரல்
இன்னும் காதுகளில் கேட்குதக்கா
நீர் எம்மைப் பிரிந்து ஒருவருடம் சென்றாலும்
உமது திருமுகம் மறையாதக்கா.

இன்று(06.02.2010)சனிக்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (94609)

நி.மு: செல்லத்துரை (சிறாப்பர் வீடு) மாவிட்டபுரம் வீதி, கீரிமலை.
த.மு: எஸ்.ரவீந்திரகுமார் (செல்லத்துரை) சண்டிலிப்பாய் மேற்கு, தொட்டிலடி.
பிரிவால் துயருறும்: எஸ்.வசந்தகுமார் (தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத ஆட்சியை வீழ்த்த ஜே.வி.பி. சளையாது போராடும் எனச் சூளுரை

## நேற்று நாடாளுமன்றில் விஜித ஹேரத் பிரதிக்ஞை



கொழும்பு, பெப். 06

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிமுறைமையையும், இனவாத ஆட்சியையும் ஒழித்துக்கட்டி, இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய ஜனநாயக ஆட்சியொன்றை ஏற்படுத்தும்வரை எந்தச் சவால்களையும் எதிர்கொண்டு தாங்கள் தொடர்ந்தும் போராடப் போகிறார்கள் என ஜே.வி.பியினர் நேற்று நாடாளுமன்றில் சூளுரைத்தனர்.

ஊடகவியலாளர்களைக் கடத்தியோ அல்லது ஊடகங்களுக்கு 'சீல்' வைத்தோ இந்தப் போராட்டத்தைத் தடுக்க முடியாது என்றும் அக்கட்சி தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தே இவ்வாறு பிரதிக்ஞை செய்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பட்டப்பகலில் வீதியால் நடந்து சென்ற பெண்ணிடம் தங்க மாலையைப் பறித்துக்கொண்டு சென்றதுபோல் ஜனாதிபதித் தேர்தலில் அரசு வாக்குகளைக் கண்முன்னே கொள்ளையடித்தது.

தேர்தல் காலத்தில் வன்முறைகளில் ஈடுபட்ட அரசு தேர்தல் முடிந்தும் அதைத் தொடர்கிறது. கோத்தபாய ராஜபக்ஷ தொலைபேசி மூலம் அரசியல்வாதிகளை மிரட்டி வருகின்றார். அவ்வாறு செய்ய அவருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

என்றுமில்லாதவாறு கொலைகள் இடம் பெறுகின்றன. பௌத்த பிக்கு கூட கொலை செய்யப்பட்டுள்ளார். பிரபாகரன் காலத்தில் கூட இந்தமாதிரி அநியாயம் இடம் பெற்றதில்லை. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பின் நாடு செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்லவில்லை.

நாம் கடந்த தேர்தலில் இன ஒற்றுமைக்காக ஜனநாயக ரீதியான ஆட்சியொன்றை உருவாக்கப் பாடுபட்டோம். அந்த வாய்ப்புக் கைநழுவி விட்டது. இருந்தாலும் விடமாட்டோம். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழித்து ஜனநாயக ஆட்சியொன்றைக் கட்டியெழுப்பும்வரை எமது போராட்டம் தொடரும்.

இனவாதத்தைத் தூண்டியே அரசு இத்தேர்தலை நடத்தியது. அதனூடாகவே ஆட்சியைப் பிடித்தது. இது தொடர்பில் நாம் கவலையடைகிறோம். இதன் விளைவை நாம் எதிர்காலத்தில் அனுபவிப்போம்.

நாம் ஒருபோதும் இனவாதத்தை நோக்கி நாட்டைச் செல்ல விடமாட்டோம். இனவாதம் மக்களின் எதிர்பார்ப்பு அல்ல. இதை முறியடிக்கும் எமது போராட்டம் தொடரும். எந்தச் சவால் வந்தாலும் நாம் பின்வாங்கமாட்டோம்.

பயங்கரவாதம் முடிந்த பிறகும் அரசு அவசரகாலச்சட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது. எதிர்க்கட்சியினரை அடக்குவதற்காகவே அரசு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறது.

இந்த அவசரகாலச் சட்டத்தை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். இனி இந்த அவசரகாலச்சட்டம் தேவையில்லை. ஜனநாயகமே தேவை. அதை வெற்றிகொள்ள நாம் தொடர்ந்தும் போராடுவோம். - என்றார். (ஒ-சி)

# தீர்வுக்காகத் தமிழ்க் கூட்டமைப்புடன் பேசுவதற்கு ஜனாதிபதி முன்வரவேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி. சபையில் வற்புறுத்து



கொழும்பு,பெப்.06

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், வடக்கு - கிழக்கு மாகாணங்கள்தமிழ் பேசும் மக்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும் அம்மக்களுக்குத் தனித்துவமான அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியது.

இம்மக்களுக்கு அரசியல் தீர்வுவழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசவேண்டும் என்றும் கூட்டமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி பா.அரியநேத்திரனே இவ்வாறு கூறினார்.

பொதுத் தேர்தலுக்கு முன் அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் நேற்று நாடாளுமன்றில் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு கிழக்கில் வன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

என்னையும், சம்பந்தன் மற்றும் தோமஸ் வில்லியம் ஆகியோரையும் கொலை செய்வதற்கு இரகசியத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று இணையத் தளங்களில் செய்திகள் வெளியிடப்பட் டுள்ளன. அந்த விவரங்களை நான் 'ஹன் ஸார்ட்' பதிவுக்காக சபையில் சமர்ப் பிக்கின்றேன்.

எமக்கு விடுக்கப்பட்டிருக்கும் கொலை மிரட்டல்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். கிழக்கில் தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நடந்து முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் இந்த அரசுக்கு நல்ல செய்தியைக் கூறியுள்ளன. குறிப்பாக வடக்கு - கிழக்கின் தேர்தல் முடிவுகள் அங்குள்ள தமிழ்பேசும் மக்களுக்குத் தனித்துவமான அரசியல் தீர்வு தேவை என் பதையும் அம்மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பூர்வீகத் தாயகம் என் பதையும் எடுத்துக்காட்டியுள்ளன.

வடக்கு - கிழக்கு மக்களின் உண்மையான தலைவர்கள் யார் என்பதை அம்மக்கள் மிகத் தெளிவாக இத்தேர்தல் முடிவுகளின் ஊடாகத் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, இந்த முடிவுகளைச் சீர்தூக்கிப் பார்த்து வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கவேண்டும்.

அத்தோடு பொதுத் தேர்தலுக்கு முன்பாக அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும். இல்லையேல், பொதுத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தல் போல் வன்முறைகள் நிறைந்ததாகவே அமையும்.

அது மாத்திரமன்றி, வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசவேண்டும். - என்றார். (ஒ-சி)



நாடாளுமன்றிலிருந்து...

# பயங்கரவாதம் முற்றாக ஒழிந்துவிட்டது என்றால் தொடர்ந்தும் அவசரகாலச் சட்ட நீடிப்பு எதற்கு?

## நாடாளுமன்றில் லக்ஷ்மன் செனிவிரட்ண எம்.பி. கேள்வி



கொழும்பு, பெப். 06

இந்த நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிந்துவிட்டதென்றால் ஏன் இன்னும் அவசரகாலச் சட்டத்தை அரசு நடை முறைப்படுத்துகின்றது என்று ஐ.தே.கட்சி யின் எம்.பியான லக்ஷமன் செனிவிரட்ண நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப் பினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிந்துவிட்டதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார். அப்படியாயின், ஏன் இந்த நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படு கின்றது?

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் நாட்டில் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றனர்; கொலை செய்யப்படுகின்றனர்; அவர்களின் வீடுகள், கடைகள் தீ வைக்கப்படுகின்றன.

அதேபோல், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது ஆதரவாளர்கள் ஈடுபட முடியாதவாறு மிரட்டப்படுகின்றனர். அரசு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இவ்வாறான வேலைகளைச் செய்கின்றது.

இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசு ஏன் இந்தத் தேர்தல் வன்முறைகளைத் தடுக்கவில்லை? ஒரு குற்றவாளியையேனும் அரசு கண்டு பிடிக்கவில்லை. இந்த அரசால் பௌத்த பிக்குகள் கூடக் கொலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து ஒரு வாரத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதைத் தடுக்க அரசுடன் இருக்கும் பிக்குகள் கூட நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் மௌனமாக இருக்கின்றனர்.

இவ்வாறான அடக்குமுறைகளுக்குத் துணையாக இருக்கும் அவசாரகாலச் சட்டத்திற்கு நாம் ஆதரவு வழங்கமாட்டோம். பயங்கரவாதம் முற்றாக முடிவடைந்தது உண்மையென்றால் எதற்கு இந்த அவசரகாலச் சட்டம்? அரசு இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தேர்தல் வன்முறைகளை உடன் நிறுத்தவேண்டும். - என்றார். (ஒ-சி)

### வாகன விபத்துக்களில் 10பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.6

நாட்டின் பல்வேறு பகுதிகளில் 24மணித்தியால காலப்பகுதியில் ஒரே நாளில் 10பேர் பலியாகியுள்ளனர். பதினைந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அனுராதபுரம் விலச்சி ஓயாமடுவ சந்தியிலும் பெண் ஒருவர் பண்டாரகம பகுதியிலும் வேறு இருவர் திஸ்ஸமஹராம பகுதியிலும் மற்றும் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

### வயலின் வித்துவானின் நினைவு நிகழ்வு

அண்மையில் அமரத்துவம் அடைந்த ஆவரங்கால் வயிலின் வித்துவான் வே.தியாகராஜ சர்மாவின் நினைவு நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் எழுத்தாளர் கோப்பாய் சிவம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் , ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத் தலைவர் வ.ஆறுமுகம், ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவசுப்பிரமணியம், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகத் தலைவர் க.ஞானதேசிகன் ஆகியோரின் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. (ஒ-72)

## அரசியலில் ஈடுபட்ட படையினர் ஓய்வுபெற வேண்டுமானால்

# முதலில் ஜனாதிபதியின் மகன் யோசிதவை கடற்படையிலிருந்து வீட்டுக்கு அனுப்புங்கள்!

## இப்படி வற்புறுத்துகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, பெப்.06

அரசியலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் சேவையிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென்றால், முதலில் பதவி விலக வேண்டியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் கடற்படை அதிகாரியுமான யோசித ராஜபக்ஷவே என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 14 இராணுவ அதிகாரிகள் கட்டாய ஓய்வில் செல்லவேண்டுமென அரசு தீர்மானித்தால் ஜனாதிபதியின் மகன் யோசித ராஜபக்ஷவும் தனது இராஜிநாமாக் கடிதத்தைக் கையளிக்க வேண்டும்.

ஓய்வு பெறுமாறு பலவந்தப்படுத் தப்பட்டுள்ள 14 அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டதற்கான சான்று எதுவுமில்லை. எனினும், கடற்படை அதிகாரியான யோசித அரசியல் பேரணிகளிலும் தீவிர பிரசாரத்திலும் ஈடுபட்டமைக்கான வீடியோ மற்றும் புகைப்படச் சான்றுகள் உள்ளன.

இதனால் அவரே முதலில் ஓய்வு பெற வேண்டும்.

ராஜபக்ஷவுக்கு ஒரு சட்டமும் பிற பொதுமக்களுக்கு வேறு ஒரு சட்டமுமென இருக்க முடியாது.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு உதவிய ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தேடிக் கைது செய்யப்படுகின்றனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதுவரை 35 ஓய்வுபெற்ற அதிகாரிகளைக் கைது செய்துள்ளமையுடன் அவர்களை 30 நாள்களுக்கு எவ்வித காரணமுமின்றித் தடுத்து வைப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அளித்த அனுமதியைப் பயன்படுத்துகின்றனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் [illegible] அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினர் என்ற குற்றச்சாட்டு இவர்களுக்கு எதிராக சுமத்தப்படலாம் - என்றார்.(அ-சி)

### இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கு ஐம்பது சைக்கிள்கள்

நலன்புரி நிலையங்களிலிருந்து வந்து வரணிப் பிரதேசத்தில் தங்கியுள்ள 50மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் வரணி மகா வித்தியாலய பொதுநூல் நிலைய அடிக்கல் நடும் விழாவில் கலந்துகொண்ட ஆளுநர் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவை தீவிரவாத நாடாக அறிவிக்கவேண்டிய அவசியமில்லை

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்ரன், பெப். 06

வடகொரியாவைத் தீவிரவாத நாடாக அறிவிக்கவேண்டிய தேவை இல்லை என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் நாடான வட்கொரியாவை, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், போக்கிரி நாடு எனப் பிரகடனம் செய்திருந்தார். 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கல் என்ற விமான நிறுவனத்தின் விமானத்தை வடகொரியாவின் ஏஜெண்டுகள் குண்டுவைத்துத் தகர்த்தனர். இதில் பயணம் செய்த 115 பேர் பலியாயினர்.

இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டே ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வடகொரியாவைத் தீவிரவாத நாடாக அமெரிக்கா அறிவித்தது. இதையடுத்து, வடகொரியா தன் அணு ஆயுதத் தயாரிப்பைக் கைவிட முன்வந்தது. இதைத் தொடர்ந்து அந்த நாட்டுடன் பேச்சு நடந்தது. இதில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து தீவிரவாத நாடு என்ற பட்டியலிலிருந்து அந்த நாட்டின் பெயர் அமெரிக்காவால் நீக்கப்பட்டது.

புஷ் நிர்வாகமே அந்த நாட்டின் பெயரைத் தீவிரவாத நாடுகள் பட்டியலிலிருந்து நீக்கியது. இந்நிலையில், அந்த நாட்டை மீண்டும் தீவிரவாத நாடுகள் பட்டியலில் சேர்க்கவேண்டும் எனப் பல எம்.பிக்கள் கோரினார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மறுத்துவிட்டார்.

வடகொரியாவைத் தீவிரவாத நாடாக அறிவிக்கவேண்டிய தேவை ஏதும் இல்லை என்று அவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

''ஒரு நாட்டைத் தீவிரவாத நாடாக அறிவிப்பதற்கு என சில சட்டரீதியான அம்சங்கள் உள்ளன. இந்த அம்சங்களின் கீழ் வடகொரியா வரவில்லை. இதனால் அந்த நாட்டைத் தீவிரவாத நாடாக அறிவிக்க இப்போது எந்தத் தேவையும் ஏற்படவில்லை'' என்றும் ஒபாமா சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுபற்றி வெளிவிவகாரத் திணைக்களம் குறிப்பிடுகையில், ''அந்த விமானத் தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு வடகொரியா தீவிரவாதத்தைத் தூண்டி விடும்படியான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை'' என்று தெரிவித்துள்ளது.

# ஆறு தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது; ஆயுதங்கள் மீட்பு

பாகிஸ்தானில் 6 தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து தற்கொலைப் படையினர் பயன்படுத்தும் வெடிகுண்டு அடங்கிய சட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் கிழக்கு மாகாணத்தில் பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அச்சமயம், இவர்களிடம் தற்கொலைப் படையினர் பயன்படுத்தும் வெடிகுண்டுகளுடன் கூடிய சட்டைகள், வெடிப்பொருள்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த காரி பஷீரும், இவருடனிருந்த மற்றும் ஐந்து பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்த பொதிகளிலிருந்து 12 தற்கொலைப் படையினருக்கான சட்டைகள், 28 கையெறி குண்டுகள், ஜிஹாதி அமைப்பினர் வெளியிடும் பிரசுரங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இவர்கள் அனைவரும் பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இவ்விசாரணையின்போது லாகூரிலுள்ள வெளிநாட்டவர்கள் மீது இவர்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது.




# ஈராக்கில் குண்டுத்தாக்குதல் 20 பேர் பலி; 75 பேர் காயம்

பக்தாத், பெப். 06

ஈராக்கில் ஷியாக்களின் புனித நகரான கர்பலாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில் 20 பேர் கொல்லப்பட்டனர். 75 பேர் காயமடைந்தனர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

புனித கர்பலாவில் நேற்று இடம்பெற்ற இறுதி சமய நிகழ்ச்சிகளில் பல்லாயிரக்கணக்கான ஷியா யாத்திரிகர்கள் கலந்து கொண்டார்கள். அச்சமயத்தில் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஷியா யாத்திரிகர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது பாரிய தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதல்களை சுனி முஸ்லிம் தீவிரவாதிகளே நடத்தியுள்ளார்கள் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஷியாக்களின் ஆர் பைன் உட்பட இதர சகல நிகழ்ச்சிகளுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆட்சியில் தடைவிதிக்கப்பட்டிருந்தது. 2003 ஆம் ஆண்டு, அமெரிக்கா ஈராக் மீது படையெடுத்து அவரின் ஆட்சியைக் கவிழ்த்தது.

இதையடுத்து, ஷியாக்களின் சமய வைபவங்கள் மீள இடம்பெற்று வருகின்றன. புனித கர்பலாவில் நிகழும் வைபவங்களில் ஈராக்கிலுள்ள ஷியாக்கள் மட்டும் கலந்துகொள்வதில்லை. ஈரான் உட்பட ஏனைய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரும் பங்குபற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதனின் வாழ்நாளை அதிகரிப்பதற்கு புதிய மாத்திரை தயாரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு

நியூயோர்க், பெப். 05

நூறு ஆண்டுகள் வாழ இனி ஒரு மாத்திரை போதும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். நோய்களைத் தடுக்கும் 3 ஜீன்களைப் பயன்படுத்தி அந்த மாத்திரையைத் தயாரிக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இதுபற்றி நியூயோர்க்கின் அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவக் கல்லூரியில் இயங்கும் வயது தொடர்பான ஆராய்ச்சி மையம் சார்பில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அந்தக் குழுவுக்கு விஞ்ஞானி நிர் பார்ஜிலய் தலைமை வகித்தார். அவர்களது கண்டுபிடிப்பின்படி மனிதனின் வாழ்நாளை கூட்டவும், நோய்களைத் தடுக்கவும் 3 ஜீன்கள் உதவுவது தெரியவந்தது.

அந்த மூன்றில் இரண்டு ஜீன்கள், உடலில் நல்ல கொலஸ்ட்ரோலை உற்பத்தி செய்கின்றன. இதய நோய்கள், பக்கவாதம், மூளை செயல்திறன் மாறுபாடு (அல்சமீர்) ஆகியவற்றை இவை தடுக்கின்றன. 3 ஆவது ஜீன், டயபடீசைத் தடுக்கிறது. ஜெர்மனியில் உள்ள யூதர்களில் 100 வயதைக் கடந்த சிலரிடம் நடந்த மரபணு ஆய்வில் இது தெரியவந்தது.

அந்த ஜீன்களை உடலில் தூண்டுவதற்கான மாத்திரையைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதில் ஏறக்குறைய வெற்றி கிடைத்துள்ளது. இதே ஆராய்ச்சியில் உலகின் பல்வேறு ஆய்வகங்கள் ஈடுபட்டு வருகின்றன என்றும் நிர் பாஜிலய் குறிப்பிட்டுள்ளார். இதய நோய், அல்சமீர், டயபடீஸ் ஆகியவற்றைத் தடுக்கும் ஜீன்களைத் தூண்டும் மாத்திரை பயன்பாட்டுக்கு வந்தால் 'ஒரே மாத்திரை..... ஓஹோன்னு வாழ்க்கை' என்பது உறுதியாகிவிடும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

# அமைதிக்கான நோபல் பரிசு இணையத் தளத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்று இத்தாலி சிபார்சு

லண்டன், பெப்.6

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை இணையத்தளத்திற்கு வழங்க வேண்டும் என இத்தாலிய பத்திரிகை ஒன்றைச் சேர்ந்தோரும், நிபுணர்களும் பரிந்துரை செய்துள்ளனர்.

இத்தாலியின் புகழ்பெற்ற பத்திரிகை 'வெயர்ட் இத்தாலி'. உலக நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்துவதில் இணையம் முக்கிய பங்கு வகிக்கின்றது என்று தெரிவித்துள்ளது. மகத்தான சேவையைப் பாராட்டி இணையத்திற்கு இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கவேண்டும் என்றும் பரிந் துரை செய்துள்ளது.

இதற்காக 'இணையம் பார் பீஸ்' ( சமாதானத்க்கான இணையம்) என்ற தலைப்பில் ஒரு பிரசாரத்தை இந்நிறு வனம் ஆரம்பித்துள்ளது. இதன்படி, உல கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இணையம் ஆற்றிவரும் பங்கு குறித்து பல்வேறு தகவல்கள் எடுத்துரைக்கப்படு மென 'வெயர்ட் இத்தாலி' பத்திரிகையின் ஆசிரியர் லுனா தெரிவித்துள்ளார்.

# 3 பிரபலங்களின் தோற்றத்தில் பார்பி பொம்மைகள் தயாரிப்பு

## மாட்டல் நிறுவனம் திட்டம்

ஹரி பொட்டர் நாவல் ஆசிரியர் ரவுலிங், டென்னிஸ் வீராங்கனை க்ளிஸ்டர்ஸ், சுவீடனின் இளவரசி விக்டோரியா ஆகிய மூவரின் தோற்றத்தில் பார்பி பெ ாம்மைகளைத் தயாரிக்க மாட்டல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து இந்நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோசா ஜீகர்ஸ் குறிப்பிடுகையில்,''4 வயது குழந்தைகள் முதல் 70 வயது முதியவர்கள் வரை ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் ரோல்மொடல் மிகவும் அவசியமாகிறது. அந்த வகையில், சிறந்த ரோல்மொடலாக உள்ள மூவரின் உருவத்தில் பார்பி பொம்மைகளைத் தயாரிக்கவுள்ளோம். இதன் மூலம் பார்பி பொம்மை புகழ் மேலும் உயரும்'' என்றார்.

''26 வயதான கிம் கிளிஸ்டர்ஸ் குழந்தை பெற்றெடுத்த பின்னர், கடந்த ஆண்டு அமெரிக்க ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்று சாதனை படைத்தார். அவரது உருவத்தில் பொம்மை தயாரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். யு.எஸ். ஓபன் போட்டியின்போது அவர் அணிந்திருந்த உடையின் தோற்றத்தில் பொம்மை இருக்கும். அவரது குழந்தை ஜடாவைப் போன்ற சிறிய பொம்மையும் தயாரிக்கப்படும்'' என்றும் அவர் கூறினார்.

''அடுத்ததாக ஹரி பொட்டர் புகழ் ரவுலிங்கின் பொம்மை, அவர் கடந்த ஆண்டு மான்ஸ்ட்ர்ஸ் அன்ட் கிரிட்டிக்ஸ் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது அணிந்திருந்த உடையின் தோற்றத்தில் தயாரிக்கப்படும். சுவீடன் இளவரசி விக்டோரியாவின் தோற்றத்தில் ஒரு பொம்மையும் தயாரிக்கப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மரபணு மாற்றப்பட்ட பன்றியின் நுரையீரல் மனிதனுக்குப் பொருந்தும்

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

லண்டன், பெப். 06

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் நுரையீரல் மனிதனுக்குப் பொருந்தும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலுள்ள செயின்ட் வின்சென்ட் வைத்தியசாலையிலும், ஆல்பிரட் வைத்தியசாலையிலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பன்றி நுரையீரலை மனிதர்களுக்குப் பொருத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதல் சோதனை தோல்வி அடைந்தது.

இதையடுத்து, மனித மரபணு சேர்க்கப்பட்ட புதிய பன்றியை உருவாக்கி வளர்த்தனர். மரபணு மாற்றப்பட்ட பன்றியின் நுரையீரலை அகற்றி கருவியில் பொருத்தி ஆல்பிரட் வைத்தியசாலையில் மீள் சோதனை நடத்தப்பட்டது.

''இச்சோதனையில் மனித உடலுக்கு வெளியே மனித இரத்தத்தை சுத்தப்படுத்தும் பணியை பன்றியின் நுரையீரல் சிறப்பாக நிறைவேற்றியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது'' என இந்த வைத்தியசாலை டாக்டர் கிளென் வெஸ்டால் தெரிவித்துள்ளார்.

''இன்னும் சில சிக்கல்கள் உள்ளன. அவற்றுக்கும் தீர்வு கண்டுபிடிக்கப்பட்டால், மனித உடலில் பன்றி நுரையீரலை வெற்றிகரமாகப் பொருத்தி இயக்கலாம்'' என்றும் டாக்டர் கிளென் வெஸ்டால் குறிப்பிட்டுள்ளார்.

# தீவிரவாதத்தில் ஈடுபட்டால் அமெரிக்கரும் கொல்லப்படுவர்

## உளவுத்துறை இயக்குநர் எச்சரிக்கை

வாஷிங்ரன், பெப். 06

அமெரிக்கக் குடிமக்கள் வெளிநாடுகளில் தீவிரவாதத்தில் ஈடுபட்டால், அவர்களை அமெரிக்க இராணுவத்தினரோ, இராணுவத்தின் ஏஜெண்டுகளோ தாக்கி அழிப்பார்கள் என அமெரிக்க உளவுத்துறை இயக்குநர் டென்னிஸ் சி பிளேர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''உளவாளிகளிலுள்ள தீவிரவாதிகளுக்கு எதிராக நாங்கள் நேரடி நடவடிக்கை எடுப்போம். இதில் அழிக்க வேண்டிய நபர் அமெரிக்கராக இருந்தாலும் நாங்கள் தயங்கமாட்டோம்'' என்றும் டென்னிஸ் சி பிளேர் அறிவித்துள்ளார்.

''இதற்கான அனுமதியை நாங்கள் பெற்றிருக்கிறோம். அமெரிக்கர்கள் சுதந்திரமாகப் பேசலாம். அவர்கள் அமெரிக்காவுக்கு ஆபத்து ஏற்படும் செயல்களில் ஈடுபட்டால் அவர்களைத் தாக்கி அழிப்போம்'' என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









டாக்டர் செ.கண்ணதாசன் இயற்றி பொன்னாலை சந்திர பரத கலாலயத்தினரால் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வெளியீடு செய்யப்பட்ட நர்த்தன கீதங்கள் நூல் வெளியீட்டு விழாவில், நூலாசிரியருடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் முதல் பிரதியை நூலாசிரியரின் பெற்றோர் பெறுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம்.

நடன விரிவுரையாளர் சாந்தினி சிவநேசன், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாம் வரிசைப் படங்களில் காணலாம்.

*(படம்: விற்ரோறி)*

### புரட்சிச் சதிக் குற்றச்சாட்டில் கைதாகியுள்ள

# ஓய்வுபெற்ற 8 இராணுவ அதிகாரிகள் தொடர்பாக அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல்

கொழும்பு, பெப். 06

ஜனாதிபதித் தேர்தலையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் எட்டுப் பேர் தொடர்பில் நேற்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கடந்த 29 ஆம் திகதி இந்த எட்டுப் பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்களுக்கு எதிராக சதிக் குற்றச்சாட்டு சுமத்த எத்தனிக்கப்படுவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இந்த எட்டு இராணுவ அதிகாரிகளும் தேர்தலை ஒட்டி அதில் போட்டியிட்ட எதிரணியின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகா வுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான பணிக்கு ஒத்துழைக்கத் தாமாக முன்வந்தனர் என்றும்-

அவர்களை அதிகாரிகள் கைதுசெய்து குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஓர் அறையில் தடுத்து வைத்துள்ளனர் என்றும் -

மேற்படி அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி இன்று ரஷ்யா பயணம்

கொழும்பு,பெப்.6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை ரஷ்யா பயணமாகிறார். மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யா செல்லும் மஹிந்த எதிர்வரும் 9 ஆம் திகதி நாடு திரும்புவார் - என்று அரச ஊடகத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதியை எதிர்வரும் 8 ஆம் திகதி சந்திப்பார் என்றும் அரச ஊடகத் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

# கோத்தபாய மரண அச்சுறுத்தல் விடுத்ததாக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ முறைப்பாடு

### பொலிஸ் மா அதிபரிடம் பதிவு செய்தார்

கொழும்பு, பெப். 06

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தமக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை குறித்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 9.21 அளவில் 0773501626 என்ற கோத்தபாயவின் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என அவர் கூறியுள்ளார்.

நீண்ட நாள்களுக்கு பின்னர் தன்னை தொடர்புகொண்ட கோத்தபாய, கடுமையான தொனியில் பேசியதுடன், லங்கா பத்திரிகை அலுவலகத்தை எரியூட்ட போகிறார் எனவும் எச்சரித்தார். நீ அதிகம் பேசுகிறாய். நீ வெளிநாட்டுக்குச் சென்று மறைந்திருந்தவர் எனக் கூறினார் என்று சோமவன்ஸ தெரிவித்துள்ளார்.

நான் மாத்திரமல்ல நீங்களும் கடந்த காலத்தில் வெளிநாட்டில் சென்று மறைந்திருந்தவர் என்று, தான் நினைவூட்டினார் என்றும் சோமவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து கோத்தபாய தன்னைக் கடுமையாகச் சாடியதுடன், "ஏய் நாயே பொறுத்திருந்து பார், உன்னை நான் கொலை செய்வேன், உனக்கு விரைவில் முடிவுகட்டுவேன்'' என கோத்தபாய தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனவும் தனது முறைப்பாட்டில் சோம வன்ஸ தெரிவித்துள்ளார்.

# உயர்நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பில் திஸநாயக்காவுக்கு பொது மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி மஹிந்தா

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் அண்மையில் அரசுப் பக்கம் தாவியவருமான எஸ்.பி.திஸநாயக்காவுக்கு முன்னர் வழங்கப்பட்ட சிறைத் தண்டனை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். அத்துடன் அவரை உடுநுவரப் பகுதிக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளராகவும் நியமித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட எஸ்.பி. திஸநாயக்காவுக்கே ஜனாதிபதி தற்போது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலப் பகுதியிலேயே உயர் நீதிமன்றம் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கியிருந்தது. ஹபராதுவவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவ்வேளை ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சராக இருந்த எஸ்.பி. திஸநாயக்கா உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எனினும், சிறைத்தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சென்ற எஸ்.பி.திஸாநாயக்கா எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடப் போகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத்தினால் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதன் காரணமாக அத்திகதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு சிவில் உரிமைகளை இழக்கக்கூடிய நெருக்கடியிலிருந்து தற்போது எஸ்.பி.திஸாநாயக்காவை இந்தப் பொது மன்னிப்புப் பிரகடனம் முற்றாக விடுவித்திருக்கின்றது என நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சாவகச்சேரி முஹைதீன் பள்ளிவாசல் ஜும்மா தொழுகையுடன் திறப்பு

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சாவகச்சேரி முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் புனரமைக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையுடன் ஆரம்பமானது.

கண்டி, நுவரேலியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களால் பள்ளிவாசல் கட்டடம் புனரமைக்கப்பட்டு நேற்று ஜும்மா தொழுகையோடு திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்த எட்டுப் பள்ளிவாசல்களும் மௌலவிகளினால் இரு வசிப்பிடங்களும் முஸ்லிம் பிரமுகர்களால் புனரமைத்துக் கொடுக்கவுள்ளன என்றும் அந்த வகையில் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பள்ளிவாசல்கள் புனரமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# சிறுவர்களை ஆயுதக்குழுவில் சேர்க்கிறாரென இனியபாரதி மீது ஐ.நா. அதிகாரி குற்றச்சாட்டு

### பாதுகாப்புச் சபையில் அறிக்கை சமர்ப்பித்தார்

அம்பாறையில் கருணா குழுவின் முக்கிய தளபதி இனியபாரதி சிறுவர்களை தனது ஆயுதக்குழுவில் சேர்த்துவருகிறார் என ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் விவகார அதிகாரி, பாதுகாப்புச் சபையின் உப குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை அரசு இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்துகொள்ளுமாறும் அவர் பாதுகாப்பு சபையின் உப குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் மற்றும் ஆயுதப்பிணக்குத் தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி மேஜர் ஜெனரல் பற்றிக், இரண்டு மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு முழுமையான அறிக்கை ஒன்றைத் தயார் செய்து ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உபகுழுவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மட்டக்களப்பில் நான் தங்கியிருந்த காலப்பகுதியில் அம்பாறைப் பிரதேசத்தில் கருணா குழுவினரின் தளபதியான இனியபாரதி என்பவர் ஆயுதக்குழுவுக்கு சிறுவர்களை ஆட்சேர்க்கிறார் என கேள்விப்பட்டேன். அவ்வாறு அவரது ஆயுதக் குழுவில் சேர்க்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டு, உளநல மற்றும் புனர்வாழ்வு பயிற்சியளிக்கப்பட்டுவரும் பல சிறுவர்கள், மீண்டும் தாம் அம்பாறைக்கு சென்றால் தாங்கள் இனியபாரதியால் மீண்டும் ஆயுதக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படலாம் என்று என்னிடம் அச்சம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக [illegible] உள்ள கருணாவை கொழும்பில் சந்தித்தபோது கேட்டேன். தனது தளபதி இனியபாரதி சிறுவர்களை ஆயுதக்குழுவில் இணைத்துக்கொள்வது தனக்குத் தெரியும் என்றும் அதனை நிறுத்தும்படி இனியபாரதிக்கு, தான் கடுமையாக உத்தரவிட்டுள்ளதாகவும் கருணா என்னிடம் கூறினார்.

இதுதொடர்பாக இலங்கையின் நீதி அமைச்சரைச் சந்திக்கும்போது பேசினேன். இனியபாரதி உடனடியாக சிறுவர்களை ஆயுதக்குழுவுக்கு இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை நிறுத்தாவிடின், அது இலங்கை தொடர்பான ஐ.நாவின் பொறுமையற்ற போக்குக்கு வழிவகுக்கும் என்று அவரிடம் கூறினேன். சிறுவர்களை ஆயுதக்குழுவுக்கு இணைத்துக் கொள்ளும் இந்த நடவடிக்கை நிறுத்தப்படுவது கண்[illegible]வேண்டும் -என்றுள்ளது.

## சமூக சேவையாளர் சிவபாலன் காலமானார்



யாழ்ப்பாணம், பெப்.6

நீர்வேலியைச் சேர்ந்த சமூக சேவையாளரான கார்த்திகேசு சிவபாலன் கடந்த புதன்கிழமை காலமானார். பல்வேறு பொதுப் பணிகளில் ஈடுபட்டு பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரான இவர் வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் ஆகியவற்றின் தலைவராகவும் நீர்வேலி கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையின் செயலாளராகவும் வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபையின் கௌரவஉறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார். அமரர் சிவபாலன் சமாதான நீதிவானும் ஆவார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகாலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஜே.வி.பியும் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

இருப்பினும், அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விஜித ஹேரத் நேற்று சபையில் உரையாற்றும்போது கூறியிருந்தார். (அ-சி)

## நல்லிணக்கத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகக் கப்பலொன்று இலங்கைத் துறைமுகத்துக்கு 1789ஆம் ஆண்டே முதன் முதலில் வந்தது.

**மோதல்களினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுங்கள்**

இலங்கை மக்களுடனான நீண்ட கால நட்புறவை அமெரிக்கா கொண்டாடுவதுடன் எதிர்வரும் ஆண்டு முழுவதும் அமைதியும் செழிப்பும் நிலவும் என எதிர்பார்க்கிறது. மோதல்கள் காரணமாக ஏற்பட்ட காயங்களை ஆற்றி அனைவருக்கும் சமத்துவத்தையும் சம சந்தர்ப்பத்தையும் வழங்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பமொன்று யுத்தம்முடிவுக்கு வந்துள்ளதால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு சந்ததிக்குப் பின்னால் இலங்கை முதற்றடவையாகப் பயங்கரவாதத்தின் நிழலின் கீழ் காணப்படாத சூழ்நிலை நிலவுகின்றது.

சகிப்புத்தன்மை, மனித உரிமைகளுக்கு மதிப்பு, சட்டத்தின் ஆட்சி, ஊடக சுதந்திரம் போன்ற தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியமான அனைத்து விடயங்களும் ஆழமாக வேரூன்றிய நாட்டில் வாழ வேண்டுமென்ற அனைத்து இலங்கையர்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களை ஒன்றிணைப்பதற்குமான தலைமைத்துவத்தை வழங்குவதற்கான இந்தச் சந்தர்ப்பத்தை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். - எனத் தெரிவித்துள்ளார் ஒபாமா. (அ-சி)

NEW SCIENCE CENTRE
வேலிங்டன் சந்தி அருகில் - யாழ்.நகர்
அயன் சமநிலை
Sat, Sun > 12.45-2.00
INORGANIC
Sat, Sun > 2.00-3.00
GENERAL CHEMISTRY
Sat, Sun > 11.45-12.45
ORGANIC
Sat, Sun > 4.30-5.30
BY: அன்பு

S.L.A.S போட்டிப் பரீட்சைக் கருத்தரங்கு
20, 21ஆம் திகதி
பதிவுகள் முற்கூட்டியே
நடைபெறவுள்ள
போட்டிப்பரீட்சைக் கருத்தரங்கு
4 வருடங்களின் பின் யாழ். மண்ணில்
P.உமாசங்கர்
10.02.2010-9மணி-4மணி வரை (புதன்)
இடம்: UNIVERSAL கந்தர்மடம்
கையேடுகள் வழங்கப்படும்

## பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ள ஊடகத் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ரஷ்ய பாணியிலான சதிப்புரட்சியொன்றுக்கு ஜெனரல் பொன்சேகா திட்டமிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது சகோதரர்களையும் கொல்லும் நடவடிக்கைக்காக ஒவ்வொரு அரச கூட்டுத்தாபனத்திலும் 'பொல்ஷ்விக்' பாணியிலான குழுக்களை அமைக்க பொன்சேகா திட்டமிட்டிருந்தார்.

இது தொடர்பாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலரை அரசு ஏற்கனவே கைது செய்துள்ளது - என்றார்.

(அ-சி)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களித்தனர். அதற்கான சந்தர்ப்பத்தை எம்மால் ஏற்படுத்திக் கொடுக்க முடிந்தது.

**நாடாளுமன்றத் தேர்தலிலும் நல்ல சூழ்நிலையை உருவாக்குவோம்**

அதேபோல் விரைவில் இடம்பெறப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் நல்லதொரு சூழலை உருவாக்குவது எமது கடமை. அதை நாம் நிச்சயம் செய்வோம்.

இதற்கெல்லாம் அவசரகாலச் சட்டம் இடங்கொடுக்கும். மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடங்கொடுக்காத வகையில் நாம் செயற்பட வேண்டும். அவசரகாலச்சட்டத்தை நாம் அதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள வன்னி அகதிகளை நாம் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி வருகின்றோம். இந்த வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் இந்த நடவடிக்கையை நாம் முடிவுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டோம். ஆனால், கண்ணிவெடிகள் அகற்றலில் ஏற்பட்ட தாமதத்தால் மீள் குடியேற்றமும் தாமதமடைந்துள்ளது.

இருப்பினும், நாம் இது தொடர்பில் அதி தீவிரமாகச் செயற்பட்டுள்ளோம். நாம் கண்ணி வெடிகளை மாத்திரமின்றி புலிகளால் புதைக்கப்பட்ட மர்மங்களையும் கண்டுபிடித்து வருகின்றோம். எமது படையினர் இன்னும் வன்னியில் ஆயுதங்களைக் கண்டெடுத்து வருகின்றனர்.

நாம் எல்லா நேரங்களிலும் சரியானவற்றையே செய்து வருகிறோம். சிலரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும், சிலரை வியப்படையச் செய்வதற்காகவும் நாம் எதையும் செய்யக்கூடாது - என்றார்.(அ-சி)

பராமரிப்பாளர் தேவை
பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு வலது கையும் காலும் இயங்க முடியாத நிலையிலுள்ள ஒருவருக்கு வீட்டுக்கு வந்து பயிற்சியளிக்கக்கூடிய Physiotherapy ஒருவர் உடன் தேவை. கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு தொ.பே.இல:-
(92264) 0213215405/0776309878

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகளை ஆரம்பித்துள்ளது. இதன் பகுதியாக எமது கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் பத்தாம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. - என அஸாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

அரச உயர்மட்டத் தலைவர்களுடன் தேர்தல் தொடர்பான மிக முக்கிய விடயங்கள் குறித்துத் தாங்கள்ஆராயவுள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர், இன்று இடம்பெறவுள்ள கட்சியின் உயர்மட்டக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்தும் தாங்கள் அரச தரப்பிற்குத் தெரியப்படுத்தவுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்போவதில்லை. இந்த நாட்டில் அவ்வாறான தவறான விடயங்களெதுவும் நடைபெறவில்லை. நான் அவ்வாறான எத்தகைய விசாரணைகளுக்கும் அனுமதிக்கப் போவதில்லை. இந்நாட்டு மக்களுக்கும் அது தேவையில்லை. இந்த நாட்டுக்கும் அது தேவையில்லை.

எந்த விசாரணையைப் பற்றியும் எந்தக் கேள்விகளையும் என்னிடம் கேட்க வேண்டாம். அவ்வாறான எந்த விசாரணைக்கும் இங்கு இடமில்லை. நான் அதனை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில் இதனை நான் கூறுகிறேன். இது தான் எனது இறுதி முடிவாகும். எத்தகைய விசாரணைகளுக்கும் இங்கு இடம் இல்லை.

**புலிகள் தங்களை மீள ஒருங்கமைக்க முடியாது**

புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள். எந்தவொரு அமைப்பும் தங்களை மீள ஒருங்கமைத்துக் கொள்ள முடியும். ஆனால் இவர்களால் மீள ஒருங்கமைத்துக் கொள்ள முடியாது என்பதனை நான் உறுதிப்படுத்துகிறேன்.

எதிர்க்கட்சி வேட்பாளரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகாவை நாங்கள் ஒரு போதும் கைது செய்ய முயற்சிக்கவில்லை - என்றார்.

**பொன்சேகாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை**

சரத் பொன்சேகாவை நீங்கள் ஒருபோதும் கைது செய்யப்போவதில்லையா என்று கேட்டதற்கு அவர் அளித்த பதில் வருமாறு -

கைது என்பது வேறு விடயம். அவர் பல தவறுகளை விட்டிருக்கிறார். அவர் பாதுகாப்பு கவுன்ஸிலின் உறுப்பினர். மூன்று மாதத்திற்கு முதல்தான் அவர் அதிலிருந்து விலகினார். ஆனால் அவர் சில பாதுகாப்பு இரகசியங்களை பகிரங்கப்படுத்தி இருக்கிறார். அவர் அதில் பிழை விட்டிருக்கிறார். நான் தவறான உத்தரவுகளைப் பிறப்பித்தேன் என அவர் என் மீது குற்றம்சாட்டியிருக்கிறார். அது பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

பகிரங்கக் கூட்டங்களில் அவர் அவ்வாறு பேசியிருக்கிறார். அவை எல்லாம் தவறான விடயங்கள். இங்கு சட்ட முறைமை இருக்கிறது. அதன்கீழ் அவரக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அவர் வெறுமனே எதிர்க்கட்சி வேட்பாளர் என்பதற்காகக் கைது செய்யப் போவதில்லை - என்றார்.

## யாழ்.- காங்கேசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை கொழும்பில் நேற்று நேரில் சந்தித்த இந்துமாமன்றத்தின் தூதுக்குழுவினர் மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக இந்து மாமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் பிரதான வீதியை அகலப்படுத்தி விஸ்தரிக்கும் திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவும், இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் நிலையிலிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த விஸ்தரிப்புத் திட்டத்தின்படி இந்தப் பிரதான வீதியிலுள்ள 27இந்து ஆலயங்களும், பழம்பெரும் கலாசார நினைவுச் சின்னங்களும் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதை அறிந்து யாழ்.இந்து மக்களும், இந்து நிறுவனங்களும் அதிர்ச்சியடைந்த நிலையில், இது விடயமாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உடனடிக் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மேற்படி வீதி விஸ்தரிப்புத் திட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள நிபுணர்களிடம் பெறுமதியான மாற்றுத் திட்டங்கள் இருப்பதை அறிவதாகவும், அத்தகைய மாற்றுத் திட்டங்களைப் பாவித்து உத்தேச வீதி விஸ்தரிப்புத் திட்டத்தை மாற்றியமைத்து யாழ்.மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும்படியும் அந்த மகஜர் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், யாழ்.பல்கலைக்கழக சமூகத்துடனும், யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரமுகர்களுடன் கலந்தாலோசித்து இது வியத்தில் நல்ல முடிவு எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.

இந்துமாமன்றப்பிரதிநிதிகள் குழுவினர் ஆளுநரைச் சந்தித்த போது திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகளைத் துரிதப்படுத்துமாறும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் திருப்பணி வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடம் அமைப்பதற்கும், மாணவர்களுக்குப் போதிய விடுதி வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் இந்திய அரசாங்கத்தின் உதவியைப்பெற்றுத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்படியும், இடம் பெயர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலும் உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்து மாமன்றத் தலைவரும், ஆலய அறங்காவலர் சபையின் தலைவருமான வி.கயிலாயபிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் பொருளாளர் திருமதி அ.கயிலாயபிள்ளை ஆகியோர் கொண்ட குழுவே ஆளுநரை அவரது கொழும்பு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது.

பல்கலைக்கழக அனுமதிப்படிவம்
விற்பனையாகிறது
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் யாழ். பிரதேச விற்பனை
முகவர்: துர்க்கா ஸ்ரேஷனஸ்
பஸ்நிலையம், சுன்னாகம்.
(சி/564648) 021 224 0267

N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ் றோட், இணுவில்
A/L 2012
வர்த்தகப்பிரிவு
ECO:- K.பிரதீபன்BBA (Sat, Sun 4-5pm)
ACC:- N.சதீஸ்BBA (Sat, Sun 3-4pm)
B.ST:- K.பாலசுபேஸ் (Sat, Sun 5-6pm)
A/L 2011, A/L 2010
பிரிவுகளும் நடைபெறுகின்றன

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/

புலமைப்பரிசில்-2010
பயிற்சிப்பரீட்சை - 04இல்
★ உ.விதுஷன் - 177 (யோன் பொஸ்கோ)
★ ர.துஷானி - 169 (யோன் பொஸ்கோ)
★ ச.வைஷாலினி - 166 (யோன் பொஸ்கோ)
அடுத்த பரீட்சை - 05
06.02.2010 (இன்று)
வெளி மாணவர்கள் எந் நேரத்திலும் பரீட்சைக்குத் தோற்றலாம்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ் நகர்

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
2009ஆம் ஆண்டு யூன்-டிசம்பர் காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு லண்டன் Student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

✱ யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக்கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணிவகிக்கும் ஒரே நிறுவனம்.
✱ பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
✱ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
✱ சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் விசா சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.
அனைத்து விவரங்களுக்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00மணி முதல் மாலை 7.00மணிவரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகிறோம்.
021 222 3818
021 567 3818
077 452 8818
தொடர்புகளுக்கு
இல: 148, கோயில் வீதி, (புனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible] ஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org